2013, February 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

சட்டத்தரணிகள் போராட்டத்தை ஏன் நிறுத்தினார்கள்?

கொழும்பு, புதுடில்லி, தமிழ்நாடு தமிழர்களுக்கு செய்வது என்ன?

சர்வதேச நெருக்குதல் மாத்திரம் போதுமானதல்ல


தேர்தல் களமாகும் தெற்காசியா

மாலியில் இராணுவ தலையீடு மாத்திரம் பயன்தராது

ஒபாமாவின் அடுத்த நான்கு வருடங்கள்

## விஸ்வரூப வில்லங்கம்

### கமல் அரசியலுக்கு வருவதற்கு போடப்பட்ட விதை ?




| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாரத்தில்
இருப்பவர்களுடன்
சௌகரியமான உறவு
முறையைக்
கொண்டிருப்பவர்கள்
என்றும்
அதிகாரத்தில்
உள்ளவர்களுடன்
இயல்பாகவே
பகைமையான
உறவுமுறையைக்
கொண்டிருப்பவர்கள்
என்றும் உலகம்
இரு முகாம்களாகப்
பிரிந்திருக்கிறது
என்று சில
சந்தர்ப்பங்களில் நான்
நினைக்கிறேன்.

அருந்ததி ரோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


விருந்தினர் பக்கம் 09

சட்டத்தரணிகள் ஏன்
போராட்டத்தை நிறுத்தினார்கள்? 12
பேராசிரியர் சுமணசிறி லியனகே

சர்வதேச நெருக்குதல்
மாத்திரம் போதுமானதல்ல 16
கலாநிதி ஜெஹான் பெரேரா

கொழும்பு, டில்லி, தமிழ்நாடு
தமிழர்களுக்கு செய்வது என்ன? 19
குசல் பெரேரா

தேர்தல் களமாகும் தெற்காசியா 24
என்.சத்தியமூர்த்தி

மாலியில் இராணுவத் தலையீடு
மாத்திரம் போதுமானதல்ல 29
கொபி அனான்

ஒபாமாவின் அடுத்த
நான்கு வருடங்கள் 32

விஸ்வரூப வில்லங்கம் 36
எம்.காசிநாதன்

மேதாவியின் மின்னஞ்சல் 44

டில்லி டயறி 48
எம்.பி.வித்தியாதரன்

தமிழ் சினிமாவில் மரணித்துவரும்
கதாநாயகத்தனம் 57

புதிய கிரிக்கெட் தெரிவுக்குழு
சாதிக்கப்போவது என்ன? 60
ரி.எஸ்.கணேசன்

கடைசி பக்கம் 64
ஜின்னா ஷரிபுத்தீன்





19


36


48



*Samakalam focuses on issues that affect the lives of people of*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2013, பெப்ரவரி 01-15


32


12


24


29



57


60


64

*Sri Lanka, the neighbourhood and the world*

## ஆசிரியரிடமிருந்து...

# சர்வதேச சமூகம்

இலங்கை விவகாரங்களில் சர்வதேச சமூகம் தெரிவிக்கின்ற கருத்துகள் அக்கறைகள் என்று வர்ணிக்கப்படுகின்றனவோ அல்லது தலையீடுகள் என்று குறைகூறப்படுகின்றனவோ அது வேறு விடயம். ஆனால், அவை எந்த வடிவில் வந்தாலும் தடுக்கக்கூடிய ஆற்றல் இலங்கையின் அரசியல் சமுதாயத்தின் எந்தப் பிரிவினருக்குமே கிடையாது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் வெளிக்காட்டிய அக்கறைகளையோ தலையீடுகளையோ உள்நாட்டில் கடும்போக்குச் சிங்களத் தேசியவாத சக்திகளின் ஆதரவைத் தமது பக்கமே நிலைநிறுத்துவதற்கான ஒரு காரணியாக பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அதனால், பாரதூரமான ஆபத்து ஒன்று வரும்வரை அதை தங்களுக்குச் வசதியான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத் தலைவர்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். ஆபத்து ஒன்று நெருங்கும் போது கூட, தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகளுடன் இணக்கமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான ஆற்றலையும்கூட அவர்களால் ஆட்சியாளர்கள் என்ற வகையில் வரவழைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதற்கு முன்னுதாரணங்கள் பெருவாரி.

ஆனால், இந்த சர்வதேச சமூகத் தலையீடு அல்லது அக்கறை என்ற விடயத்தைப் பொறுத்தவரை இலங்கையில் தமிழர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதாக உரிமை கோரிக்கொள்கிற அரசியல் சக்திகள் சிந்தனைத் தெளிவான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கக்கூடிய வலுவான நிலையில் இன்று இல்லை. உள்நாட்டில் முனைப்புடனான அரசியல் செயன்முறைகளை துணிவாற்றலுடன் முன்னெடுக்க அவர்களால் இயலாமல் இருக்கும் காரணத்தைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிற போதிலும் அவர்கள் தங்களால் சாத்தியமாகக் கூடிய எல்லைகளுக்குள் குறைந்தபட்ச அரசியல் செயற்பாடுகளையேனும் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்காமல் சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் மீது செலுத்தக்கூடிய நெருக்குதல்கள் என்ற கானல் நீரை மாத்திரம் காட்டிக் கொண்டு அரசியல் செய்வது பெரும் வேதனை அளிக்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கம் அதன் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கும் தமிழர் தரப்பு தமிழ் மக்கள் மத்தியில் தங்களுக்கு ஒரு நம்பகத்தன்மையைக் கற்பிதம் செய்வதற்கும் சர்வதேச சமூகத்தை ஒரு காரணியாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்ற நிலைவரத்தின் விசித்திரத்தன்மையை இனவேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையின் சகல பிரிவு மக்களும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## றிசானா விவகாரம்

'றிசானாவுக்கு நேர்ந்த கதிக்கு உண்மையில் யார் பொறுப்பு?' என்ற தலைப்பில் 2013 ஜனவரி 16-30 சமகாலம் இதழில் வெளியான ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையை நோக்கும்போது சவூதி அரேபியாவில் றிசானாவுக்கு சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கும் கூட இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியின் கீழான நிருவாகமே பொறுப்பு என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. இலங்கை இன்று எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் சகலருக்குமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையே அடிப்படையில் காரணமாக இருக்கிறது என்பதை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் தொனித்தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

கே.வேலாயுதம், உடுத்துறை, வடமராட்சி

## குமார்டேவிட்டின் தத்துவப்பின்னணி

குமார் டேவிட் சமகாலத்தில் தொடர்ச்சியாக எழுதிவருகின்ற அரசியல் கட்டுரைகளை தவறாது படித்துவருபவன் நான். அவருடைய பெரும்பாலான கருத்துகளுடன் என்னால் ஒத்துப்போகக் கூடியதாக இருக்கின்ற போதிலும், இலங்கைச் சமூகத்தின் குட்டிபூர்ஷுவா அதுவும் குறிப்பாக, சிங்கள பௌத்த குட்டி பூர்ஷுவா வர்க்கத்தினர்தான் நாட்டின் பிரதானமான சக்திகள் என்றவகையில் தொனிக்கக்கூடியதாக அமைந்திருக்கும் பகுதிகள் அவருக்கு இருக்கக்கூடிய சிந்தனைக் குழப்பத்தை அம்பலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயம். குட்டி பூர்ஷுவாக்களை முதன்மைப்படுத்துகின்ற அரசியல் சித்தாந்தப் பின்னணியைக் கொண்டவராக குமார்டேவிட் இருப்பது தான் அவருடைய பெரிய சிந்தனை பலவீனம் என்று கருதுகிறேன்.

கே.மோகனதாஸ், மவுண்ட் லவினியா

## இந்திய விவகாரங்கள்

சமகாலத்தில் கிரமமாக வெளிவருகின்ற சென்னை மெயில், டில்லிடயறி போன்ற சிறப்பு அம்சங்கள் நல்ல பல தகவல்களைத் தருகின்றன. ஆனால், அவை இடைக்கிடை அல்ல அடிக்கடி நீண்ட கட்டுரைகளாக அமைவது ஒரு குறைபாடு என்று நான் கருதுகிறேன். முத்தையா காசிநாதனும் எம்.பி.வித்தியாதரனும் விடயங்களைச் சுருக்கமாகத் தந்தால் பயனுடையதாக இருக்கும்.

வடிவேல் குமரேசன், தலவாக்கலை

## தேசிய வாதியின் சுபாவம்

சமகாலம் சஞ்சிகையின் 14ஆவது இதழ் பிரபல பிரிட்டன் எழுத்தாளரான ஜோர்ஜ் ஓர்வெல்லின் வாசகத்துடன் வெளிவந்திருக்கிறது. 'தேசியவாதி என்பவன் தனது தரப்பினால் இழைக்கப்படுகின்ற அட்டூழியங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்பது மாத்திரமல்ல, அந்த அட்டூழியங்களைப் பற்றிக் கேள்விப்படாமல் இருப்பதற்கும் தனிச்சிறப்புமிக்க ஆற்றலைக் கொண்டவனாக இருக்கிறான்' என்பதே அந்த வாசகம்.

ஸ்பானிய சிவில் யுத்தம், இரண்டாம் உலகப் போர் அனுபவங்களைக் கொண்ட ஆங்கில நாவலாசிரியரும் ஊடகவியலாளருமான ஓர்வெல்லின் படைப்புகளில் சமூக அநீதி தொடர்பான விழிப்புணர்வு, சர்வாதிகாரத்துக்கு எதிரான நிலைப்பாடுகள் மற்றும் ஜனநாயக சோசலிசம் பற்றிய நம்பிக்கை என்பன வலியுறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு ஆற்றல் மிகுந்த எழுத்தாளரின் மேற்படி வாசகமானது இலங்கையின் இன்றைய நிலைமைக்கு சாலப் பொருந்தும்.

## தனிச்சிறப்பு

அரசியலில் சரி, சமூகவியலில் சரி மிகவும் கனமான (சுமையான) விடயங்களை கர்ச்சிதமாக அணுகி அலசிப்பார்ப்பதும், அதை எளிமையாக எமக்கு உணர்த்த வைப்பதுவும் 'சமகாலம்' சஞ்சிகையின் சிறப்பாக அமைவது அதன் தனிச்சிறப்பாகிறது!!!

முருகேசு சௌந்தர்,
லண்டன்

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்த வகையில், 'போராடாதவர்களிடம் இருந்தே அனைத்து யுத்த பிரசாரமும், அனைத்து உரத்த குரல்களும் பொய்களும் வெறுப்புணர்வுகளும் மாறாமல் வந்து கொண்டிருக்கின்றன.', 'எதை செவிமடுக்கக்கூடாது என்பதை மக்களுக்கு சொல்வதற்கான உரிமையே சுதந்திரம்' எனும் ஜோர்ஜ் ஓர்வெல்லின் மேற்கோள்களும் இலங்கையின் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானதே.

மு.கண்ணதாசன், கொழும்பு -15.

## மரணப்படுக்கை தரிசனங்கள் பற்றி...

சமகாலத்தின் ஜனவரி 16-30 இதழில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் எழுதிய மரணப்படுக்கைத் தரிசனங்கள் கட்டுரையை படித்தேன். பல சுவாரஷ்யமான தகவல்களைத் தந்திருந்தார். மரணம் பற்றிய பயம் எல்லோருக்கும் இருப்பதைப் போலவே பலர் அதுபற்றிய தகவல்களைத் தேடி அறியவும் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இறப்பைப்பற்றியும் இறப்பின் பின்னரான நிலைமை பற்றியும் எத்தனையோ விதமான ஆய்வுகள், விளக்கங்கள், கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் அவற்றில் ஆதாரம் எதுவும் இல்லையாததால் எதையுமே நம்ப மறுக்கிறது மனது. ஆன்மா, மறுபிறப்பு, மறுஜென்மம், சொர்க்கம், நரகம் இவற்றை ஆதாரம் எதுவுமில்லாமலே அநேகர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் போல் நம்ப மறுப்பவர்களும் இருக்கிறார்கள். பிறந்து விட்டோம் இறந்துதானே ஆகவேண்டும், மரணத்துக்கு முகம் கொடுத்துத்தானே ஆக வேண்டும் என்று பலர் பேசிக்கொண்டாலும், உள்ளுக்குள் மரணத்தின் வேதனையை நினைத்து பயந்து கொண்டுதான் இருப்பார்கள்.

பிறப்பதற்கு முன் எமது நிலை என்னவோ இறந்த பின்னும் அதே நிலைதான். இதுதான் யதார்த்தம். மற்றவைகள் எல்லாம் கற்பனை. மரணத்தைப் பற்றிய புரிதலே அதை எதிர்கொள்ள ஒரே வழி. வாழ்வில் இரண்டு விடயங்கள் அந்தரங்கமானவை. ஒன்று நாம் காணும் கனவுகள் மற்றையது எமது மரணம். என்னைப் போல் கனவு காணவோ என்னைப்போல் இறக்கவோ மற்றவருக்கு முடியாது.

டாக்டர் முருகானந்தன் கூட மரணத்திற்குப் பின்னரான வாழ்வு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் கருத்தோடு நானும் உடன்படுகின்றேன். மரணப்படுக்கை தரிசனங்களுக்கு ஆழ்மனத் தாக்கங்கள் தான் காரணம் என்பது என் எண்ணம்.

மரணம் பற்றி சுஜாத்தா 'உயிர் ரகசியத்தில்' இப்படிச் சொல்கிறார் 'மனைவி, மக்கள், பழைய பள்ளி, தெரிந்த பாட்டுக்கள், திறமைகள், கவிதைகள், கடிதங்கள், காதல்கள் எல்லாம் மறந்து போய் சாப்பிடுவது மட்டும் ஞாபகம் இருந்தது. நாளடைவில் சாப்பிடுவதற்காக மட்டுமே ஞாபகம் இருந்தது. நாளடைவில் சாப்பிடுவதற்காக வாயசைப்பதையும் மறந்துவிடுவோம். உயிருடன் இருப்பது என்பது இதுதான். உயிர் என்பது மூச்சுக் காற்றல்ல ஞாபகம் தான்.

ஓஷோ இப்படிச் சொல்கிறார் 'மரணம் கடவுளின் வாசல், ஒளிமிக்க வெறுமை. ஒன்றுமில்லாத வெறுமையில் இருந்து தோன்றிய நாம் அங்கேயே செல்கின்றோம்.'

எம்.கே.முருகானந்தனின் இக்கட்டுரை மூலம் மரணம் பற்றிய பல தெளிவுகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஏ.ஆர்த்திகன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 15
2013, பெப்ரவரி 01 - 15


A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



நாம் வாழுகின்ற உலகம் குறிப்பிடத்தக்களவுக்கு சௌகரியமானதாகவும் முற்றுமுழுதாக துயர் நிறைந்ததாகவும் இருக்கிறது.
- அமார்த்யா சென்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

தமிழ்நாட்டிலிருந்து வெளியேறி இந்தியாவின் மதச்சார்பற்ற வேறு எந்த மாநிலத்தில் வாழ்வது என்பது குறித்து சிந்திக்க ஆரம்பித்தி ருக்கிறேன். காஷ்மீர் தொடக்கம் கேரளா வரை சகல மாநிலங்க ளையும் தேடிப்பார்க்கப் போகிறேன். அத்தகைய மதச்சார்பற்ற மாநிலம் ஒன்று கிடைக்காவிட்டால், வேறு நாட்டுக்கு போவேன். எம்.எவ். ஹூசைன் இந்தியாவைவிட்டு வெளியேறவேண்டியேற் பட்டது. இப்போது ஹாசன் வெளியேற வேண்டியிருக்கிறது. இந்தி யாவைவிட்டு வெளியேறினாலும் கூட, தமிழ்ப்படங்களைத் தொடர்ந்து தயாரிப்பேன். தமிழர்களைத் தொடர்ந்து நேசிப்பேன். எனது கடவுச்சீட்டு மாத்திரம்தான் மாறும்.



கமலஹாசன்

முஸ்லிம்களை சிங்களவர்களிடமி ருந்து தூரவிலக்கி தமிழர்களுடன் நெருக்கமாக்குவதற்கே அவர்க ளுக்கு எதிரான பிரசாரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்படும் பட்சத்தில் வடக்கு மாகாணத் தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதற்கு முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்கு வகை செய்வதே இந்த முஸ்லிம் விரோ தப் பிரசாரத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநல வாய அமைப்பு போன்ற சர்வதேச சக்திகள் வடக்கு, கிழக்கை இணை த்து அதிகாரப் பரவலாக்கல் அல கொன்றை உருவாக்குவதற்கு கங்க ணம் கட்டி நிற்கின்றன.



வண. தம்பர அமில தேரர்

2012 க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியவர் களில் பெருமளவானோர் சிறப்பாகச் சித்தியடைந் திருக்கிறார்கள். சகல மாவட்டங்களிலும் இதுவே நிலைமை. ஆனால், இவர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை மாத்திரமே பல்கலைக்கழகங்க ளுக்கு அனுமதிக்கமுடியும். எஞ்சியோர் உயர்கல் விக்காக தனியார் பல்கலைக்கழகங்களை நாடு வதை ஊக்குவித்து தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுவதற்கு ஆதரவான சூழ்நிலை யொன்றைத் தோற்றுவிக்கும் நோக்குடன்தான் உயர்தரப்பரீட்சையில் பெருமளவானோர் சித்திய டையச் செய்யப்பட்டிருக்கிறார்கள்.



பல்கலைக்கழக மாணவர் சம்மேளன அமைப்பாளர் சஞ்ஜீவ் பண்டார

இலங்கைக்கு எதிராக குறிப்பிட்ட சில சர்வே தச சக்திகள் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற் குக் காரணம் அவர்களால் எம்மை அடி பணிய வைக்க முடியாமற் போனமையே யாகும். சர்வதேச நெருக்குதல்களுக்கு விட்டுக்கொடுக்காமல் தாய்நாட்டைப் பாது காப்பதற்குத் தன்னை முழுமையாக அர்ப்ப ணித்த தலைவர் ஜனாதிபதி ராஜபக்ஷ என் பது சர்வதேச சக்திகளுக்குத் தெரியும். தேசிய அடையாள தனித்துவத்தைப் பாது காப்பதன் மூலம் மக்களின் நம்பிக்கைகளுக் கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்புடையதான தீர்மானங்களை எடுப்பதே ஜனாதிபதியின் சிறப்பான தன்மை.



முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்தன

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் மதுபான நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்க ளைப் பெறத் தொடங்கினார்கள். ஒரு எம்.பி.க்கு குறைந்தது 8 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. மதுபானப் பாவனை ஊக்குவிக்கப்பட்டதற்கு திருமதி குமாரதுங்கவே காரணம்.



இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும

நாட்டின் மேம்பாட்டுக்காக அரசியல மைப்புக்குத் திருத்தங்களைக் கொண்டு வருவது என்ற போர்வையில் அரசியல மைப்பை மாற்றுவதற்கு அரசாங்கம் இப்போது முயற்சிக்கிறது. ராஜபக்ஷ குடும்பம் என்றென்றைக்கும் அதிகாரத் தில் தொடர்ந்திருப்பதற்கு வகைசெய்யும் நோக்குடனேயே திருத்தங்களைக் கொண் டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது என் பதை புரிந்து கொள்ளவேண்டியது முக்கி யமானதாகும்.

ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத்

மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார் கள். இன்னொரு சுற்றுத் தேர்தல் வந்தாலும் கூட அர சாங்கமே வெற்றிபெறும். எமது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, ஏன் முழுஉலகுட னும் ஒப்பிடும் போது இலங்கையில் தான் கூடுதலான அபி விருத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திச்சரம்

# சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி முன்வைத்த தீர்வு



இனத்துவ அடிப்படையில் நாட்டில் வெவ்வேறு நிருவாகங்களை ஏற்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என்று தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மக்கள் ஐக்கியமாக வாழும் போது இன மற்றும் மத வேறுபாடுகளின் அடிப்படையிலான அணுகுமுறைகளைக் கையாளக்கூடாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

2009 மேயில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வருவதற்கு முன்னரும் முடிவுக்கு வந்த பின்னரும் ஜனாதிபதி ராஜபக்ஷ எண்ணற்ற தடவைகள் அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வைக் காண்பதே தனது திட்டம் என்று கூறிவந்திருக்கிறார்.

ஆனால், இலங்கையின் 65 ஆவது சுதந்திர தேசியக் கொண்டாட்டங்கள் திருகோணமலையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு ஜனாதிபதி ராஜபக்ஷ ஆற்றிய உரை அவரது அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் தீர்வு என்ற திட்டத்தை அறவே கைவிட்டுவிட்டது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துவதாக அவதானிகள் கூறுகிறார்கள்.

சகல சமூகங்களுக்கும் சமத்துவமான உரிமைகள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சேர்ந்து வாழ்வதே தீர்வாகும் என்று ராஜபக்ஷ இப்போது பிரகடனம் செய்திருக்கிறார். ●

# சர்வதேச நாணய நிதியத்தைச் சாடும் ரணில்

இலங்கையின் கல்வியும் சுகாதாரச் சேவைகளும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இதற்கு காரணமாக இருப்பது சர்வதேச நாணய நிதியமே என்றும் குற்றஞ்சுமத்தியிருக்கிறார்.




இலங்கையின் சுதந்திரதினத்தன்று தெற்கில் காலியில் ஐக்கிய தேசியக்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், "1977 இல் இலங்கையின் கல்வித்துறையையும் சுகாதாரத் துறையையும் மேம்படுத்துவதற்கு உதவிய சர்வதேச நாணய நிதியம் இவ்விரு துறைகளுக்குமான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்குமாறு தற்போதைய அரசாங்கத்தை வற்புறுத்துகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளின் படி அரசாங்கம் செயற்படுமாக இருந்தால், இலங்கைச் சமுதாயத்தில் வசதிபடைத்த ஒரு சிறுபிரிவினரின் பிள்ளைகளே உகந்த கல்வியையும் முறையான சுகாதார வசதிகளையும் பெறக்கூடிய சூழ்நிலை தோன்றும்'' என்று எச்சரிக்கை செய்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைகளின் பிரகாரம் அரசாங்கம் செயற்படுமேயானால் இலங்கை பாரிய நெருக்கடியில் சிக்கும். எமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் போராட வேண்டும். சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள், பொது நலவரசு அமைப்பு ஆகியவை இலங்கையில் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பல்வேறு யோசனைகளை முன்வைக்கின்றன.

இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டியது, 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் ஐ.நா.வுக்கு கையளிக்கப்பட்ட யோசனைகளை யேயாகும். இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்த சகல அரசியற் கட்சிகளும் ஐக்கியப்பட வேண்டும் என்றும் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு சேவை செய்ய விரும்பும் மலாலா




பாகிஸ்தானில் பெண்களின் கல்வி உரிமைக்காக குரல்கொடுத்தமைக்காக தலிபான்களினால் நான்கு மாதங்களுக்கு முன்னர் சுடப்பட்டு படுகாயமடைந்த 15 வயதான மாணவி மலாலா யூசுவ்சாயின் மண்டையோட்டைச் சீரமைக்கும் சத்திரசிகிச்சை பெப்ரவரி 4ஆம் திகதி இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் உள்ள குயின் எலிசபெத் வைத்திய சாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சத்திரசிகிச்சையையடுத்து மலாலாவிற்கு இருந்த செவிப்புலன் பாதிப்பும் குணப்படுத்தப்பட்டதாக டாக்டர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு வெளியான சிலமணி நேரங்கள் கழித்து மலாலாவின் வீடியோ அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. தலிபான்களின் கொலை முயற்சியில் இருந்து தப்பிய பிறகு உலகில் பிரபல்யமடைந்திருக்கும் இந்த மாணவி வழங்கிய முதன் முதலான வீடியோ அறிக்கை இதுவாகும். மேல் உதட்டில் மெல்லிய விறைப்பு இருப்பதற்கு மத்தியிலும் வீடியோவில் தெளிவாகப் பேசிய மலாலா நாளுக்குநாள் நன்றாகக் குணமடைந்து வருவதாகக் குறிப்பிட்டாள்.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னரே பதிவு செய்யப்பட்ட இந்த வீடியோ அறிக்கையில் அவள் "நான் மக்களுக்குச் சேவை செய்ய விரும்புகின்றேன். ஒவ்வொரு சிறுமியும் ஒவ்வொரு பிள்ளையும் கல்வியைப் பெறவேண்டுமென்று விரும்புகிறேன். இன்று நான் உயிருடன் இருப்பதை நீங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. என்னால் பேசமுடிகிறது. எல்லோரையும் என்னால் பார்க்க முடிகிறது. மக்களின் பிரார்த்தனையினால், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று எல்லோரும் எனக்காகப் பிரார்த்தித்ததனால் தான் நான் உயிர்பிழைத்தேன். ஆண்டவர் எனக்கு இந்தப் புதியவாழ்வைத் தந்திருக்கிறார்" என்று கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தினர் பக்கம்



பி.எச்.ஜி.

# ஒருமுகப்படுத்தப்பட்ட அதிகாரத்தின் கொடுங்கோன்மை

ஆட்சியாளர்களின் அதிகாரங்களுடன் தனிப்பட்டவர்களின் உரிமைகளை சமநிலைப்படுத்துவதே அரசியலமைப்பொன்றின் அடிப்படை நோக்கமாகும். இந்த பழைமை வாய் ந்த பிரச்சினையைக் கையாளுவதற்கு அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் பல்வேறு முறைகளை வகுத்திருக்கிறார்கள். ஆனால், ஒரு போதுமே அவர்களினால் முற்றுமுழுதான வெற்றியைக் காண முடியவில்லை. இந்தவழிமுறைகளில் மிகவும் நீடித்து நிலைப்பது அதிகாரப் பிரிவினைக் கோட்பாடாகும். (Concept of separation of powers) அதிகாரத்தில் இருப்பவர்களின் பதவிக் காலங்களுக்கு வரையறைகளை விதந்துரைத்தல், அதிகாரப்பரவலாக்கம், அரசியலமைப்புகளில் உரிமைகள் பற்றிய சட்டங்களை உள்ளடக்குதல் என்பவை ஏனைய வழிமுறைகளில் அடங்குகின்றன.

அரசியலமைப்பு ரீதியான அரசாங்கங்கள் பலதசாப்தங்களின் ஊடாக படிப்படியாக சிதைவடைந்து வந்திருப்பதற்கு இலங்கை கவனத்தைத் தூண்டுகிற ஒரு உதாரணமாக விளங்குகிறது. 1948 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் ஏனைய இரு கிளைகளினதும் இழப்பில் நிறைவேற்று அதிகாரபீடம் படிப்படியாக பலப்படுத்தப்பட்டு வந்துள்ளமையை நாம் கண்டிருக்கிறோம். 1978 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை நோக்குவோமேயானால், அதில் செய்யப்பட்டிருக்கும் அதிகாரப்பிரிவினை சமத்துவமற்றதாகவும் நிறைவேற்று அதிகார பீடத்துக்குச் சார்பான முறையில் பெருமளவுக்கு பக்கச்சார்பானதாகவும் இருக்கிறது என்ற தவிர்க்க முடியாத தீர்மானத்துக்கு எம்மால் வரக்கூடியதாக இருக்கும்.

பாரம்பரியமாக பாராளுமன்றம், நிறைவேற்று அதிகார பீடம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையிலான அதிகாரங்கள் பிரிவினை என்பது இந்த மூன்று தனித்தனியான கிளைகளுக்கும் இடையே அரசாங்கத்தின் செயற்கடமைகளை பிரித்துக் கொடுப்பது என்றே அர்த்தப்படுகிறது. பாராளுமன்றம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கிறது. சட்டவாக்கம், பொதுநிதிக் கட்டுப்பாடு, அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகார மற்றும் நிருவாகக் கிளைகளை நுண்ணாய்வு செய்தல் ஆகிய செயற்கடமைகள் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் கொள்கைகளை வகுத்தல், நாட்டை நிருவகி த்தல், சட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்கைப் பேணுதல் ஆகிய பொறுப்புகள் நிறைவேற்று அதிகார பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சட்டங்களை வியாக்கியானஞ்செய்தல், அரசாங்கத்துக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான முரண்நிலைகளிலும் பிரஜைகளுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தகராறுகளிலும் தீர்ப்புகளை வழங்குதல் ஆகியனவே நீதித்துறையின் கடமையாகும்.

அரசாங்கத்தின் இந்த தனித்தனியான செயற்கடமைகள் இறுக்கமான தனி அறைகளில் நிறைவேற்றப்பட முடியும் என்று இதை அர்த்தப்படுத்தலாகாது. அவ்வாறு தான் நிலைமை என்றால் அரசாங்கம் ஒரு ஸ்தம்பித நிலைக்கு வந்துவிடும். அதனால், ஒன்றின் மேல் ஒன்று இருக்கிற பகுதிகள் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் ஒவ்வொரு கிளையும் ஏனைய இரு கிளைகளின் மீதும் ஒரு தடுப்பாகச் செயற்படுகிறது.

இலங்கையில் ஜனாதிபதி நிறைவேற்று அதிகார அரசாங்கத்துக்குத் தலைமை தாங்குகிறார். ஆனால், அரசாங்கத்தை நடத்துவதற்கான நிதியை பாராளுமன்றமே அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி நிறைவேற்று அதிகாரபீடத்தினால் வரிகளையோ அரசிறையையோ அதிகரிக்க முடியாது.

ஜனாதிபதி மக்களினால் தெரிவு செய்யப்படுகிறார். ஆனால், அமைச்சரவை பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே அமைக்கப்படுகிறது. முழு அமைச்சரவையுமே அதன் செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு பதில் கூறக் கடமைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றமே (நீதித்துறையும் சேர்ந்து) ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டுவந்து அவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிநீக்க முடியும்.

பாராளுமன்றம் மக்களினால் தெரிவு செய்யப்படுகிறது. ஆனால், பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட்டு ஒருவருடம் கடந்த நிலையில் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் (Prorogue) அல்லது பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பாராளுமன்ற உறுப்பினர் தனது கட்சியில் இருந்து வெளியேற்றப்படும் பட்சத்தில் தனது ஆசனத்தை இழக்கிறார். ஆனால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை செல்லுபடியாகக் கூடியதா, இல்லையா என்பதை நீதித்துறையே தீர்மானிக்கிறது. பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுகிறது. ஆனால், அவை நிறைவேற்று அதிகார பீடத்தினாலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்தகைய நடைமுறைப்படுத்தலின் முறைமைத் தகுதியை (Validity) நீதித்துறை தீர்மானிக்கிறது. நிறைவேற்றப்படுவதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா, இல்லையா என்பதை தீர்மானிப்பதும் நீதித்துறையேயாகும். வரையப்படுகின்ற சட்டங்கள் அரசியலமைப்பை மீறவில்லை என்பதை நீதித்துறையே உறுதிப்படுத்த வேண்டும். பாராளுமன்றம் அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டுவரமுடியும் அல்லது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்புக்கு மாற்றீடாக புதியதொரு அரசியலமைப்பைக் கொண்டுவரமுடியும். ஆனால், அரசியலமைப்பின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை அல்லது முற்றுமுழுதாக அரசியலமைப்பை மாற்றீடு செய்வதாக இருந்தால் மக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும்.

நீதித்துறை பிரதம நீதியரசரால் தலைமை தாங்கப்படுவதுடன், பல்வேறு மட்டங்களில் நீதிபதிகளைக் கொண்டிருக்கிறது. ஆரம்ப நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மேலான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் இந்த ஆணைக்குழுவே கொண்டிருக்கிறது. பிரதம நீதியரசரும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், அவர்களுக்கு எதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டுவந்து பதவியிலிருந்து நீக்குமாறு பாராளுமன்றத்தினால் விதந்துரைக்க முடியும்.

இந்தவகையான செயற்பாட்டு முறைமைகளில், அரசாங்கத்தின் எந்தவொரு கிளையுமே பிரத்தியேக மேலாண்மையைக் கொண்டிருப்பதாக உரிமைகோர முடியாது. அத்துடன் அரசாங்கத்தின் எந்தவொரு கிளையும் அதன் அதிகாரங்களைத் துறந்தால் அது ஆபத்தான சூழ்நிலையை உருவாக்குவதாக அமையும். இறுதி மேலாண்மை அரசியலமைப்பிலும் மக்களின் இறைமையிலுமே தங்கியிருக்கிறது. எங்கே விடயங்கள் பிழையாகப் போயிருக்கின்றன?

இலங்கையில் பல வருடங்களாக அரசாங்கத்தின் ஏனைய இரு கிளைகளிலும் இழப்பில் நிறைவேற்று அதிகாரபீடம் மேலும் மேலும் கூடுதல் அதிகாரங்களை அபகரித்துக் கொண்டு வந்திருப்பதை நாம் கண்டு வந்திருக்கிறோம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தேர்தல் முறையில் பாரிய பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவது பெரும் கஷ்டமாகும். 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்பட்ட தேர்தல்களில் இது தெளிவாக நிரூபிக்கப்பட்டது. அத்தேர்தல்களில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் ஏதோ ஒருவகையில் சமநிலையானதாகவே அமைந்தது. ஆனால், இந்த நிலைமையும் கூட 1982 ஆம் ஆண்டு திரிபுபடுத்தப்பட்டதைக் கண்டோம். பொதுத்தேர்தலை நடத்திப் புதிய பாராளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக அப்போது இருந்த பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டது.

அண்மைக்காலமாக அரசாங்கம் எதிரணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளையும் பல்வேறு சலுகைகளையும் தருவதாக ஆசைகாட்டி கவர்ந்திழுக்கும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்திவருகிறது. இதன் மூலமாக பாராளுமன்றத்தில் அதிகப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்கிறது. இந்தத் தந்திரோபாயம் அரசியலமைப்பின் 99 (13) ஆவது சரத்தில் உள்ள கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தை முற்றுமுழுதாக வலுவிழக்கச் செய்திருக்கிறது. எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் அமைச்சரவை உறுப்பினராக நியமிக்க ஜனாதிபதியினால் முடியும் என்றும் அத்தகைய நியமனம் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தண்டிப்பதற்கு எந்த வகையிலும் பயன்படுத்தப்பட முடியாதது என்றும் காரணம் கூறி நீதித்துறை கட்சித்தாவலை அங்கீகரிக்கும் வகையில் தீர்ப்பளித்திருக்கிறது. அரசாங்கத் தரப்புக்குத் தாவிய குறிப்பிட்ட சில எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலிருந்து கட்சியைத் தடுக்கும் வகையில் நீதிமன்றங்களில் தடையுத்தரவுகளைப் பெறுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இவ்வாறாகத் தான் அரசியலமைப்பில் உள்ள கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கு நீதித்துறை உதவியது. இன்று வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரபீடத்தினால் எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கவர்ந்திழுத்து அரசாங்கத்தில் இணைத்து பாராளுமன்றத்தில் பெரிய பெரும்பான்மைப்பலத்தை பெறுவதன் மூலமாக வாக்காளர்களின் விருப்பத்தைச் செல்லுபடியற்றதாக்கக் கூடியதாக இருக்கும் நிலையில் பாராளுமன்றத் தேர்தல்களிலோ, மாகாணசபைத்தேர்தல்களிலோ, உள்ளூராட்சித் தேர்தல்களிலோ அர்த்தமேதாவது இருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. இந்த வகையாகச் செயற்கையாக தோற்றுவிக்கப்பட்ட பெரும்பான்மைப்பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட (அரசியலமைப்புக்கான) 18 ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டம் ஜனாதிபதியின் பதவிக்காலங்களுக்கு இருந்த மட்டுப்பாட்டை இல்லாதொழித்துவிட்டது. அதேவேளை, சட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டிருந்த முற்றுமுழுதான விதிவிலக்கு தொடர்ந்து பேணப்படுகிறது. தேவையான அரசியலமைப்பு நடைமுறையைப் பின்பற்றாமலேயே மாகாண பொலிஸ் தொடர்பில் மாகாண சபைகளுக்கு இருந்த நிருவாக அதிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டுவிட்டன. 18 ஆவது திருத்தத்தின் மிகவும் நச்சுத்தனமான அம்சம் தேர்தல் பிரசார வேலைகளுக்காக அரசாங்கச் சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை சட்டத்துக்கு உடன்பாடானதாக்கியமையாகும். இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு தேர்தல் பிரசார வேலைகளுக்கு அரச சொத்துகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான அதிகாரம் தனக்கு இல்லை என்று கடந்த வருடம் மூன்று மாகாணசபைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்ட போது தேர்தல்கள் ஆணையாளர் பகிரங்கமாகவே கவலைப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

### பிரதம நீதியரசர் பதவி நீக்கம்

கடந்த வருடத்தைய குற்றப்பிரேரணை விவகாரத்துடன் தொடர்புடைய நிகழ்வுப் போக்குகள் (நிறைவேற்று அதிகார பீடத்தின் கட்டுப்பாட்டில் உள்ள) பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையேயான மோதலின் ஒரு கதையாகும். பாராளுமன்றமும் நீதித்துறையும் அவற்றின் மேலாண்மையைப் பேணுவதில் முரண்நிலை ஏற்பட்டது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை கையளிக்கப்பட்டதும் அதில் முன்வைக்கப்பட்டிருந்த 14 குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றைச் சபாநாயகர் நியமித்தார். அக்கறையுள்ள ஒரு பிரஜைகள் குழுவினர் இந்தத் தெரிவுக்குழுவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர். இந்த மனுதொடர்பில் தீர்மானமொன்றுக்கு வரும்வரை தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை தாமதிக்குமாறு உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தது. பாராளுமன்றம் அந்த வேண்டுகோளுக்கு இணங்க மறுத்துவிட்டது.

அதற்குப் பிறகு பிரதம நீதியரசர் தெரிவுக்குழுவின் விசாரணைக்கு முகங்கொடுத்தார். ஆனால், நடைமுறைகள் பற்றிய தகவல்கள் மற்றும் சான்றுகள் இல்லாததாலும் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களின் பண்பு நயங்கெட்ட நிந்தனைகளினாலும் விசாரணையில் இருந்து பிரதம நீதியரசர் வெளிநடப்புச் செய்ய வேண்டியேற்பட்டது. இதையடுத்து பிரதம நீதியரசரின் பிரசன்னமில்லாமலேயே தெரிவுக்குழு சாட்சிகளை அழைத்து ஒருதலைப்பட்ட விசாரணையை நடத்தியது. பிரதம நீதியரசரைக் குற்றவாளியாகக் கண்ட தெரிவுக்குழு அவரைப் பதவிநீக்குவதற்கான சிபாரிசைப் பாராளுமன்றத்துக்குச் செய்தது. பிறகு தெரிவுக்குழுவின் விசாரணையை ரத்துச் செய்யுமாறு கோரி பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத்தாக்கல் செய்தார். அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை வியாக்கியானம் செய்யும் விடயத்துடன் அது சம்பந்தப்பட்டதால் அதை மேன்முறையீட்டு நீதிமன்றம் (அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யும் அதியுயர் பீடமான) உச்சநீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியது.

ஒரு நீதிபதியை குற்றப்பிரேரணைக்குள்ளாக்கி பதவி நீக்குவதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தத்துவம் கிடையாது. உச்ச நீதிமன்றம் தீர்மான அறிவிப்புச் செய்தது. பாராளுமன்றம் அந்தத் தீர்மானத்தை நிராகரித்தது. உச்ச நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவுக்குழுவின் கண்டுபிடிப்புகளை செல்லுபடியற்றவையென்று நிராகரித்தது. எவ்வாறெனினும், பாராளுமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை நிராகரித்து பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்வதற்கான சிபாரிசுகளை செய்யும் செயன்முறைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தது.

நடைமுறை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் கிளப்பப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் சபாநாயகர் அடியோடு நிராகரித்த நிலையில், பாராளுமன்றத்தில் இருநாட்கள் விவாதம் இடம்பெற்றது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை பூரணமற்றது. ஏனெனில், பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 14 குற்றச்சாட்டுகளில் 5 குற்றச்சாட்டுகள் மாத்திரமே விசாரிக்கப்பட்டன. பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் வேண்டி நிற்பதன் பிரகாரம் விவாதத்திற்கு ஒரு மாதம் முன்னதாக பாராளுமன்றத்தின் முன்பாக அறிக்கை தாக்கல் செய்யப்படவுமில்லை. விவாதத்தின் இறுதியில் முறைப்படியான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. பதிலாக மூலமுதலான குற்றப்பத்திரமே தீர்மானமாகப் பயன்படுத்தப்பட்டது. அவசர அவசரமாக குற்றப்பிரேரணையை நிறைவேற்றிவிட வேண்டுமென்ற ஆர்வத்தில் இயற்கை நீதியின் சகல கோட்பாடுகளையும் தெரிவுக்குழு அலட்சியம் செய்தது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை எமது அரசியலமைப்பு முறைமைக்குள் படர ஆரம்பித்துவிட்ட சீரழிவை அம்பலப்படுத்த உதவியிருக்கிறது. நிறைவேற்று அதிகார பீடத்தின் நெருக்குதல்களுக்கு அடிபணிந்த ஒரு பாராளுமன்றம் ஜனநாயகப் பண்புகள் சகலதையும் காற்றில் பறக்கவிட்டிருக்கும் அனர்த்தத்தைக் காண்கிறோம். தங்களுக்கு வாக்களித்த மக்களின்

*(15ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகள் சமூகம் போராட்டத்தைத் தொடரத்தவறியது ஏன்?



உள்நாட்டு அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சுமணசிறி லியனகே



கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவின் இடத்துக்கு புதிய பிரதம நீதியரசரை நியமிப்பதில் சகல சம்பிரதாயங்களும் மரபு ஒழுக்கங்களும் புறந்தள்ளப்பட்டிருந்த போதிலும் கூட, குற்றப் பிரேரணை நிறைவேற்றத்துக்குப் பிறகு கொழும்பு புதுக்கடையில் வழமைக்கு மாறானதும் எதிர்பார்த்திராத வகையிலானதுமான ஒரு அமைதி நிலவுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட நேரத்தில் மொஹான் பீரிஸ் பல தனியார் கம்பனிகளில் பணிப்பாளராகவும் அமைச்சரவையின் சட்ட ஆலோசகராகவும் இருந்தார். முன்னரெல்லாம் அரிதாகச் சில சந்தர்ப்பங்களைத் தவிர, மற்றும்படி உச்ச நீதிமன்றத்தின் மிகவும் சிரேஷ்ட நீதிபதியொருவர் அல்லது சட்டமா அதிபரே ஜனாதிபதியினால் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். தற்போதைய நியமனம் சட்ட முறைக்கு புறம்பானதாகும். இது ஒருவகையில் வேடிக்கையான ஒரு நிகழ்வுமாகும்.

முன்னர் ஓய்வுபெற்ற ஒரு பிரதம நீதியரசர் ஜனாதிபதிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இத்தடவை ஒரு சட்ட ஆலோசகர் பிரதம நீதியரசராக பதவியுயர்த்தப்பட்டிருக்கிறார். கார்ள் மார்க்ஸ் உயிருடன் இருந்திருந்தால் முதலாவதை ஒரு அனர்த்தம் என்றும் இரண்டாவதை ஒரு கேலிக்கூத்து என்றும் வர்ணித்திருப்பார். ஓய்வுக்குப் பிறகு பிரதம நீதியரசரை அரசியலுக்குக் கொண்டு வருகின்ற முறைமை தற்போது அரசியல் பயிற்சிக்குப் பிறகு பிரதம நீதி யரசரை நியமிக்கும் முறைமையினால் பதிலீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அவர் அரசாங்கத்துக் கும் தனியார் துறைக்கும் ஆதரவான தீர்ப்புகளை வழங்கினால், அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

அதேபோன்றே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினதும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பினதும் (Lawyer's Collective) "பெரிய ஆரவாரக் கதைகள்" திடீரென ஒரு முடிவுக்கு வந்திருப்பதும் வேடிக்கையானதேயாகும். "நாம் சுமார் 100 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தோம். இவர்கள் ஒரு நாள் கூட எதிர்த்துப் போராடவில்லையே" என்று பல்கலைக்கழகத்தில் எனது நண்பர் ஒருவர் சொன்னார்.

சட்டத்தரணிகள் சமூகம் தங்களின் போராட்டத்தைத் தொடருவதற்குத் தவறியது ஏன்? சட்டத்தரணிகளின் போராட்டம் முற்றிலும் சட்ட ரீதியானதும் அரசியலமைப்பு ரீதியானதுமாகும். அதனால், அது மிகவும் பல வீனமானதும் வலுவற்றதுமானஅடித்தளத்தைக் கொண்டிருந்தது. அரசியலமைப்பு என்பது ஒரு சட்ட முறை ஏடு. அதன் வாசிப்பு பலவகையான அர்த்தப்படுதல்களைக் கொண்டு வரக்கூடும். நான் எந்தவொரு சட்டத் துறைப் பின்புலத்தையோ அல் லது பயிற்சியையோ கொண்டிராதவன். அதனால், எனது அரசியலமைப்பு வாசிப்பு பொதுநிலை மக்களுக்குரியதைப் போன்றதேயாகும். 1978 அரசியலமைப்பில் அரசின் மூன்று அங்கங்களுக்கும் இடையே அதிகாரப் பிரிவினை தெளிவாகக் குறித்துக் காட்டப்பட்டிருக்கின்ற போதிலும் கூட அந்த அங்கங்கள் சமத்துவமானவையாக நிற்கின்றன என்று வாதாடுவது முற்றிலும் தவறு என்பதே அந்த அரசியலமைப்பு பற்றிய எனது வாசிப்பின் விளக்கப்பாடாகும். அரசியலமைப்பின் நான்காவது சரத்து மக்களின் இறைமை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கூறுகிறது. மக்களின் சட்டவாக்க அதிகாரம் மாத்திரமல்ல, நீதித்துறை அதிகாரமும் பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வித்தியாசம் என்னவென்றால், மக்களின் சட்டவாக்க அதிகாரம் நேரடியாக பாராளுமன்றத்தினால் செயற்படுத்தப்படுகின்ற அதேவேளை, அவர்களின் நீதித்துறை அதிகாரம் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்களின் ஊடாக மறைமுகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சட்டவாக்க சபை (பாராளுமன்றம்) மற்றும் நிறைவேற்று அதிகாரபீடம் தொடர்பில் நீதித்துறையின் செயற்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வாறெனினும், நீதித்துறையானது பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரபீடம் ஆகியவற்றுக்குச் சமனானதாக ஒரு அதிகார அங்கமல்ல.

இரண்டாவதாக, இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பும் அரசியலமைப்பின் 107(3) சரத்து குறித்து ஏன் மயிரைப் பிளக்கும் வாக்குவாதங்களைச் செய்தன என்பது எமக்கு விளங்கவில்லை. குற்றப்பிரேரணை ஒன்று தொடர்பில் பாராளுமன்றம் அதன் நிலையியற் கட்டளைகளைப் பயன்படுத்திச் செயற்படமுடியுமென்பதை எந்தவொரு சாதாரண பிரஜையினாலும் கூட புரிந்துகொள்ளமுடியும். 2000 அரசியலமைப்பு வரைவு இந்த விவகாரத்தைப் பற்றி என்ன கூறியது என்

**தற்போதைய அரசியலமைப்புக்கு தீவிரமான வியாக்கியானங்களைச் செய்வது அல்ல அதை முற்று முழுதாக தூக்கியெறிவதே முக்கியமானதாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை நான் நோக்கினேன். சட்டத்தர ணிகள் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களும் அதை நன்கறிவார் கள். அது 1978 அரசியலமைப்பில் இருப்பவற்றை அப்படியே சொல் லுக்குச் சொல்லாக உட்சேர்த்ததா கவே இருந்தது. பாராளுமன்ற சபாநா யகரினால் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படுவத ற்கு முன்ன தாக மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் 1968 இந்திய நீதித்துறை சட்டத் தில் உள்ள ஏற்பாடுகள் சிலவற்றுக்கு ஒத்ததான ஏற்பாடுகளை 2000 அரசியலமைப்பு வரைவு பிரேரித்திருந்தது என்பது உண்மையே. அதனால்தான் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பும் எடு த்த நிலைப்பாடும் உச்ச நீதிமன்றத் தின் தீர்மானமும் தவறானவை என்று நான் முன்னர் எழுதிய கட்டுரைகள் சிலவற்றில் வாதிட்டிருந்தேன்.

இந்திய லோக் சபாவின் சபாநாயக ரான சோம்நாத் சட்டர்ஜி ஒரு தடவை முன்வைத்த வாதத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரு அங்கங்களும் அரசியலமைப்பினால் வரையறுக்கப் பட்ட எல்லைகளுக்குள் செயற்பட வேண்டும் என்று அவர் கூறினார். "எவருமே அரசியலமைப்புக்கு மேலானவர் இல்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். சட்ட வாக்க சபையின் (பாராளுமன்றத் தின்) உள்ளகச் செயற்பாடுகள் தொட ர்பில் எந்த நீதிமன்றத்துக்கும் நியாயாதிக்கம் கிடையாது என்று இந்திய அரசியலமைப்பு கூறியிருக் கிறதென்றால், ஏதாவது வியாக்கியா னங்களுடன் நீதிமன்றம் அதை செல் லுபடியற்றதாக்க முடியாது. எனவே, இடைமுகமேலாதிக்கத்தை (Interfacing Supremacy) அனுமதிக்கும் வகையிலான வியாக்கியானத்தைச் செய்வதற்கான எந்த முயற்சியையும் எதிர்காலத்தில் அல்லது எப்போதுமே உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நான் நம்புகி றேன்" என்று சோம்நாத் சட்டர்ஜி தெரிவித்தார். அரசியலமைப்பை தாங்கள் வாசித்த முறை சரியான தல்ல என்பதைப் புரிந்துகொண்டதன் காரணத்தினால் தான் தங்களது போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சட்டத்தரணி கள் தீர்மானித்தார்கள் போலத் தெரிகி றது.

குற்றப்பிரேரணைச் செயன்முறைக ளின் "சட்டபூர்வத்தன்மையை" வலி யுறுத்துவதன் மூலமாக, அந்த செயன் முறைகள் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை அரசியல் நோக்கத்தி னால் உந்தப்பட்டவையாக அமைந்தி ருந்தன என்ற கருத்தை நான் நிராக ரிப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. இது நிச்சயமாக அரசியல் நோக்கத்துடனான செயற் பாடுகளேயாகும். அந்தச் செயற்பாடு களை முன்னெடுப்பதில் கடைப்பிடிக் கப்பட்டதாகக் கூறப்படும் "சட்ட பூர்வத்தன்மை" கேள்விக்குள்ளாக் கப்படவேண்டும். சவாலுக்குள்ளாக் கப்படவேண்டும். அதனால், தற்போ தைய அரசியலமைப்புக்கு தீவிரமான வியாக்கியானங்களை வழங்குவ தல்ல, முற்றுமுழுதாக அதைத் தூக்கி யெறிவதே முக்கியமானதாகும்.

நான் முன்னர் எழுதிய கட்டுரை கள் சிலவற்றில் முன்வைத்த பிரதான வாதங்களில் சுருக்கமாகக் கூறப் பட்ட முக்கியமான கருத்தை மீண் டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இலங்கையில் இன்று காணப்படக் கூடியதாக இருக்கின்ற நிலைவரம் ஒன்றும் பிரத்தியேகமானதல்ல, ஒரு வழமையான நிலைவரமேயாகும். அது இன்னும் தொடர்ந்து கொண்டு போகிறது. பொலிஸாரால் கைது செய்யப்படுகின்ற ஒருவரை நீதிமன் றத்தில் ஆஜர் செய்வதற்கு முன்ன தாக தடுத்துவைக்கக்கூடிய 24 மணி நேரத்தை 48 மணித்தியாலமாக்கு வதற்கு சட்டமொன்று பாராளுமன் றத்தில் அண்மையில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இது விதிவிலக்கான நிலைவரத்தை வழமை நிலையாக் கும் இன்னொரு நடவடிக்கையாகும். பொலிஸ் காவல் காலவரையறை யைக் குறைக்க வேண்டுமென்று கற் றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழு விதப்புரை செய்திருந்த போதிலும், அதைப்பற்றி அக்கறைப்படாமல், அரசாங்கம் பல மாதங்களுக்கு முன்னதாகவே இது தொடர்பான சட்டமூலத்தை சபை யில் சமர்ப்பித்திருந்தது. இப்போது அதற்கு பெரும்பான்மையான எம்.பி. க்கள் ஆதரவாகக் கைதூக்கி நிறை வேற்றியிருக்கிறார்கள்.

விதிவிலக்கான நிலைவரம் அரசிய லமைப்பு வழிவகைகளின் ஊடாக நிலைநிறுத்தப்பட்டிருப்பதால், அதை இரு தூண்டுவிசையாலும் தத்துவார்த் தக் கருவியினாலும் வலுப்படுத்த வேண்டியிருக்கிறது. அதாவது இலஞ்சம் கொடுக்கின்ற முறையி னாலும் சிங்கள பௌத்த தத்துவத்தி னாலும் அதை வலுப்படுத்த வேண்டி யிருக்கிறது.

அரசாங்கத்தின் ஆதரவுடன் அல் லது அரசாங்கத்தில் அங்கம் வகிக் கின்ற கட்சிகளின் ஆதரவுடன் இலங் கையில் முஸ்லிம்களுக்கு எதிரான துவேசப் பிரசாரமொன்று தீவிரப் படுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடி யதாக இருக்கிறது. இது மேற்கூறப் பட்ட காரணிகளின் பிரசன்னத்தின் தெளிவான அறிகுறியாகும். அத்த கையதொரு சூழ்நிலையிலே சட்டத் தின் ஆட்சியை நிலைநிறுத்துதல் போன்ற சுலோகங்கள் எல்லாம் முற்றுமுழுவதுமாக அர்த்தமற்றவை யாகப் போய்விடுகின்றன. ஏனென் றால், தற்போதைய சட்டங்களைப் பின்பற்றுவதன் மூலமாக அல்லது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்து வதன் மூலமாக அல்லது தற்போது நடைமுறையில் இருக்கின்ற சட்டங்க ளுக்குத் திருத்தங்களைக் கொண்டுவ ருவதன் மூலமாக பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையே கடந்த 3-4 மாதங்களாக இடம்பெற்ற கயிறு இழுப்பு இந்த அமைப்பு முறையின் நெருக்கடியின் ஒரு வெளிப்பா டாகும். அமைப்பு முறைக்குள் செயற் பட மறுத்த பிரதம நீதியரசரை பதவி நீக்குவதற்கு குற்றப் பிரேரணை நுட்பத்தைப் பயன்படுத்தினார். சம்பிரதாயங்களையும் மரபு ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் புறந்தள்ளிச் செய்யப்பட்ட புதிய பிரதம நீதியரசர் நியமனம் அழுகிக் கொண்டு போகிற அமைப்பு முறைக்கு மீண்டும் ஒட்டுப் போட்டுக் காப்பாற்றுவதற்கான ஒரு முயற்சியேயாகும்.

நீதிபதிகளையும் சட்டத்தரணிகளையும் உள்ளடக்கிய சட்டத்துறைச் சமூகம் புதிய பிரதம நீதியரசரை சத்தம்போடாமல் ஏற்றுக் கொண்டமை தற்போதைக்கு அரசாங்கத்தினால் வெற்றிபெறக்கூடியதாக இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இதை அமைப்புமுறை ஸ்திரமானதாக இருக்கிறதென்றோ அல்லது உறுதியான அத்திபாரத்தில் இருக்கிறதென்றோ அர்த்தப்படுத்தலாகாது.

சகலதுமே நேர்த்தியாக இருப்பது போன்று தோன்றினாலும் கூட, நெருக்கடிகள் இடையறாது வெடிப்பதும் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதும் அமைப்புமுறை உகந்ததாக அமைந்து தாக்குப்பிடிக்கிறது என்பது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டுகிறது. அதற்குக் காரணம் இந்த அமைப்பு முறைமையினால் நெருக்கடிகளை இணக்கமான முறையில் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்கிறது என்பதல்ல, எதிரணிச் சக்திகள் மிகவும் பலவீனமாகவும் தெளிவான நோக்கு இல்லாததாகவும் இருப்பதேயாகும். அடுத்த வெடிப்பு எப்போது, எங்கே ஏற்படும் என்ற கேள்விக்குப் பதிலளிப்பது கஷ்டமானதாகும். ஏன் என்ற கேள்வி வெளிப்படையானது.




*(11ஆம் பக்கத்தொடர்ச்சி)*

விருப்பத்தையெல்லாம் துச்சமென மதித்து பதவிகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் எதிரணி உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைகின்ற அவலத்தைக் காண்கிறோம். நீதித்துறையும் கூட அதன் அரசியல் ஆசான்களைத் திருப்திப்படுத்துமுகமாக சட்டத்தை அவமதித்துச் செயற்படுவதையும் பல வருடங்களாகக் காண்கிறோம்.

65ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடுகின்ற நிலையில், நாம் எதை நோக்கிப் போகிறோம் என்று சிந்தித்தாக வேண்டும். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் கவலைக்குரிய வரலாறு எங்கள் ஒவ்வொருவரையும் பாதிக்கிறது. இந்த நிகழ்வுப் போக்குகளையெல்லாம் நாம் கண்டும் காணாமலும் இருக்க முடியாது. இவையெல்லாம் எமது அக்கறைக்குரியவையல்ல என்று நினைக்கவும் முடியாது. மேலும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி இப்போது பெருமளவுக்குப் பேசப்படுகிறது. இந்நிலையில், மேலும் என்னென்ன அனர்த்தங்கள் இந்த துரதிர்ஷ்டவசமான தீவைக் காத்திருக்கின்றனவோ?

**இந்த இதழின் விருந்தினர் இலங்கை நிருவாக சேவையில் மிகவும் உயர்ந்த ஒரு பதவியை வகித்த பெண்மணி. தனது பெயரை பி.எச்.ஜி. என்று மாத்திரமே குறிப்பிடுமாறு கேட்டுக் கொண்டார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



ஜெஹான் பெரேரா

# சர்வதேச நெருக்குதல் அவசியமானது ஆனால், போதுமானதல்ல

## இலங்கையில் ஒரு மாற்றத்தை காண விரும்புகின்றவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை எதிரணி தற்போதைய அரசாங்கத்திற்கு மாற்றாக இல்லை என்பதேயாகும்

சர்வதேச ஆதரவைத் திரட்டுவதற்கும் தனக்கும் எதிராக சர்வதேசத்தடைகள் விதிக்கப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கும் அரசாங்கம் தன்னாலியன்றதைச் செய்து கொண்டிருக்கிறது. கடந்த மாதம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை அவுஸ்திரேலியத் தேசியதின விருந்தின் போது இது தெளிவாகத் தெரிந்தது. அந்த விருந்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். இவ்வருடம் நவம்பர் மாதம் இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் உச்சிமகாநாடு தொடர்பான சர்ச்சை அரசாங்கத்திற்குள் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பது வெளிப்படையானது. இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலைவரத்துக்கு எதிரான ஆட்சேபனையாக இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு வரப்போவதில்லை என்று கனடா பிரதமர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.

பிரதம நீதியரசரை பதவிநீக்கம் செய்த இலங்கை அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கையும் குற்றப் பிரேரணைக்கு எதிரான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றை அலட்சியம் செய்தமையும் அரசாங்கத்துக்கு பாரதூரமான பிரச்சினைகளைக் கொடுக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. சர்வதேச சமூகத்தின் பல பிரிவினர் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையின் சட்ட பூர்வத் தன்மையை ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கடுமையான கண்டன அறிக்கை சர்வதேச சமூகத்தின் அக்கறையின் ஒரு வெளிப்பாடாகும். இவ்வறிக்கையில் உலகில் உள்ள முன்னணி நீதிபதிகள் கைச்சாத்திட்டிருக்கிறார்கள்.

நீதிபதிகளை பணியில் இருந்து நீக்கமுடியாத அம்சம் நீதித்துறைச் சுதந்திரத்தின் பிரதான தூண்களில் ஒன்று என்று ஜூரர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாரதூரமான தவறான நடத்தை அல்லது தகுதியின்மையுடன் சம்பந்தப்பட்ட மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரமே நீதிபதிகள் பணியிலிருந்து நீக்கப்படமுடியும். அத்தகைய விதிவிலக்கான சூழ்நிலைகளில் கூட, நீதிபதிகளை நீக்கும் எந்தவொரு செயன்முறையும் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்புடையதான நேர்மையான விசாரணையின் அடிப்படையிலானதாகவே இருக்க வேண்டும். விசாரணையின் முடிவில் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானத்தை சுயாதீனமான மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கான உரிமையும் இதில் அடங்கும். நீதித்துறை உறுப்பினர்கள் அவர்களின் தொழில் சார் பணிகளின் நியாயபூர்வமான செயலீடுபாட்டின் விளைவாக வழங்குகின்ற நீதித்துறைத் தீர்மானங்களின் அடிப்படையில் ஒருபோதுமே பணி நீக்கம் செய்யப்படக்கூடாது.

1978 அரசியலமைப்பின் 107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவது சரத்தின் கீழ் நீதிபதிகளை பதவி நீக்கம் செய்வதற்கான நடைமுறை குறித்தும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் நேர்மையான விசாரணைக்கான உரிமைக்கு போது மான உத்தரவாதத்தை அளிக்கவில்லை என்பது குறித்தும் (நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான) ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் குழுவும் தெரிவித்த விசனத்தைச் சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக் குழு, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 14 சரத்துக்கு இசைவானதாக குற்றப்பிரேரணை விசாரணை செயன்முறைகள் அமையவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், 1971 சிங்கப்பூர் பிரகடனம், 1991 ஹராரே பிரகடனம் மற்றும் அரசாங்கத்தின் மூன்று கிளைகள் தொடர்பான (2003) லத்திமார் ஹவுஸ் கோட்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் அடிப்படைப் பண்புகளையும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை மீறிவிட்டது. நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் மூலமும் பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையேயான பரஸ்பர மதிப்பையும் ஒத்துழைப்பையும் பேணுவதன் மூலமும் சட்டத்தின் ஆட்சியை பற்றிநிற்குமாறு பொதுநலவரசு அமைப்பின் உறுப்பு நாடுகளை லத்திமார் ஹவுஸ் கோட்பாடுகள் கோருகின்றன. இறுதியாக, நீதித்துறைச் சுதந்திரம் பற்றிய பெய்ஜிங் அறிக்கைக் கோட்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் (பிராந்திய ரீதியில் பிரயோகிக்கப்படத்தக்க) தராதரங்களுக்கு எதிரானதாகவும் இலங்கையின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, இந்த சர்வதேச அக்கறைகளை விளங்கிக்கொள்ள இயலாததாக இலங்கை அரசாங்கம் இருக்கிறது போல் தெரிகிறது. குற்றப்பிரேரணை விசாரணைச் செயன்முறைகள் சட்டவிரோதமானவை என்று தீர்மானித்ததில் உச்சநீதிமன்றம் தவறாக நடந்துகொண்டது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்களில் தலையிடுவதற்கான உரிமை உச்ச நீதிமன்றத்துக்கு இல்லை என்று அரசாங்கம் கூறுகிறது. இலங்கை அரசாங்கத்தின் சிந்தனைக்கும் சர்வதேச சமூகத்தில் உள்ளவர்களின் சிந்தனைக்கும் இடையே பெரியதொரு இடைவெளி இருப்பதே இங்கு பிரச்சினை. இந்தியா போன்ற மூன்றாவது உலக ஜனநாயக நாடுகளில் கூட, அவற்றின் அரசாங்கங்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய பலம்பொருந்திய சட்ட முறைமைகள் இருக்கின்றன. அதனால், இலங்கை அரசாங்கம் உச்ச நீதிமன்றத்துக்குச் செய்திருக்கும் அவமதிப்பைக் கண்டு அந்த நாடுகள் திகைத்துப்போய் நிற்கின்றன.

இலங்கை தொடர்பில் இந்தியா ஒரு சிக்கலான பிரச்சினையை எதிர்நோக்குகிறது. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதிக் கூட்டத்தில் இந்தியா (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்காக) மேற்கு நாடுகளுடன் சேர்ந்து இலங்கைக்கு எதிராகவே வாக்களித்தது. அத்துடன், இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் அந்தஸ்தையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகத்திடமிருந்து இந்திய அரசாங்கத்துக்கு தொடர்ச்சியான நெருக்குதல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதேவேளை, சீனாவின் செல்வாக்குப் பிராந்தியத்துக்குள் இலங்கை விழுவதையும் இந்தியா விரும்பவில்லை.

கொழும்பில் அவுஸ்திரேலிய தேசிய தின நிகழ்வில் அரசாங்கத்தின் சார்பில் நிகழ்த்திய உரையில் பேராசிரியர் திஸ்ஸவிதாரண இலங்கை பொதுநலவரசு அமைப்பின் ஒரு அங்கம் என்று வலியுறுத்திக் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. இலங்கை அதன் பண்பு விழுமியங்களை பொதுநலவரசிடமிருந்து மரபுரிமையாகப் பெற்றிருக்கிறது என்றும் அவர் கூறினார். சர்வதேச சமூகத்தின் மத்தியில் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருக்கும் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டம் பற்றியும் தனதுரையில் பேராசிரியர் விதாரண குறிப்பிட்டார். குடிமக்களுக்கு இழப்புகள் ஏற்படுவதைக் குறைப்பதற்கு அரசாங்கம் சாத்தியமான சகலதையும் செய்ததாகக் கூறிய அவர் போர்வலயங்களுக்குள் மக்களை அகப்படுத்தி விடுதலைப் புலிகள் உருவாக்கிய பணயக்கைதிகள் சூழ்நிலை காரணமாக பல குடிமக்கள் இறந்ததையும் ஒப்புக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மூன்று வகையான அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர். பேராசிரியர் விதாரணவின் உரை மிகவும் நீண்டதாகவும் அந்த நிகழ்வுக்குப் பொருத்தமற்றதாகவும் இருந்தது என்பது ஒரு அபிப்பிராயம். நீண்டதொரு பேச்சைக் கேட்டதற்காக அந்த நிகழ்வுக்கு ஆட்கள் வந்திருக்கவில்லை. ஒருவரை ஒருவர் சந்தித்து பல விடயங்களையும் தங்களுக்குள் கலந்துரையாடி மகிழ்வதற்கே அவர்கள் வந்தார்கள். வழமையாக அரசாங்க அரசியல்வாதிகள் நடந்துகொள்வதைப் போலன்றி, பேராசிரியர் விதாரண

**பொதுநலவரசு எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையும் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மேலும் மோசமானவையாக்கி விடக்கூடாது என்பதே இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படக்கூடிய நாடுகளின் நிலைப்பாடாக இருக்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த காலத்தைப் பற்றி மிகவும் கூடுதலான அளவிற்கு நேர்மையானவராகவும் திறந்த மனத்திரையாகவும் பேசினார் என்பது இரண்டாவது அபிப்பிராயம். போரில் குடிமக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டன என்பதை அவர் ஒத்துக்கொண்டார். நவம்பரில் பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் அவுஸ்திரேலியாவைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு அதன் ஆதரவை வென்றெடுப்பதற்கான நோக்குடன் பேராசிரியரின் பேச்சு திட்டமிடப்பட்டது என்பது மூன்றாவது அபிப்பிராயம்.

பொதுநலவரசு நாடுகளில் பெரும்பாலானவை மூன்றாம் உலகைச் சேர்ந்தவை. அதனால் அவை கூடுதலான அளவுக்கு இலங்கைக்கு ஆதரவானவையாகவே இருக்கும். பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் அவற்றின் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமைகள் மீறல்களினாலும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளினாலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. சர்வதேச சமூகத்திடமிருந்து மிகக் கூடுதல் நெருக்குதல்கள் வரும் பட்சத்தில் அது இலங்கை அரசாங்கத்தை பலவீனப்படுத்தக்கூடும் என்று இந்த நாடுகள் சிலவற்றின் மத்தியில் கவலை காணப்படுகிறது. அரசாங்கம் பலவீனப்படுமானால், அரசியல் சீர்திருத்தங்களுக்கான செயன்முறைகளில் இறங்குவது மிகவும் நெருக்கடியானதாகிவிடும். பலம் வாய்ந்த ஒரு அரசாங்கத்தினாலேயே பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து அரசியல் சீர்திருத்தங்களுக்கான ஆதரவைப் பெற முடியும்.

இலங்கையில் நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு நாடுகள் உச்சி மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஒரு சில மாதங்களில் நடைபெறவிருக்கும் அமைச்சர்கள் மட்ட கூட்டத்துக்கு பங்களாதேஷ் தலைமை தாங்க விருப்பது இலங்கைக்கு ஒரு அதிர்ஷ்டமாகும். பொதுநலவரசு அமைப்பு எடுக்கக் கூடிய எந்த நடவடிக்கையும் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மேலும் மோசமானவையாக்கிவிடக்கூடாது என்பதே பங்களாதேஷின் நிலைப்பாடாக இருக்கிறது போலத் தெரிகிறது. இலங்கையுடனான சர்வதேசத் தொடர்புகளைக் குறைப்பது மேலும் கூடுதலான அளவுக்கு கடும்போக்கு நிலைப்பாட்டை எடுப்பதற்கு அரசாங்கத்தைத் தள்ளிவிடும் என்றும் அத்தகைய சூழ்நிலை உருவானால் எதிரணியினரை அனுசரிக்கும் போக்கு அறவே இல்லாமற் போய்விடக் கூடும் என்றும் விசனம் வெளிப்படுத்தப்படுகிறது.

இன்றைய இலங்கை அரசாங்கத்தை ஒரு கிராமத்தில் இருக்கும் ஒரேயொரு கடையுடன் ஒப்பிடலாம். தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு மக்கள் போவதற்கு வேறு கடைகள் அந்தக் கிராமத்தில் இல்லை. இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக, அதற்கு மாற்று ஒன்றைக் கட்டியெழுப்புவதே பொறுப்பு வாய்ந்த அணுகுமுறையாக இருக்கும். இதற்கு எதிரணிக்கட்சிகள் பலம் பெறவேண்டும். இந்தக் கட்சிகள் தற்போது தங்களுக்குள் கூடுதலான அளவுக்கு பிளவுபட்டுப் போய்க் கிடக்கின்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி கடந்த பல வருடங்களாக உட்பூசல்களால் சிதைந்து கிடக்கிறது. அக்கட்சி ஐக்கியப்பட்டு பலம்பொருந்தியதாக மாறக்கூடியதாக அறிகுறியெதையும் காணக்கூடியதாக இல்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் உடைவுகள் ஏற்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிரணிக்கட்சிகள் பலம் பொருந்தியவையாக மாறினால், அரசாங்கத்துக்கு கூடுதல் நெருக்குதல் ஏற்படும். அரசாங்கத்தை மாற்றுவதானால், எதிரணியினால் அதிகாரத்தைக் கையேற்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதற்கு தயாரானதாக எதிரணி இருக்க வேண்டும். நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு தங்களிடம் இருக்கக்கூடிய நோக்குகள், தந்திரோபாயங்கள் எவை என்பதை மக்களுக்கு எதிரணிக் கட்சிகள் முன்வைக்க வேண்டும். அரசாங்கம் அதன் வாக்காளர் தளத்தை அப்படியே தக்க வைப்பதற்கு பெரும்பான்மையின தேசியவாதத்தில் தங்கியிருக்கின்ற ஒரு நேரத்தில், எதிரணிக் கட்சிகள் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டதும் அபிவிருத்தி முயற்சிகளில் புலம்பெயர் இலங்கைச் சமுதாயத்தின் ஆதரவைப் பெறக் கூடியதுமான அணுகுமுறையின் மூலம் விடைகளைத் தேடவேண்டியிருக்கிறது. இலங்கையில் ஒரு மாற்றத்தைக் காண விரும்புகிறவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினை எதிரணி தற்போது அரசாங்கத்துக்கு ஒரு மாற்றாக இல்லை என்பதேயாகும்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## கொழும்பு, புதுடில்லி, தமிழ்நாடு

# தமிழர்களுக்கு இவர்கள் என்ன செய்கிறார்கள்?

குசல் பெரேரா

உள்நாட்டு அரசியல்

கொழும்பு புதுக்கடையில் உள்ள மேல் நிலை நீதிமன்றங்களின் தீர்மானங்களை நிராகரித்து ராஜபக்ஷ அரசாங்கம் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவி நீக்கியதுடன், ஜனவரி 15 ஆம் திகதி புதிய பிரதம நீதியரசரை நியமனம் செய்ததையடுத்து குற்றப்பிரேரணை விவகாரம் ஒருமுடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. சட்டமா அதிபராக இருந்து பிறகு அமைச்சரவையின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றிய மொஹான் பீரிஸ் புதிய பிரதம நீதியரசர்-இவர் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குரிய தெரிவு. பிரதம நீதியரசரை பதவி நீக்குவதற்கு கடைப்பிடிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயன்முறைகள் முழுவதுமே சட்டவிரோதமானவை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. மொஹான் பீரிஸ் தனது கடமைகளைப் பொறுப்பேற்றதுடன், ஒரு பொதுப்பிரச்சினை என்ற வகையில் குற்றப்பிரேரணை விவகாரம் செத்துப் போய்விட்டது. இந்தப் புதிய அரசியல் திருப்பம் தமிழ் அரசியல் அரங்கிலும் நாட்டின் ஏனைய சகல விவகாரங்களிலும் பாரதூரமான தாக்கங்களைக் கொண்டிருக்கும்.



தமிழர் அரசியலில் காட்சி மாற்றங்கள் 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலுடன் ஆரம்பமாகின. "முற்போக்குவாதிகளினதும் இடதுசாரிகளினதும்" பொது ஜனாதிபதி வேட்பாளரான (பிரதமர்) மகிந்த ராஜபக்ஷ புதியதொரு இலங்கைக்கான தனது நோக்கை "மகிந்த சிந்தனை" என்ற தலைப்பில் பிரகடனம் செய்தார். அதிலே அவர் நான் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற சகல அரசியல் கட்சிகளுடனும் மேற்குறிப்பிட்ட அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் விரிவான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பேன். அதேவேளை, பாராளுமன்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பேன், (மகிந்த சிந்தனை பக்கங்கள் 31-32) என்று குறிப்பிட்டிருந்தார்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பது தொடர்பில் மக்களிடம் ஆணை கேட்கப்படவில்லை. மக்களுக்கு எந்த உறுதிமொழியும் வழங்கப்படவில்லை. விடுதலைப் புலிகளுடன் போருக்குப் போவது குறித்தும் எதுவும் கூறப்படவில்லை. தொடர்ந்து கொண்டிருந்த மோதலுக்கு ஒரு தீர்வுக்கான முன்வைக்கப்பட்ட பரந்த கோட்பாடு அதிகாரப் பரவலாக்கமே தவிர பன்முகப்படுத்தல் அல்ல. ''பிரஜைகளின் மட்டத்துக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதே எனது நோக்கம்'' என்று ராஜபக்ஷ தனது மகிந்த சிந்தனைக் கையேட்டில் (பக்கம் 32) குறிப்பிட்டிருந்தார்.

இரு வருடங்களுக்கு சற்றுக் கூடுதலான காலம் கடந்த நிலையில் 2008 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கில் போர் கொடூரமான முறையில் தீவிரப்படுத்தப்பட்டிருந்த போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உலகநாடுகளின் மனித உரிமைகள் நிலைவரங்களை ஆராயும் முதலாவது கூட்டத் தொடரில் (First Universal Periodic Review (UPR) on Human rights) இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இது நடந்தது 2008 ஏப்ரிலில் அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்டதொரு அரசியல் தீர்வைக் காண்பதில் பற்றுறுதி கொண்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் அந்தக் கூட்டத் தொடரில் உறுதியளித்தது. ''இது வெறுமனே இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட ஒரு வாக்குறுதியல்ல, சர்வதேச நிறுவனங்களுக்கும் கூட வழங்கப்பட்ட வாக்குறுதியாகும்'' என்று அப்போது இந்திய அதிகாரியொருவர் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

2010 ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்காக அதே மகிந்த சிந்தனையின் இரண்டாவது பதிப்பு வெளியிடப்பட்டது. ''சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவ குழு முக்கியமான அரசியல் பிரச்சினைகளை பரந்த விவாதத்துக்கு கொண்டுவந்த நிலையில், அந்த மகாநாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்த அதேவேளை, உயர்மட்டத்திலிருந்து தீர்வுகளைத் திணிப்பதற்குப் பதிலாக இந்தச் செயன்முறைகள் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மக்களுக்கு இடையே பரந்ததொரு கருத்தொருமிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன (பக்கம் 55) அந்த மகிந்த சிந்தனையின் சிங்கள வடிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மிலேச்சத்தனமான முறையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு இருவருடங்கள் கடந்த நிலையில் 2011 மேயில் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லி விஜயம் செய்தார். அவ்விஜயத்தின் போது இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் இருதரப்பு உறவுகளின் முழு அம்சங்களையும் ஆராய்ந்த பின்னர் மே 17 ஆம் திகதி கூட்டறிக்கையொன்றை விடுத்தனர். அந்த அறிக்கையில் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பது குறித்தும் குறிப்பிடப்பட்டது.

> புதுடில்லியை பொறுத்தவரை அதன் அக்கறை தமிழ்நாட்டின் ஆரவாரங்களை தணித்து இலங்கையுடனான பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களில் கவனம் செலுத்துவதாகவே இருக்கிறது

இலங்கையில் ஆயுதமோதலின் முடிவு உண்மையான தேசிய நல்லிணக்கத்தை நோக்கி செயற்படுவதற்கு, புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர விட்டுக்கொடுப்பு உணர்வுடன் சகல விவகாரங்களையும் கவனிப்பதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பமொன்றை உருவாக்கியிருக்கிறது. இந்தப் பின்புலத்திலே, இலங்கை அரசாங்கத்துக் கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளின் விரைவானதும் பயனுறுதி வாய் ந்ததுமான முன்னேற்றத்தை உறுதிசெய்வதென்ற தனது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இலங்கை வெளியுறவு அமைச்சர் மீளவலியுறுத்தினார். அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கல் திட்டமொன்று நல்லிணக்கத்துக்கு அவசியமான சூழ்நிலைகளை உருவாக்குவதை நோக்கிய செயன்முறைகளுக்கு பங்களிப்புச் செய்யும் என்று அந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2011 மேயிலும் கூட ராஜபக்ஷ அரசாங்கம் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வொன்றைக் காண்பதில் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறி காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தது. ஒன்றரை வருடங்கள் கழித்து அவர்கள் தங்களது பாதையை மாற்றுவதற்கு சூழ்நிலை எவ்வாறு இருக்கிறதென்று சோதித்துப் பார்ப்பதில் ஈடுபட்டார்கள். 2012 அக்டோபரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோதாபய ராஜபக்ஷ அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை உடனடியாகவே ரத்துச் செய்ய வேண்டுமென்று ஊடகங்களுக்குக் கூறினார். இத்தகைய அரசியல் கருத்துகளைக் கூறுவதற்கு அரசாங்க உத்தியோகத்தரான அவருக்கு எந்த அருகதையுமே யில்லை என்றபோதிலும், அவர் ஒரு அரசியல்வாதி போன்றே பேசினார்.

''அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் போரின் முடிவுக்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறதேயன்றி, வேறு ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை'' என்று கோதாபய ராஜ பக்ஷ கூறியதாக 2012 அக்டோபர் 13 ஆம் திகதி ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

''வெளியார் தலையீடு பயன்தரப் போவதில்லை என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும், இலங்கையரில் பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கான தீர்மானங்களை எடுப்பதற்கான சுதந்திரம் அதற்கு இருக்க வேண்டும்'' என்று பாதுகாப்புச் செயலாளர் மேலும் கூறியதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1987 ஜூலையில் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் மாகாண சபைகளை ஏற்படுத்துவதற்கென்று அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

திவிநெகும சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் அது சகல அடிமட்ட, உள்ளூர் மட்ட முன்முயற்சிகளையும் திட்டங்களையும் மத்திய அரசாங்க அமைச்சர் ஒருவரின் கீழ் மத்திய மயப்படுத்திவிட்டது. 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு இருந்த உள்ளூர் அபிவிருத்திக்கான ஆணை நாசமாக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டுவிட்டது. இத்தகைய பின்புலத்தில்தான் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்யவேண்டுமென்ற புதிய கோரிக்கைக்கு கொழும்பில் உள்ள அரசியல் அதிகாரபீடத்திடமிருந்து தலையசைப்புக் கிடைத்திருக்கிறது.

இத்தகையதொரு அரசியல் சூழ்நிலைக்கு மத்தியிலேயே, பேராசிரியர் பீரிஸ் இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 8ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக புதுடில்லி சென்றார். அங்கு அவர் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் ஜனவரி 22 (2013) கூட்டறிக்கையொன்றில் கைச்சாத்திட்டார். அந்த கூட்டறிக்கை அதிகாரப் பரவலாக்கம், அரசியல் தீர்வு, 13ஆவது திருத்தம் என்பவற்றைத் தவிர, சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்தக் கூட்டறிக்கை 2011 மே 17 வெளியிடப்பட்ட முன்னைய கூட்டறிக்கையின் வாயிலாக (பிரிவு 4 இன் கீழ்) புதுடில்லி வழங்கிய உறுதிமொழியை மீறுவதாக அமைகிறது. தமிழர் அரசியலுக்குக் காலம் மாறிவிட்டது என்பதற்கான ஒரு தெளிவான அறிகுறியாகும்.

அத்துடன், புதுடில்லியின் ஊடாகப் பிரயோகிக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணக்கிட்டுக் கொண்டிருந்த இராஜதந்திர மற்றும் அரசியல் நெருக்குதலை முற்றுமுழுதான ஒரு முடிவுக்குக் கொண்டுவருகிறது. 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வு என்றும் உள்நாட்டில் உருவாக்கப்படும் தீர்வு என்றும் இந்த அரசாங்கம் கூறிக்கொண்டுவந்ததெல்லாம் (ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு அக்கறையுடனான முன் முயற்சிகளை எடுப்பதைத் தவிர்த்து) காலத்தை இழுத்தடிப்பதற்கேயாகும். அதேவேளை புதுடில்லியைப் பொறுத்தவரை அதன் அக்கறை தமிழ்நாட்டின் ஆரவாரங்களைத் தணித்து பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களில் கவனம் செலுத்துவதாகவே இருக்கிறது. பொருளாதார அபிவிருத்தியின் மூலமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு பயன்கிடைக்குமென்று நம்பச் செய்யும் நோக்குடனான உறுதி மொழிகளை புதுடில்லி வழங்குகிறது.

''வர்த்தகம்,முதலீடு, அபிவிருத்தி ஒத்துழைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சக்தி, விவசாயம், சுகாதாரம், மக்களுக்கிடையிலான தொடர்புகள், கலாசாரம் மற்றும் கல்வி உட்பட இருதரப்பு உறவுகளின் அம்சங்கள் முழுவதையும் இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர். இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய கணிசமான முன்னேற்றங்கள் குறித்து இருதரப்பினரும் திருப்தி வெளியிட்டனர்'' என்று ஜனவரி 22 வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

புதுடில்லியின் தற்போதைய முயற்சிகள் எல்லாம் இந்திய வர்த்தக அக்கறை பற்றியதேயாகும். அடுத்த மூன்று வருடங்களில் இந்தியாவுடனான வர்த்தகத்தை 1000 கோடி டொலர்களுக்கு அதிகரிக்க முடியுமென்று இலங்கை அரசாங்கமும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதனால், அவர்கள் சர்வதேச பயங்கரவாதம் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கான இருதரப்பு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். மிகவும் முக்கியமான உடன்படிக்கை மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட இரட்டைவரித் தவிர்ப்பு உடன்படிக்கையாகும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு இரு நாடுகளுக்கும் இப்போது காரணங்கள் பெருமளவிற்கு இல்லை. 2012 நவம்பரில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் யூ.பி.ஆர். கூட்டத்தொடரில் தனது செயற்திட்டம் தொடர்பான அறிக்கையை இலங்கை சமர்ப்பித்திருந்தது. எனவே, அரசியல் தீர்வொன்று பற்றிய குறிப்பு எதுவுமில்லாமலேயே வெளியிடப்பட்டிருக்கும் கூட்டறிக்கை இரு நாடுகளினதும் மக்களுக்கான பொருளாதார அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பொதுவான இலக்குகளை அடைவதற்கு விசேட பொருளாதாரக் கூட்டுப் பங்காண்மை கட்டமைப்பு ஒன்றை நிருமாணிப்பதற்கான தேவையை இருநாடுகளும் அங்கீகரிப்பதாகக் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வர்த்தக, உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை எடுப்பதற்கு இரு நாடுகளும் தீர்மானித்திருப்பதாகவும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

பிரதம நீதியரசர் திருமதி பண்டாரநாயக்கவை பதவி நீக்கியபிறகு மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை நீதிமன்றங்கள் மீது இந்த ராஜ பக்ஷ ஆட்சி கொண்டிருக்கும் பிடி சிறுபான்மையினங்களின் அரசியலை மேலும் கஷ்டமானதாக்குகிறது. இந்தியா இப்போது கண்டும் காணாமல் இருப்பதால், ராஜபக்ஷ ஆட்சி தான் விரும்பியபடி தீர்மானங்களை எடுக்க முடியும். சிங்கள அரசியலுக்கு சாதகமானமுறையில் வடக்கு-கிழக்கு இணைப்பு துண்டிக்கப்பட்டபோது சரத் என்.சில்வா பிரதம நீதியரசராக இருந்த கால கட்டத்தையும் விட கூடுதலான அளவுக்கு நம்பிக்கையும் ராஜபக்ஷாக்கள் தீர்மானங்களை எடுக்கக்கூடும். சிங்கள ஆதரவுத்தளம் அருகிப்போவதை இந்த அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே, சிங்கள செல்வாக்குடனான நீதித்துறையே இனிமேல் எந்தவொரு தமிழர் அரசியல் விவகாரம் தொடர்பிலும் தீர்ப்பு வழங்கப்போகிறது. அரசாங்கம் நினைக்கிற விதத்தில் காரியங்கள் நடந்தேறும்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை புதுடில்லிக்கு எந்த விதத்திலும் அக்கறைக்குரிய ஒரு விடயமாக இருக்கவில்லை. ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையை (பிந்திய கூட்டறிக்கையில்) இரு அரசாங்கங்களினாலும் எவ்வாறு கைவிடக்கூடியதாக இருந்தது? இதற்கு தற்போதைய புதுடில்லி, ஆட்சியாளர்களின் பூகோள அரசியல் தேவைகளைப் புரிந்துகொள்வதில் தமிழ் அரசியல் தலைமைத்துவம் இழைத்திருக்கும் தவறும் காரணம். ஜனாதிபதி ஜெயவர்தன கூடுதலான அளவுக்கு மேற்குலகை நோக்கி, குறிப்பாக அமெரிக்கா நோக்கிச் செல்வதற்கு எதிராக எச்சரிக்கை செய்வதற்காகவே 32 வருடங்களுக்கு முன்னர் இந்திராகாந்தியின் அரசாங்கம் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தியது. அந்தக் காலகட்டத்தில் இந்தியா பெருமளவுக்கு அணிசேரா கொள்கையைக் கடைப்பிடித்ததுடன், சோவியத் ரஷ்யாவுக்குச் சார்பானதாகவும் இருந்தது. இன்று வேறுபட்டதொரு உலக ஒழுங்கில் வித்தியாசமானதொரு இந்தியாவையே நாம் காண்கிறோம். சோவியத் முகாமொன்று இன்று இல்லை என்பதுடன், முன்னரைப் போன்று அணிசேரா கொள்கையை உறுதியுடன் பின்பற்றும் இந்தியாவும் இல்லை. இந்தியா இப்போது கட்டுப்பாடுகள் நிறைவேற்ற ஒரு பொருளாதாரமாகவோ அல்லது கூடுதலான அளவுக்கு அமெரிக்காவுக்கு விரோதமானதாகவோ இல்லை. நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைக்கு மாறிய பிறகு புதுடில்லி அரசாங்கம் சில பாசாங்குச் செயற்பாடுகளைத் தவிர மற்றும்படி மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சி தொடர்பில் அதன் கோட்பாட்டுப் பற்றுடனான நிலைப்பாட்டைக் கைவிட்டுவிட்டது. இந்த நவகாந்தீய ஆட்சி மியன்மாரின் இராணுவ ஆட்சியாளரை பொருளாதார மற்றும் அபிவிருத்தி உதவிகளுடன் ஆதரித்தது. 2008 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் சீனாவுடன் இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றையும் செய்து கொண்டார் கள். அதுமாத்திரமல்ல, சீனாவுடனான வர்த்தகத்தையும் அதிகரித்துக் கொண்டார்கள்.

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களின் மனதுக்கு பிடித்தமான முறையில் செயற்படுவதில் ஆர்வத்தைக் காட்டியதனால்தான் காலத்தை வீணே இழந்தது. கூட்டமைப்பினால் இழக்கப்பட்ட நேரத்தை அரசாங்கம் தனக்கு வசதியாக பயன்படுத்திக் கொண்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளில் செறிவை குறைத்துக்கொண்டது. இராணுவமும் தனியான விசேட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது**

அமெரிக்கா இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று நூலை எழுதிய பிரபல சர்வதேச அரசியல் விமர்சகரான சாஜாட் ஷவுகாத் “குளோபல் நீச்'' இல் 2012 டிசம்பர் 13 ஆம் திகதி அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்கள் குறித்து எழுதிய கட்டுரையொன்றில் “இஸ்லாமிய உலகில் பாகிஸ்தான் மாத்திரமே அணுவாயுதத்தைக் கொண்டிருக்கும் நாடு. அதனால், அமெரிக்காவும் இந்தியாவும் இஸ்ரேலும் பாகிஸ்தானைப் பல வீனப்படுத்த உறுதிபூண்டிருக்கின்றன. ஆளில்லா விமானத்தாக்குதல் இந்தத் திட்டங்களின் ஒரு அங்கமேயாகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பழைய கூட்டுகள் புதிய ஜனநாயக விரோத, சுயநலக் கூட்டுகளுக்கு வழிவிட்டுக் கொடுக்கிற இன்றைய புதிய உலக ஒழுங்கிலே இது ஒரு சுவாரஸ்யமான முக்கோண நேச அணியாகும். இந்தியாவின் இந்த நவகாந்தீய நோக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரியாகப் புரிந்து கொண்டதாக இல்லை. தமிழர்களுக்கு ஆதரவான கோஷங்களை ஆரவாரத்துடன் எழுப்புகின்ற தமிழ் நாட்டு அரசியல் புதுடில்லியை வழிக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு காரணியாக இருக்குமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னமும் நம்புகிறது. அந்த உள்ளூர் ஆதரவுத் திரட்டல்களையும் அணி திரட்டல்களையும் சர்வதேச மற்றும் பிராந்திய கூட்டுகளினால் பதிலீடு செய்ய முடியும். ஆனால், கொழும்பில் ராஜபக்ஷ ஆட்சி மீது பலமான நெருக்குதல்கள் இல்லாத பட்சத்தில் எதுவுமே பயன் தரப்போவதில்லை.

சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவை போரை மறைப்பதற்கான ஒரு மூடுதிரையாக ராஜபக்ஷ ஆட்சி பயன்படுத்தியது. பெரும்பாலான விவகாரங்கள் முக்கியத்துவம் பெறுவதும் பிறகு நாளடைவில் மறக்கப்படுவதும் அரசியலில் அடிக்கடி இடம்பெறுகிறது. சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக்குழு, கற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எல்லாம் அப்படித்தான். நல்லிணக்க ஆணைக்குழு விவகாரத்தைப் பொறுத்தவரை, அதன் அரசியல் முக்கியத்துவத்தை ஒதுக்கிவிட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களின் மனதிற்குப் பிடித்தமான முறையில் செயற்படுவதில் ஆர்வம் காட்டியதனால், காலத்தை வீணே இழந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் இழக்கப்பட்ட நேரத்தை அரசாங்கம் தனக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொண்டு ஆணைக்குழுவின் விதப்புரைகளின் செறிவைக் குறைத்துக் கொண்டது. இப்போது அரசாங்கம் ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் விதப்புரைகளுக்கும் மாற்றாக இராணுவத்தைக் கொண்டு ஒரு விசேட அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

இருவருடங்களுக்கும் கூடுதலான காலத்துக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதித்துவக்குழுவின் இறுதி அறிக்கை வித்தியாசமானது. அதற்கு இன்னமும் அரசியல் கனதியிருக்கிறது. சர்வகட்சி மகாநாட்டில் பங்கேற்றிராவிட்டாலும், அந்த அறிக்கை தயாரிப்பில் சம்பந்தப் படாவிட்டாலும் கூட அந்த அறிக்கையை அரசாங்கத்துடனான தங்களின் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தியிருந்தால், அது ஜனாதிபதி ராஜபக்ஷவின் வாட்டர்லூவாகப் போயிருக்கும்.

சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதித்துவக்குழுவுக்கு உதவுவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ நிபுணர்கள் குழுவொன்றைக் கூட நியமித்தார். இதையடுத்து 21 அத்தியாயங்களைக் கொண்ட வரைவு கையளிக்கப்பட்டது. சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதித்துவக்குழு அதன் ஆராய்வுகளைப் பூர்த்தி செய்வதற்கு சுமார் இருவருடங்கள் சென்றன.

சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதித்துவக் குழு ஒவ்வொரு அத்தியாயத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றது. இந்த ஆலோசனைகள் பிரதிநிதித்துவக் குழுவில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகளின் ஊடாக வழங்கப்பட்டது என்று சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவின் அறிக்கைக்கு சமானமான அறிக்கையொன்றைத் தயாரித்த பாராளுமன்ற உறுப்பினர் பி.யோகராஜனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நிசாம் காரியப்பரும் தங்களது அறிமுகக்குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள். சகல 21 அத்தியாயங்கள் தொடர்பிலும் கருத்தொருமிப்புக் கண்டநிலையில் 128 கூட்டங்களுக்குப் பிறகு 2010 ஜூனில் சர்வகட்சி மகாநாட்டு ஆராய்வுகள் முடிவுக்கு வந்தன.

இத்தகையதொரு கருத்தொருமிப்பைக் காண்பதென்பது மிகப்பெரியதொரு சாதனையாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடங்கி மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிகஹெல உறுமய வரை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தொடங்கி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மனோகணேசன் வரை, லங்கா சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சிபோன்ற இடதுசாரிக் கட்சிகள் உள்ளடங்கலாக சகல வகையான அபிப்பிராயங்களும் பெறப்பட்டிருந்தன என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கான நோக்கில் நடத்தப்படக் கூடிய சகல எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக மேற்கூறப்பட்ட கருத்தொருமிப்பை எடுத்துக் கொள்ளாமல் விட்டதன் மூலமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு காலத்தை விரயம் செய்துவிட்டது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஜனாதிபதி ராஜபக்ஷ பகிரங்கப்படுத்தியபோதிலும், சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவின் இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்த அவர் அஞ்சுகிறார். அதற்குக் காரணம் அந்த அறிக்கையினால் சாதிக்கக்கூடியதாக இருந்த அரசியல் கருத்தொருமிப்பே தவிர, வேறு எதுவுமில்லை.

உத்தேச பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான அடிப்படையாக சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவின் அறிக்கையில் காணப்பட்ட கருத்தொருமிப்பை முன்னிறுத்தி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வருமேயானால், அது நிலைவரங்கள் முழுவதையும் மீண்டும் ஒரு தடவை மாற்றியமைக்கும். ஆனால், அந்தப் பிரசாரம் கொழும்பில் நடத்தப்பட வேண்டும். கொழும்பு வீதிகளில் தமிழர்கள் இறங்க வேண்டும். குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட 2011 குடிசன விபரப்பட்டியலில் கொழும்பில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் வசிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தீவிர அரசியல் பங்கேற்புக்காக இந்தத் தமிழர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அணுக வேண்டிய தருணம் இது. தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பு காலிமுகத்திடலில் சமஷ்டிக் கட்சி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சத்தியாக்கிரகத்தை நடத்திய 1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு கொழும்பில் தமிழர் அரசியல் முற்றுமுழுதாக இல்லாமற் போய்விட்டது. தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட இந்தப் பிரசன்னமின்மையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் விடுபட்டு கொழும்பு வீதிகளில் இறங்க வேண்டிய தருணம் இது. கொழும்பில் தான் அதிகாரம் தங்கியிருக்கிறது. தீர்மானங்களும் கொழும்பிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதனால், புதிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்துகொள்வதற்கு அதிகாரத்தை கொழும்பிலேயே சவாலுக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்.சத்தியமூர்த்தி

பிராந்திய அரசியல்

# தேர்தல் களமாகும் தெற்காசியா

இந்தியாவிலும் சரி தெற்காசியாவின் பிற நாடுகளிலும் சரி ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் கொள்கை மாற்றங்கள் ஏற்படும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்தியாவில் தேர்தல் முடிந்து இடைப்பட்ட காலத்தில் காங்கிரஸோ அல்லது பாரதீய ஜனதாவோ பங்கு பெறாத மூன்றாவது அணியின் ஆட்சி இடம்பெறக்கூடிய வாய்ப்பும் கூட உள்ளது

தெற்காசியா ஒன்றும் ஐரோப்பிய ஒன்றியம் அல்ல - உறுப்பு நாடுகளுக்கு அப்பால் சென்று, செயல்படும் அல்லது செயல்படாத, ஒருங்கிணைந்த பாராளுமன்றமும் அதற்கான மேற்கு ஐரோப்பிய கண்டம் தழுவிய தேர்தல்கள் நடைபெறுவதற்கு. ஆனால், இலங்கை தவிர ஏனைய தெற்காசிய நாடுகளில் அடுத்த ஓராண்டுக்கும் மேலான காலகட்டத்தில் தேசிய அளவிலான தேர்தல்கள் நடைபெற உள்ளன. ஏன், இலங்கையில் கூட 2016ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டோ, அடுத்த ஆண்டோ நடைபெறலாம் என்று தொடர்ந்து சில அரசியல் நோக்கர்கள் ஆரூடம் கூறி வருகின்றனர்.

''சார்க்'' அமைப்பின் கீழ், ஐரோப்பிய கண்டம் போலவே, இந்திய துணைக் கண்டத்திலும் அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ஒருங்கிணைந்த கொள்கைகளும், தொலைநோக்கும் இருக்க வேண்டும் என்று கூறுவோர் உள்ளனர். அதே சமயம், இன்னும் தீர்க்கப்படாத உள்நாட்டு மற்றும் இரு-நாட்டு உறவுகளை தெற்காசிய நாடுகளில் ஒவ்வொன்றும் தீர்க்க வேண்டியுள்ளது. அவை முடிவது வரையாவது, மேம்பட்ட தெற்காசிய ஒருங்கிணைப்பு, ''ஒரு பேச்சு''க்காக மட்டுமே இருக்க முடியும்.

''தெற்காசிய ஒருங்கிணைப்பு'' என்று கூறும் போதே, ஐரோப்பிய ஒன்றியமும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ''ஆசியான்'' அமைப்புமே நினைவிற்கு வரும். இரண்டில், ''ஆசியான்'' உறுப்பு நாடுகளின் பாராளுமன்றங்களுக்கு அப்பாற்பட்ட தனக்கு என்று தனியான சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்ற எந்தவொரு அமைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து வரும் பொருளாதார சிக்கல்கள், சில உறுப்பு நாடுகளையே கவலையில் ஆழ்த்தியுள்ளது. அந்த விதத்தில், ''தெற்காசியா பாராளுமன்றம்'' என்பது போன்ற அமைப்பு உருவாவதற்கு காலம் பிடிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக்கு ஒரு தேர்தல்

எதிர்வரும் ஜூன் மாதம் தொடங்கி, தெற்காசிய நாடுகளில் அடுத்தடுத்து தேசிய அளவில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. முதலில் பூட்டான் நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து, மற்றொரு குட்டிநாடான மாலைதீவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த இரண்டு நாடுகளுமே கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் பல கட்சி முறையிலான ஜனநாயகத் தேர்தல் பாதையில் கடந்த 2008-ஆம் ஆண்டு நடக்கத் தொடங்கின. ஆனால், அவற்றின் இடையேயான வித்தியாசங்களும் மாறுதல்களும் தான் என்ன?

பூட்டான் நாட்டில் மன்னர் ஆட்சி முறை ஆண்டாண்டு காலமாகவே பழக்கத்தில் இருக்கிறது. அந்த வகையில், மக்கள் கோரிக்கை முன்வைக் காவிட்டாலும் மன்னராகவே நாடு ஜனநாயகப் பாதையில் முன்னேறுவதற்கு அடிக்கோலிட்டார். இன்னும் சொல்லப் போனால், மன்னராட்சியே தொடர வேண்டும். தங்களுக்கு தேர்தல் ஜனநாயகம் தேவையில்லை என்று மக்களும் அரசியல் தலைவர்களுமே கோரிக்கை வைத்தனர். அவர்களை ஜனநாயக பாதையில் பயணிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தியதே மன்னர் தான் என்று குறிப்பிடத்தக்கது.

தற்போது, பூட்டான் நாட்டில், இங்கிலாந்தில் இருப்பது போன்ற மன்னர் தலைமையிலான ஜனநாயகமே கோலோச்சுகிறது. ஆனால், இங்கிலாந்து போன்று ஜனநாயகம் இன்னும் முதிர்ச்சி அடையாத காரணத்தால், அனைத்து அரசியல் கட்சிகளுமே மன்னருடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதிலேயே ஆர்வமாக இருக்கிறார்கள். அரசு நடைபாடுகளிலும் அவர்கள் மன்னரை அண்டியே செயல்படுகிறார்கள். தற்போதைய நிலையில், இப்போதுள்ள மன்னரின் கீழ் அது நாட்டிற்கு நன்மை பயக்கும் என்றாலும், எதிர்காலத்திற்கு இதுவே தவறான முன்மாதிரிகளை ஏற்படுத்தி





பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சியே அந்த நாட்டில் பாராளுமன்றத்தில் ஐந்து ஆண்டுகளுக்கும் முழுமையாக பதவியில் இருந்தது என்று சாதனை படைத்திருக்கிறது

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப்படைகள் விலகிக் கொள்வதற்கு முன்னர் அடுத்த ஜனாதிபதித்தேர்தல் அரங்கேற வேண்டும். அமெரிக்க ஆதரவாளரான ஜனாதிபதி கர்ஸாயின் 2ஆவது பதவிக்காலம் முற்றுப்பெறுவதால் அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது

விடலாம். அப்போது, மாறுபட்ட சூழல்களில், மாறுபட்ட மன்னரின் கீழ், மாறிவிட்ட அரசியல் கட்சிகள் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். அவற்றைத் தவிர்ப்பதற்கும், அத்தகைய சூழலில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் நாடு தற்போதே தன்னை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

## மாலைதீவின் மயக்க நிலை

பூட்டான் நாட்டைப் போல் இல்லாமல், இலங்கையின் அண்டை நாடான மாலைதீவு நாட்டில் பல்முனை ஜனநாயகம் கடந்த ஐந்து ஆண்டுகளில் படாதபாடு பட்டுவிட்டது என்றே சொல்லவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முகமது நஷீத் தடாலடியாக பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்ததும், அதனைத் தொடர்ந்து அவருடைய அரசாங்கத்தில் துணை ஜனாதிபதியாக இருந்தவர் ஜனாதிபதியாக இன்று வரை தொடர்வதும் இதில் ஒரு பகுதி தான். நஷீத் பதவி விலகுவதற்கு முன்னர் அதற்கான எதிர்க்கட்சிகளின் போராட்டமும், ராஜிநாமா செய்த பின், பதவி விலக தான் கட்டாயப் படுத்தப்பட்டதாக அவர் அறிவித்ததும், அதனைத் தொடர்ந்து நாடு அதுவரை கண்டிராத கலவரமும், சர்வதேச சமூகத்தின் கவலையும் கூட ஒரு பகுதி தான். முழு நிலைவரம் இன்னமும் முற்றுப்பெறாத கலவரமே.

மாலைதீவில் இந்த வருடம் நவம்பர் மாதத்தில் தேர்தல் முடிந்து புதிய ஜனாதிபதி பதவி ஏற்க வேண்டும். அந்த நாட்டின் அரசியல் சட்டப்படி ஜனாதிபதித் தேர்தல் ஜூலை மாதம் தொடங்கி எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம். தேர்தல் திகதி முடிவு செய்யும் கடமையும் உரிமையும் அந்த நாட்டு தேர்தல் ஆணையத்திற்கே உள்ளது. ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டு மே மாதம் 77 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடைபெற வேண்டும்.

கடந்த 2008 ஜனாதிபதித் தேர்தல் பன்முக ஜனநாயகத்திற்கு வழி வகுத்தது. சுமுகமான ஆட்சி மாற்றத்திற்கு அப்போதைய ஜனாதிபதி முகமது அப்துல் கயும் முட்டுக்கட்டையாக இருப்பார் என்று அவரது அரசியல் எதிரிகள் கூறி வந்தாலும், அவர், அவர்களது கூற்றை பொய்ப்பித்து விட்டார். இன்னும் சொல்லப் போனால், மாலைதீவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றம் மட்டுமே சுமுகமாக அரங்கேறிய அரசியல் நிகழ்வு. அதனைத் தொடர்ந்து எழுந்ததெல்லாம், பிரச்சினைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைகளும் தான்.

பூட்டான் மற்றும் தெற்காசியாவின் பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மாலைதீவில் மட்டுமே புன்முக ஜனநாயகம் ஒரு விதத்தில் கூட்டாட்சியாக துவக்கத்திலேயே உருவெடுத்தது. இந்தியா, இலங்கை போன்ற பிற நாடுகளில் எல்லாம், அந்தந்த நாடுகள் சுதந்திரம் பெற்று, ஜனநாயக அமைப்புகளாக உருவெடுத்தபோது, அந்தக் காலகட்டத்தில் பிரதான அரசியல் கட்சிகளாக இருந்த காங்கிரஸ், ஐ.தே.க போன்றவை ஒரு கூட்டுக் குடும்பமாகவே செயல்பட்டு வந்தன. பிற்காலத்தில், புரையோடிப் போன கொள்கை மற்றும் தனிநபர் வேறுபாடுகள் உயிர்த்தெழுந்து புதிய அரசியல் கட்சிகளாக உருவெடுத்தன.

மாலைதீவிலோ, எந்த ஒரு சுதந்திரப் போராட்டமும் நடந்தேறாத பின்னணியில், அதிபர் கயுமின் முப்பது ஆண்டு அரசை எதிர்த்த ''ஆட்சி மாற்ற வேட்கையே'' பன்முனைத் தேர்தலாக உருப்பெற்றது. தற்போது, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே நஷீத் எதிர்நோக்கும் வழக்கில் தண்டனை பெற்றால், அவரால் தேர்தலில் நிற்கமுடியாது. தற்போதைய அரசு அந்த விதத்திலேயே காய்களை நகர்த்தி வருவதாக நஷீதின் மாலைதீவு ஜனநாயகக் கட்சி கூறிவருகிறது. அதில் உண்மை இல்லாமல் இல்லை. அவ்வாறு நடைபெற்றால் தேர்தலுக்கு முன்னரே பிரச்சினைகளும் போராட்டங்களும் மீண்டும் தொடங்கிவிடும் வாய்ப்பு உள்ளது.

இந்த முறையும் ஜனாதிபதித் தேர்தலில் பன்முனைப் போட்டியே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக இரண்டாவது சுற்றில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று முன்னணியில் வந்து வெற்றி பெறுபவரே ஜனாதிபதியாக முடியும். அந்தச் சுற்றில் மட்டுமே முதல் சுற்றில் முன்னணியில் வரும் இரண்டு வேட்பாளர்களை சுற்றி புதிய கூட்டணிகள் உருவாகும். அதற்கான பேச்சுவார்த்தைகளும் எதிர்பார்ப்புகளும் இப்போதே துவங்கி விட்டன.





முதலில் தேசிய அரசு இல்லாமல் தேர்தலில் பங்கெடுக்கப்போவதில்லை என்று அறிவித்த காலிதா தலைமை அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டதாகவே தோன்றுகிறது. என்றாலும் ஏதாவது காரணத்திற்காக வன்முறை வெடிக்கும் நிலைமையே தொடர்கிறது.

ஆனால், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் மட்டும் ஒரு தலைவரோ அல்லது கட்சியோ அடுத்த ஐந்து ஆண்டுகளில் பிரச்சினைகளை எதிர்நோக்க மாட்டார்கள் என்று அர்த்தம் அல்ல. அது அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை ஒட்டியே இருக்கும். கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்த அரசியல் மற்றும் அரசியல் சாசனம் சார்ந்த பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணமே ஜனாதிபதி நஷீத், இரண்டாவது சுற்றில் தனக்கு ஆதரவு அளித்த கூட்டணியை உடைத்ததன் காரணமாக பாராளுமன்றத்தில் மெஜாரிட்டி பெறமுடியாததினால் மட்டுமே.

## பாகிஸ்தானில் "பொம்மலாட்டம்"

எதிர்வரும் மாதங்களில் பாகிஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதன் முடிவு அந்த நாடு தொடர்ந்து ஜனநாயகப் பாதையில் பயணம் செய்யுமா அல்லது மீண்டும் இராணுவ ஆட்சிக்கு வித்திட்டுவிடுமா என்ற பயம் அந்த நாட்டு மக்களிடையேயும், அது குறித்த கவலை உலக நாடுகளையும் உலுக்கிக் கொண்டு இருப்பது என்னவோ உண்மை. எது எப்படியோ, தற்போது பதவியில் இருக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சியே அந்த நாட்டில் பாராளுமன்றத்தின் ஐந்து ஆண்டுகளுக்கும் முழுமையாக பதவியில் இருந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய உண்மை. அந்த நாட்டில் அது ஒரு சாதனையும் கூட.

அந்த விதத்தில் ஆளும் கட்சியின் நிறுவனர் பூட்டோவும் அவரது மகள் பெனாஸிரும் பிரதமராக அமர்ந்து சாதிக்க முடியாததை, நாட்டின் தற்போதைய ஜனாதிபதியாக பெனாஸிரின் கணவர் அஸீப் ஸர்தாரி சாதித்து விட்டார் என்றே கூற வேண்டும். என்றாலும், அவர் மீதான பழைய ஊழல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து விசாரித்து, அதனை மூடி மறைக்க முயன்றதாக பிரதமர் கிலானியை பதவி விலக வைத்ததன் மூலம் அந்த நாட்டின் நீதித்துறையும் மக்களுக்கு ஜனநாயகம் மீது புதியதொரு பிடிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் பின்னணியில், அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து அடுத்த ஆண்டு அமெரிக்கா தனது படைகளை விலக்கிக் கொள்வதன் மூலம் பாகிஸ்தானில் தற்போது துளிர் விட்டுவரும் தீவிரவாதம் உச்சக்கட்டத்தைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் ஆட்சியைப் பிடித்து, தனது பெயருக்கு களங்கம் கற்பித்துக் கொள்வதை விட, ஜனநாயக ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற போர்வையில் தொடர்ந்து "பொம்மலாட்டம்" போடலாம் என்றே அந்த நாட்டின் இராணுவம் கருதுவதாகத் தோன்றுகிறது.

ஆனால், அவர்களுடைய தற்போதைய இந்த நிலைமை ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க துருப்புகள் வெளியேறுவதுவரை மட்டுமே இருக்கும். அதற்குப் பின்னர் நாட்டின் அரசியல் கட்சிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையும் செயல்படும் விதத்தை ஒட்டியே இராணுவத்தின் நடவடிக்கைகள் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இதற்கான ஒரு தெளிவான பாதை பாராளுமன்றத் தேர்தலையும் அதன் முடிவையும் ஒட்டியே இருக்கும்.

### ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவும்

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவின் படைகள் விலகிக் கொள்வது பாகிஸ்தானுக்கு மேலும் தலைவலியாக இருக்குமென்றால், அந்த நாட்டிற்கு அது எத்தகைய திருகுவலியாக இருக்கும் என்று நினைத்துப் பார்க்கலாம். இப்போது கூட, ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் உள்ளிட்ட சில பிரதேசங்களில் மட்டுமே அமெரிக்க ஆதரவு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தலைமையிலான அரசின் ஆதிக்கம் செல்லுபடியாகிறது. புற பகுதிகளில் இன்னமும் அந்த நாட்டிற்கே உரித்தான துப்பாக்கி கலாசாரமே தலைதூக்கி நிற்கிறது. அதில் அடாவடித்தனம் அதிகமான தலிபான் தீவிரவாதிகளும் உள்ளடங்குவர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விலகிக் கொள்வதற்கு முன்னர் அங்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அரங்கேற வேண்டும். அமெரிக்க ஆதரவாளரான ஜனாதிபதி கர்ஸாயின் இரண்டாவது பதவிக் காலம் முற்றுப் பெறுவதால் அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவரையடுத்து பதவியேற்கும் ஜனாதிபதி தற்போதைய ஆட்சிமுறையில் அனுபவம் இல்லாமலே இருப்பார்.

அமெரிக்கப் படையின் துணை இல்லாமல், புதிய ஜனாதிபதியால் எத்தனை காலம் பதவியில் தாக்குப் பிடிக்க முடியும் என்பதே தற்போதைய கேள்விக்குறி. அதுவும் தலிபான் அப்போது மீண்டும் தலையெடுக்கத் துவங்கிவிட்டால், அமெரிக்க படையெடுப்பிற்கு முற்பட்ட காலம் போன்றே காபூல் போன்ற சில பகுதிகளைத் தவிர்த்து நாட்டின். பெரும்பான்மையான இடங்களில் தலிபான்களோ அல்லது அந்தந்தப் பகுதிகளில் வேரூன்றிவிட்ட ஆயுதக் குழுக்களோ தங்களது வம்சாவளி 'கட்ட பஞ்சாயத்தை' தொடரலாம். அந்த விதத்தில் அடுத்த ஆண்டின் ஜனாதிபதி தேர்தல், ஆப்கானிஸ்தானின் ஜனநாயக எதிர்காலத்தை நிர்ணயம் செய்யவல்லது.





காங்கிரஸின் துணைத்தலைவராக ராகுல் காந்தியை முன்னிறுத்தியது தேர்தல் வெற்றிக்கு வழிசெய்கிறதோ இல்லையோ பாரதீய ஜனதாவில் உள்ளது போன்று உட்கட்சி குழப்பங்கள் இல்லாத நிலைமையையாவது உருவாக்கி உள்ளது

### தடுமாற்றத்தில் நேபாளம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் மன்னராட்சி முறையை ஒழித்து ஜனநாயகக் குடியரசாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட நேபாளத்தில் தற்போது அரசியல் குழப்ப நிலைமையே தொடர்கிறது. நாட்டின் அரசியல் சட்டத்தை எழுதுவதில் ஏற்பட்டுள்ள கருத்து மோதல்கள் மற்றும் கட்சிகளிடையேயான தொடரும் நம்பிக்கையின்மை ஆகியவற்றைத் தொடர்ந்து, அந்த நாட்டு உச்ச நீதிமன்றம், பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீட்டும் அரசியல் விளையாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். என்றாலும், கட்சிகளிடையேயான ஒற்றுமையின்மையின் காரணமாக, இடைக்கால அரசு மற்றும் பாராளுமன்றத் தேர்தல் குறித்தும் கூட எந்த வித கருத்தொற்றுமையும் ஏற்படாதது வருந்தத்தக்க விடயம்.

எதிர்வரும் மாதங்களில் நேபாளத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது தவிர்க்க முடியாத விடயம் என்றே தோன்றுகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் குழப்பம் விளைவிப்பார்கள் என்றால், நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதக் குழு தனது அரசியல் பயணத்தை முடித்துக் கொண்டு, மீண்டும் ஆயுதம் தூக்குவார்களோ என்ற பயம் அந்த நாட்டில் பல அரசியல் கட்சிகளுக்கும் கூட இருக்கிறது.

தங்களது கொள்கைகளை செயல்படுத்தும் விதத்தில் அரசு அமைந்தால் மட்டுமே மாவோயிஸ்டுகள் மிதவாத அரசியலில் தொடர்வார்கள். இல்லையென்றால், மீண்டும் காடுகளுக்கு திரும்பிச் சென்று, நாட்டு மக்களையும், அரசியல் கட்சிகளையும், ஆட்சியாளர்களையும் குறிவைப்பார்கள் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. மவோயிஸ்ட் கட்சிக்குள் மிதவாதிகளுக்கும் தீவிரவாத எண்ணம் உள்ளோருக்கும் இடையே கடந்த வருடம் தோன்றிய பிளவு வெறும் நாடகமே என்று கூறுவோரும் உள்ளனர். எது எப்படியோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னராட்சி முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர், மக்களாட்சி முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மேலும் காலதாமதம் இல்லாமல் அமையாவிட்டால், மாவோயிஸ்டுகளின் குழப்பவாத சிந்தனைக்கும் செயல்பாடுகளுக்கும் நடுவில் அந்த நாட்டிலும் குழப்பமே நிலைபெற்று விடுமோ என்று தோன்றுகிறது.

## வங்க தேசம் என்ன சொல்கிறது?

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை குழப்பவாதம் மிகுந்த நாடாக இருந்த வங்க தேசத்தில் முறைப்படி, முறையான நேரத்தில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் என்பதே ஆறுதலான விடயம். பிரதமர் ஹசினாவின் அவாமி கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசை எதிர்த்து முன்னாள் பிரதமர் காலிதா ஸியா-வின் வங்க தேச தேசியக் கட்சி கூட்டணி மோதும் பாராளுமன்றத் தேர்தல் இந்த ஆண்டின் கடைசியிலேயோ அடுத்த ஆண்டின் துவக்கத்திலேயோ நடைபெறவுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் அரங்கேறிய அரசியல் குழப்பங்களைத் தொடர்ந்து, இராணுவத்தின் ஆதரவுடனான தேசிய அரசின் கீழ் தேர்தல்கள் நடைபெற்று, காலிதா ஸியாவின் ஆட்சி முடிவிற்கு வந்தது. அதனைத் தொடர்ந்து மீண்டும் ஆட்சிக்கு வந்த பிரதமர் ஹசீனா, தேர்தலுக்கு முன்னான "தேசிய அரசு'' முறையை ஒழித்தார். அதற்கு அந்த நாட்டு உச்ச நீதிமன்றமும் ஒப்புதல் அளித்தது.

முதலில் தேசிய அரசு இல்லாமல் தேர்தலில் பங்கெடுக்கப்போவதில்லை என்று அறிவித்த காலிதா தலைமை, அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டதாகவே தோன்றுகிறது. என்றாலும், அரசியல் வன்முறைக்கு பெயர் போன வங்க தேசத்தில் இந்த பிரச்சினையாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காகவோ வன்முறை வெடிக்கும் நிலைமையே தொடர்கிறது. அதன் தாக்கமும் வீரிய





மக்கள் ஆட்சி முறையின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட அரசு மேலும் காலதாமதம் இல்லாமல் அமையாவிட்டால் மாவோயிஸ்டுகளின் குழப்பவாத சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் நடுவே நேபாளத்தில் குழப்பம் நிலைபெற்று விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது

மும் தேர்தல் எதிர்பார்ப்புகள் மற்றும் முடிவுகளை ஒட்டியே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

என்றாலும் கடந்த தேர்தல் சமயத்தில் வெளியில் இருந்து வழிமுறைகளை சுட்டிக்காட்டிய அந்த நாட்டு இராணுவம் இந்த முறையும் குழப்பமும் வன்முறையும் மீண்டும் தோன்றினால், வாளாவிருந்து கொண்டு வேடிக்கை பார்க்கும் என்று எதிர் பார்க்க முடியாது. அவ்வாறானால், முன்பு ஒரு முறை ஆட்சியைப் பிடித்துப் பழக்கமுள்ள இராணுவம் தனக்கென்று எந்தவிதத்தில் அரசில் பங்களிக்கும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஆனால், இதிலுள்ள உண்மை அந்த நாட்டின் அரசியல் கட்சிகளுக்கும் தெரிந்தே உள்ளது.

## இந்தியா எங்கே போகிறது?

தெற்காசியாவின் பிற நாடுகளில் தேர்தல் மூலம் தோன்றும் மாற்றங்களோ, அல்லது நிலைநிறுத்தப்படும் அரசியல் தொடர்ச்சியோ, அந்தந்த நாடுகளிலேயே தாக்கம் கொள்ளும். ஆனால், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய பாராளுமன்றத் தேர்தல், தெற்காசிய பிரதேசம் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் கண் கொட்டாமல் பார்க்கும் ஓர் ஐந்தாண்டு நிகழ்வாகும். உலகின் பல நாடுகளின் மொத்த மக்கள் தொகையை விட மிக அதிகமாக 70 முதல் 75 கோடி வாக்காளர்கள் பங்குபெறும் இந்திய தேர்தல் திருவிழா, மத்தியில் கூட்டணி ஆட்சி என்றான பிறகு முன்னெப்போதும் இல்லாத வகையில் உலகளவில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

அடுத்த ஆண்டு 2014-ஆம் ஆண்டு மே மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற நிலையில், அந்த தேர்தலை இந்த ஆண்டு முடிவிற்குள் நடத்திவிட வேண்டும் என்று மத்தியில் ஆளும் கூட்டணியின் காங்கிரஸ் கட்சித் தலைமையில் ஒரு பகுதியினர் கருதுவதாகவே தோன்றுகிறது. காரணம், அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் ஒன்பது அல்லது பத்து மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளன. இதன் காரணமாக கட்சி தொண்டர்கள் நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் சோர்வடைந்து விடுவார்கள் என்பது ஒரு காரணம்.

அதை விட முக்கிய காரணம், எங்கே அடுத்தடுத்து சட்டசபைத் தேர்தல்களில் கட்சி தோல்வி அடைந்து விட்டால், அதுவே பாராளுமன்றத் தேர்தலிலும் ஆளும் கூட்டணிக்கு எதிரான மனநிலையை வாக்காளர்களிடையே ஏற்படுத்தி விடுமோ என்றும் காங்கிரஸ் கட்சி தலைமை கருதுவதாகவும் தெரிகிறது. அது போன்றே எதிரணியான பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணியிலும் பேச்சுக்கு என்று மட்டுமே வெற்றி வாய்ப்பு குறித்து கருத்துகள் வெளியிடப்படுகின்றன.

(31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# மாலியில் இராணுவத் தலையீடு மாத்திரம் போதுமானதல்ல

**மாலி நிலைவரம் வெளிக்காட்டியிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் முழுமையாக கவனித்து தீர்வு காண வேண்டிய ஆழமான பிராந்தியப் பிரச்சினைகளின் அறிகுறிகளே**



கொபி அனான்

உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் மேற்கு ஆபிரிக்கா மிகவும் அரிதாகவே முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, உலகம் பூராவும் செய்தித்தலைப்புகளிலும் அரசியல் விவாதங்களிலும் மேற்காசிய ஆதிக்கம் செலுத்துகிறதென்றால் அங்கு ஏதோ பாரதூரமான பிரச்சினை மூண்டிருக்கிறது என்பது தெளிவானது.

மாலியின் வடபகுதியை அல்-கயெடா குழுவொன்று கைப்பற்றியிருப்பதும் அல்ஜீரியாவில் இடம்பெற்ற அச்சந்தருகிற நிகழ்வுகளும் பிராந்தியத்தின் தீவிரவாத அச்சுறுத்தலையும் உலகளாவிய ரீதியில் அது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன. தற்போது மேற்கொள்ளப்படுகிற கூட்டு இராணுவ நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆனால், அந்த நடவடிக்கைகள் இந்த நெருக்கடியின் மூலகாரணங்களையும் மாலிக்கு மாத்திரமல்ல, பிராந்தியம் முழுவதற்குமே இருக்கிற அச்சுறுத்தலையும் இருட்டடிப்புச் செய்துவிடக்கூடாது. நாம் கண்டிருக்கக்கூடிய உண்மையான முன்னேற்றத்தை தலைகீழாக்கி விடக்கூடிய பாரதூரமான ஒரு அச்சுறுத்தலாகும் இது.

உலகின் மிகவும் வறிய பகுதிகளில் ஒன்றாக மேற்கு ஆபிரிக்கா இருக்கலாம். ஆனால், அண்மைக்காலத்தில் அறியக்கூடியதாக இருக்கும் செய்திகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு உற்சாகம் தருகின்றன. கெடுபிடியுத்தத்திற்கு (Cold war) பின்னரான வன்முறையும் குழப்பமும் நிறைந்த காலப்பகுதிக்குப் பிறகு மூலப்பொருட்களில் ஏற்பட்ட திடீர்வளர்ச்சி, முன்னரையும் விட நலம்வாய்ந்த பொருளாதார முகாமைத்துவ, மனித முதலீடு மற்றும் கடன் நிவாரணம் ஆகியவற்றின் ஆதரவுடன் கவனத்தைத் தூண்டுகிற ஒரு வளர்ச்சியை மேற்காசியா கண்டிருக்கிறது.



பெப்ரவரி 02ஆம் திகதி மாலிக்கு விஜயம் செய்த பிரெஞ்சு ஜனாதிபதி ஹொலண்டே விமான நிலையத்தில் பிரெஞ்சு துருப்புகள் முன்னிலையில் உரையாற்றுகிறார். அருகில் மாலியின் இடைக்கால ஜனாதிபதி டியோன்கவுண்டா ட்ராவோர்

தங்கம், யூரேனியம், எண்ணெய், வாயு, வைரம், கொக்கோ மற்றும் கோப்பி போன்ற பண்டங்களைப் பொறுத்தவரை, உலகின் பிரதான வளமூலங்களில் ஒன்று என்றவகையில் மேற்கு ஆபிரிக்காவின் கேந்திர முக்கியத்துவப்பெறுமதியும் வளர்ந்து கொண்டே போகிறது. அமெரிக்கா மாத்திரம் 2015 ஆம் ஆண்டளவில் அதன் எண்ணெய் இறக்குமதிகளில் சுமார் 25 சதவீதத்துக்கு இந்தப் பிராந்தியத்தின் மீதே தங்கியிருக்கப்போகிறது. இதன் மூலமாக மேற்கு ஆபிரிக்கா புதிய முதலீடுகளையும் கூடுதலான அளவுக்கு இராஜதந்திரக் கவனத்தையும் பெறப்போகிறது. ஆனால், நேர்மறையான நிகழ்வுப்போக்குகள் குறைவாகவே காணப்படுகின்றன. மாலி நிலைவரம் விழிப்படையுமாறு விடுக்கப்படுகின்ற ஒரு உரத்த எச்சரிக்கை அழைப்பாகும்.

மேற்கு ஆபிரிக்காவின் உறுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்கு மிகவும் வலிமைமிக்க ஆபத்துகளில் ஒன்று கடந்த ஒரு தசாப்த காலத்தில் போதைப்பொருள் கடத்தலிலும் ஏனைய கிறிமினல் நடவடிக்கைகளிலும் ஏற்பட்டிருக்கும் பாரிய அதிகரிப்பாகும். இப்பிராந்திய லத்தீன் அமெரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்கு போதைப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கான பிரதான மார்க்கமாக மாறியிருக்கின்ற அதேவேளை, அபின் கலந்து பொருட்கள் ஆப்கானிஸ்தானில் இருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் கிழக்கு ஆபிரிக்கா ஊடாக மேற்கு ஆபிரிக்காவை வந்தடைகின்றன. இங்கு அவை கத்தரிக்கப்பட்டு பொதிசெய்யப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. ஒவ்வொருவருடமும் மேற்கு ஆபிரிக்கா ஊடாக குறைந்தது 60 தொன் கொக்கெயின் கொண்டுபோகப்படுகிறது என்று போதைப் பொருட்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் மதிப்பிடுகிறது. ஆட்கடத்தல், சிறியரக ஆயுதங்கள் கடத்தல் மற்றும் வைரம் கடத்தல் ஆகியவற்றுக்கான ஒரு கடந்து செல்கை மார்க்கமாகவும் கடற்கொள்ளை மற்றும் ஆட்களைக் கடத்திப் பணயம் வைத்தலுக்கான ஒரு தளமாகவும் இப்பிராந்தியம் வெளிப்பட்டிருக்கிறது. இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலமாக கிடைக்கப்பெறுகின்ற இலாபங்கள் தீவிரவாதக்குழுக்களுக்கு நிதியுதவி செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதாக ஐக்கிய நாடுகளின் அமைப்புகள் எச்சரிக்கை செய்கின்றன.

ஆட்சிமுறையும் வறுமையும் புவியியலும் தேசங்கடந்த கிறிமினல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்படக் கூடிய பிராந்தியமாக மேற்கு ஆபிரிக்காவை மாற்றிவிட்டிருக்கின்றன. நிறுவனங்கள் பலவீனமானவை. எல்லைகள் பாதுகாப்பற்றவை. சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக எளிதில் ஊடறுத்து பயன்படுத்தக்கூடியவை. கரையோரப்பகுதிகளில் போதுமான ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. குறைந்த சம்பளத்தைப் பெறுகின்ற அதிகாரிகள் எளிதில் இலஞ்சத்துக்கு வசப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இராணுவமும் சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புகளும் கிளர்ச்சிகளுக்கும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிற குற்றச்செயல்களுக்கும் எதிரான பிரதான பாதுகாப்பு ஏற்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்தப் பாதுகாப்பு அமைப்புகள் அவற்றினால் அரசாங்கங்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்காக வேண்டுமென்றே பலவீனமானவையாகவே வைக்கப்படுகின்றன. பிராந்தியத்தின் வரலாற்றை நோக்கும் போது இதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.



திம்பக்டுவுக்கு வெளியே உள்ள பகுதியில் கவச வாகனத்தில் ரோந்து புரியும் பிரெஞ்சு படை வீரர்கள்

அவை அவற்றுக்குரிய கடமைகளை -அதாவது அரசைக் காவல் செய்து அதன் மக்களைப் பாதுகாப்பதை- உருப்படியான முறையில் செய்யக் கூடிய ஆற்றலை எல்லா வேளைகளிலும் கொண்டிருப்பதில்லை. மாலியின் இராணுவம் அதன் பிராந்தியத்தை பாதுகாப்பதில் கண்டிருக்கும் தோல்வி இதைத் தெளிவாக அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவையெல்லாவற்றையும் விட மோசமானது என்னவென்றால், சில பாதுகாப்புப் படைகள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உடந்தையாகச் செயற்படுவதுதான். 2012 ஏப்ரலில் கினியா பிசோவில் இடம்பெற்ற சதிப்புரட்சி மிகவும் மனதிற் பதிகிற ஒரு உதாரணமாகும். மிகுந்த ஆதாயம் அளிக்கின்ற அந்த நாட்டின் போதைப் பொருள் வர்த்தகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு இராணுவம் அவாவுடையதாக இருந்ததே அந்தச் சதிப்புரட்சிக்கான காரணமாகக் கூறப்பட்டது.

இப்பிராந்தியம் உலகில் மிகவும் உயர்ந்த சனத்தொகைப் பெருக்க வீதங்களைக் கொண்டவற்றில் ஒன்றாக இருப்பதும் பிரச்சினைகளைத் தீவிரப்படுத்துகிறது. இளம் சனத்தொகை உண்மையில் ஒரு பெரிய சொத்தாகும். ஆனால், பாடசாலைகளுக்கும் தொழில்வாய்ப்புக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் அந்த இளம் சனத்தொகை ஒரு சொத்தல்ல. ஒரு எதிர்காலத்தைக் கொண்டிராத பயிற்சித் திறனற்ற வேலையில்லா இளைஞர்கள் மிகவும் இலகுவாகவே பழிபாவத்துக்கு அஞ்சாத அரசியல்வாதிகளின் அழைப்புக்கும், போதைப்பொருட்கள், தீவிரமான கோட்பாடுகள் மற்றும் குற்றச் செயல்களுக்கும் எளிதாகவே எடுபடக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

பிராந்தியத்தின் பொருளாதாரங்கள் வளர்ச்சிகண்டிருக்கிறபோதிலும், தொழில் வாய்ப்புகள் உருவாக்கம் மிகவும் கீழ் மட்டத்திலேயே இருக்கிறது. பெரும்பாலான பொருளாதார வளர்ச்சி, தொழில் ஊக்குவிப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளின் மூலமாகவன்றி, எண்ணெய் மற்றும் சுரங்கத்துறை போன்ற மூலதன ஊக்குவிப்புத் கைத்தொழில் துறைகளின் மூலமாகவே வருகிறது. இதன் விளைவு- பண்டங்கள் பெருக்கத்தினால் பயனடைகிற சொற்ப எண்ணிக்கையினரான உயர்குழாமுக்கும் சமுதாயத்தின் ஏனைய பிரிவினருக்கும் இடையே செல்வம் மற்றும் வாய்ப்புகளைப் பொறுத்தளவில் இடைவெளி மேலும் அகலமாகிக் கொண்டுபோகிறது. இதனால், மக்கள் மத்தியில் அதிருப்தி மேலும் தூண்டப்படுகிறது.

மாலி நிலைவரம் வெளிக்காட்டியிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் முழுமையாகக் கவனித்து கையாளப்பட்டு தீர்வு காணப்பட வேண்டிய ஆழமான பிராந்திய பிரச்சினைகளின் அறிகுறிகளேயாகும். மாலியில் ஒரு இராணுவத் தலையீடு தவிர்க்க முடியாதது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இராணுவத் தலையீடு மேற்கு ஆபிரிக்காவின் உறுதிப்பாடின்மைக்கான உள்ளார்ந்த காரணிகளாக இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் போவதில்லை. மேற்கு ஆபிரிக்க அரசாங்கங்கள் பொருளாதார வளர்ச்சியின் பயன்களை பாதுகாப்புத்துறை சீர்திருத்தம், உட்கட்டமைப்பு, விவசாயம், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி, கல்வி மற்றும் குடும்பக்கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான உரமாக்கி பயனுறுதியுடைய செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தை நோக்கி பிராந்தியத்தை வழிநடத்துவதாக இருந்தால் இவற்றை அரசாங்கங்கள் செய்தாக வேண்டும்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக ஆழமான அக்கறை கொண்டவன் என்ற காரணத்தால், போதைப் பொருள் கடத்தல் ஆபத்துக்குறித்தும் பாதுகாப்பு, ஆட்சிமுறை மற்றும் அபிவிருத்தியில் அந்த ஆபத்து ஏற்படுத்துகின்ற சூழ்ச்சித்தனமான தாக்கங்கள் குறித்தும் ஆராய்ந்து தீர்வுகளை முன்வைக்க ஆணைக்குழுவொன்றில் இணைந்து கொள்ளுமாறு மாண்புமிக்க மேற்கு ஆபிரிக்கர்களை உள்ளடக்கிய பல்வேறுவகைப்பட்ட குழுக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். இந்த ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்குவதற்கு நைஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி ஒலுசெகுன் ஒபாசான்யோ இணக்கம் தெரிவித்திருக்கிறார். போதைப் பொருள் கடத்தலும் திட்டமிட்ட குற்றச்செயல்களும் தோற்றுவிக்கின்ற ஆபத்துகளைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைச் சாத்தியமான வழிவகைகளைப் பிரேரிப்பதே ஆணைக்குழுவின் நோக்கமாகும்.


மேற்கு ஆபிரிக்காவின் பிரச்சினைகளை முழுமையாகப் பார்க்க வேண்டுமேயன்றி, எவ்வளவுதான் பாரதூரமானதாக இருந்தாலும் ஒரு ஆபத்து மீது மாத்திரம் கவனத்தைச் செலுத்துவது உகந்ததல்ல. ●

---

*(28ஆம் பக்கத்தொடர்ச்சி)*

இது போதாது என்று, பாரதீய ஜனதா மற்றும் கட்சி தலைமையிலான கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியை முன்னிறுத்த வேண்டும் என்பது குறித்த சர்ச்சையும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அந்த விதத்தில் அண்மையில் ஜெய்பூரில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் காங்கிரஸின் துணைத் தலைவராக ராகுல் காந்தியை முன்னிறுத்தியது தேர்தல் வெற்றிக்கு வழி செய்கிறதோ இல்லையோ, பாரதீய ஜனதாவில் உள்ளது போன்ற உட்கட்சி குழப்பங்கள் இல்லாத நிலைமையையாவது உருவாக்கியுள்ளது.

இந்தியாவிலும் சரி, தெற்காசியாவின் பிற நாடுகளிலும் சரி, ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் கொள்கை மாற்றங்கள் ஏற்படும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்தியாவில் தேர்தல் முடிந்து இடைப்பட்ட காலத்தில், காங்கிரஸ் அல்லது பாரதீய ஜனதாவும் பங்கு பெறாத மூன்றாவது அணியின் ஆட்சி ஏற்படும் வாய்ப்பும் தற்போது உள்ளது. அவ்வாறு நடைபெற்றால், கடந்த தொண்ணூறுகளைப் போலவே அந்த ஆட்சியும் நிலைத்திராமல், எதிர்வரும் 2016-ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்திற்கு மீண்டும் தேர்தல் நடைபெறலாம். அதன் காரணமாகவும் இந்தியாவில் மட்டுமல்ல தெற்காசியா முழுமைக்கும் கூட அரசியல் ஸ்திரத்தன்மை சிறிது காலத்திற்காவது கேள்விக் குறியாகலாம். ●



பங்களாதேஷில் வேகமாக ஓடும் ரயிலின் கூரையில் சிறுவர்களின் கும்மாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# ஒபாமாவின் அடுத்த நான்கு வருடங்கள்

**அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்று வரலாற்றில் ஒபாமா இடம்பெறப் போகிறார் என்பதில் பிரச்சினையில்லை. அவர் எதையெல்லாம் சாதித்து தனக்கென்று ஒரு மரபை விட்டுச் செல்லப்போகிறார் என்பதே முக்கியமான கேள்வி**

இரண்டாவது உலகமகாயுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவில் இரண்டாவது பதவிக்காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒவ்வொரு ஜனாதிபதியுமே படுமோசமான தவறுகளினாலும் ஊழல்களினாலும் நெருக்கடிகளைக் கையாளுவதில் அரை குறையானஅணுகுமுறைகளினாலும் கறைபட்டு அவமதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த இரண்டாவது பதவிக்காலச் சாபத்தில் இருந்து பராக் ஒபாமாவினால் தப்பமுடியுமா?

ஒபாமா ஆரம்பித்திருக்கும் இரண்டாவது பதவிக்காலம் அவரது மரபை வடிவமைக்கப்போகிறது. அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்று வரலாற்றில் ஒபாமா இடம்பெறப்போகிறார் என்பதில் பிரச்சினை ஏதுமில்லை. வரலாற்றில் அவருக்குரிய அந்த இடம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. ஆனால், அவற்றுக்கெல்லாம் அப்பால் அவர் எதையெல்லாம் இனிமேல் அடுத்த 4 வருடங்களிலும் சாதித்து தனக்கென்று ஒரு மரபை விட்டுச் செல்லப்போகிறார் என்பதே தற்போதைய கேள்வியாகும்.

கடந்தமாதம் 20 ஆம் திகதி இரண்டாவது பதவிக்காலத்துக்கு பதவிப்பிரமாணத்தைச் செய்து கொண்ட ஒபாமா ஒப்பீட்டளவில் "முற்போக்கான" நிகழ்ச்சிநிரலை வெளியிட்டிருக்கிறார். காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படுகின்ற பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக ஒபாமா உறுதியளித்திருக்கிறார். தன்னினச் சேர்க்கையாளர்களின் உரிமைகள் மற்றும் குடிவரவுக் கொள்கைகளில் சீர்திருத்தங்களைச் செய்யப் போவதாகவும் அவர் கூறியிருக்கிறார். இந்தச் சீர்திருத்தங்களையெல்லாம் தான் நினைக்கிற வகையில் செய்வதில் ஒபாமா குடியரசுக் கட்சியினரின் கடுமையான எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காலநிலை மாற்றம் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை குறித்து தனது பதவிப் பிரமாண உரையில் கணிசமான அளவுக்கு விரிவாகப் பேசிய ஒபாமா தனது வாதங்களுக்கு ஆதாரமாக காலநிலை விஞ்ஞான விளக்கங்களை முன்வைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இம்மாதம் அமெரிக்க காங்கிரஸின் இருசபைகளினதும் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றும்போது (State of Union Address) காலநிலை மாற்றம் தொடர்பிலான தனது கொள்கையை எவ்வாறு மேலும் ஒபாமா விளக்கிக் கூறித் தெளிவுபடுத்தப் போகிறார் என்பதை சுற்றாடல் பாதுகாப்பு ஆர்வலர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பதவிப் பிரமாண உரையில் தன்னினச் சேர்க்கையாளர்களைப் பற்றிக் குறிப்பிட்ட முதலாவது அமெரிக்க ஜனாதிபதி என்றும் ஒபாமா வரலாற்றில் இடம்பிடித்துவிட்டார். தன்னினச் சேர்க்கையாளர்களின் உரிமைகளுக்கு தான் கொடுக்கின்ற முக்கியத்தை வெளிக்காட்டிய அவர் தன்னினச் சேர்க்கையாளர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை பால் சமத்துவம் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான முன்னைய போராட்டங்களுக்கு சமமானதாக நோக்குகிறார்.

வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை, மோதலில் ஈடுபட்டுத் தனிமைப்படுவதை விடவும் பேச்சுவார்த்தைகள் மூலமாக இணக்கமான தீர்வுகளைக் காண்பதற்கே ஒபாமா முன்னுரிமை கொடுப்பதில் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை உரை உணர்த்துகிறது. இந்த அணுகுமுறை உலகினால் வரவேற்கப்படுகிறது. ஆனால், கடந்த நான்கு வருடங்களிலும் அவரது நிர்வாகம் உலகவிவகாரங்களில் கடைப்பிடித்து வந்திருக்கும் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அடுத்து வரும் நான்கு வருடங்களிலும் அந்த அணுகுமுறைகளில் மாற்றத்தை எதிர்பார்ப்பதில் சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன.

முதலாவது பதவிக்காலத்தை ஆரம்பித்தபோது காட்டிய உறுதிப்பாட்டையும் விட கூடுதலான அளவுக்கு உறுதிப்பாட்டுடன் இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்காலத்தை ஒபாமா ஆரம்பித்தி ருக்கிறார். 2009 ஜனவரியில் அவர் பதவியேற்றபோது தனக்கு முன்னர் வெள்ளை மாளிகையில் வாசஞ் செய்தவரின் மரபின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதார மந்தநிலை, ஈராக் மற் றும் ஆப்கானிஸ்தானின் போர்களே அந்தச் சுமைகள். ஈராக்போர் முடிவுக் குக் கொண்டுவரப்பட்டதையடுத்தும் அமெரிக்கப் பொருளாதாரம் மீட்சிக் கான பாதையில் சென்று கொண்டி ருப்பதையடுத்தும் இந்தச் சுமைகள் குறைந்திருக்கின்றன என்பதிற் சந்தே கமில்லை. காலநிலை மாற்றம் மற்றும் துப்பாக்கிக் கட்டுப்பாடு போன்ற விவகாரங்களில் அவர் இப்போது போதுமானளவுக்கு கவனம் செலுத்த முடியும்.

குடியரசுக் கட்யினரால் ஏற்படுத்தப் படக்கூடிய முட்டுக்கட்டைகள் ஒபா மாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக் கும். கொள்கைகளை வகுப்பதிலும் சட்டமூலங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும் குடியரசுக்கட்சியி னரை எந்தளவுக்கு இணங்கச் செய்ய ஒபாமாவினால் இயலுமாக இருக்கும் என்பது முக்கியமான ஒரு கேள்வி யாகும். பாலஸ்தீனப் பிரச்சினையில் இரு அரசுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வை நோக்கி இஸ்ரே லைத் தள்ளுவதற்கு அவர் முயற்சி க்க வேண்டும்.

# ஜோன்கெரியும் கிளின்டனின் மரபும்

ஹிலாரி கிளின்டனுக்குப் பதி லாக அமெரிக்க வெளியு றவு அமைச்சராக ஜோன் கெரி பதவி யேற்றிருக்கிறார். அவரின் நியமன த்தை செனட் வெளியுறவுக்குழு ஏகம னதாகவும் செனட் சபை 94-3 வாக்கு களாலும் அங்கீகரித்திருந்தன.

மசாசூசெட்ஸ் மாநிலத்துக்கான செனட்டராக சுமார் 5 பதவிக்காலங்க ளுக்கு -அதாவது 28 வருடங்களாக பதவிவகித்த கெரி செனட் வெளியுற வுக் குழுவின் தலைவராகவும் இருந் தவர். வெளியுறவு அமைச்சர் பத வியை ஏற்றதையடுத்து அவர் செனட்டராகவோ செனட் வெளியுற வுக் குழுவின் தலைவராகவோ இப் போது இல்லை.



அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் ஹிலாரி கிளின்டன் தனது கடமைகளுக்கு ஏற் படுத்திய உத்வேகத்தை ஜோன் கெரி யினாலும் காட்டக்கூடியதாக இருக் குமா என்று கேள்வி எழுகிறது. ஆனால், வெளியுறவு விவகாரங்க ளில் ஆழமான அக்கறை காட்ட வேண்டிய செனட் வெளியுறவுக் குழு வின் தலைவராக இருந்தவர் என்ற வகையில், அவரால் திறம்படச் செயற்படக்கூடியதாக இருக்குமென் பதே சர்வதேச அரசியல் அவதானிக ளின் பரவலான கருத்தாக இருக்கி றது.

ஹிலாரி கிளின்டன் உலக விவகா ரங்களில் அமெரிக்காவின் நேரடிச் செல்வாக்கு ஒரு வீழ்ச்சியைச் கண்ட கடந்த 4 வருடங்களில் 112 நாடுக ளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண் டிருந்தார். அத்துடன், அவரின் பத விக் காலத்தில் உலகின் பல பிராந்தியங்களிலும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது.

2008 ஜனாதிபதித் தேர்தலில் ஜன நாயகக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்கான போட்டியில் ஈடுபட்ட பராக் ஒபா மாவும் ஹிலாரி கிளின்டனும் பிறகு முறையே ஜனாதிபதி என்ற வகையி லும் வெளியுறவு அமைச்சர் என்ற வகையிலும் மிகுந்த புரிந்துணர்வு டன் செயற்பட்டதைக் காணக்கூடிய தாக இருந்தது.

வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் ஹிலாரி சாதித்திருக்கக் கூடியவை குறித்து பல்வேறு வகை யான விமர்சனங்கள் முன்வைக்கப்ப டுகின்றன.

அமெரிக்கர்களையும் ஆப்கானியர் களையும் தாக்கும் ஆப்கான் தீவிர வாதிகளுக்கு பாதுகாப்பான புகலி டங்களாக விளங்குபவற்றை மூடிவிடத் தவறினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டு மென்று 2011 இல் ஹிலாரி பாகிஸ் தானை எச்சரித்திருந்தார். அதே வரு டம் ஜனவரியில் அவர் மேற்காசியத் தலைவர்களையும் எச்சரித்தார். அரசி யல் முறைமையை ஜனநாயகமய மாக்கி, ஊழலைக் கட்டுப்படுத்தத் தவறினால் தங்களின் நாடுகள் எதிர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அணுவாயுதத்தை ஈரான் தயாரிக்கக்கூடிய சாத்தியப்பாடுகளின் விளைவான நெருக்கடிகள் ஒபாமா நிருவாகத்தின் மிகுந்த அக்கறைக்குரிய விவகாரங்களாக தொடர்ந்தும் இருக்கும். அணுவாயுதத் தயாரிப்பு யோசனையைக் கைவிடுவதாக ஈரான் உறுதியளிக்கும் பட்சத்தில், உலகளாவிய வர்த்தக உடன்படிக்கைகளில் அந்த நாட்டை சேர்த்துக்கொள்வதாகவும் பாதுகாப்பு உத்தரவாதங்களைத் தருவதாகவும் ஒபாமா வாக்குறுதியளிக்க வேண்டியிருக்கும். இத்தகையதொரு ஏற்பாட்டுக்கு ஒபாமா நிருவாகம் வருவதே மேற்காசியாவில் நெருக்கடி மேலும் தீவிரமடையாமல் இருக்க உதவும்.


அரபு வசந்தத்தைத் தொடர்ந்து இப்போது அரபு நாடுகளில் படிப்படியாக பிரதிநிதித்துவ ஜனநாயகங்கள் துளிர்விட ஆரம்பித்திருக்கின்றன. இந்தப் புதிய ஜனநாயகங்கள் வலுப்பெறுவதற்கு அமெரிக்கா உதவ வேண்டும்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா அதன் துருப்புகளை விலக்கிக் கொள்ளவிருக்கிறது. ஆப்கானிஸ்தானை இடையில் கைவிட்டுவிட்டு ஓடுவதாக இது இருந்தால் விளைவுகள் அனர்த்தமிகுந்தவையாகவே இருக்கும். அதனால், பாகிஸ்தான் மேலும் நிலைகுலையக்கூடும்.

***(56ஆம் பக்கம் பார்க்க...)***

நோக்கக்கூடிய ஆபத்துகளை இந்த மேற்காசியத் தலைவர்களுக்கு ஹிலாரி சுட்டிக்காட்டியிருந்தார். இவற்றை அவரின் சிறப்பான செயற்பாடுகளுக்கு உதாரணமாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹிலாரியினால் பெருமளவு முன்னேற்றங்களைக் காண முடியாமல் போன விவகாரங்கள் நீண்ட




ஹிலாரியினால் பெருமளவு முன்னேற்றங்களை காண முடியாமல் போன விவகாரங்கள் நீண்ட காலத்திற்கு பிரச்சினையை தரக்கூடியதாக இருக்கின்றன

காலத்துக்கு பிரச்சினையைத் தரக்கூடியவையாக இருக்கின்றன. லிபியாவின் பெங்காஸி நகரில் அமெரிக்கத் தூதுவரும் அவரின் சில உத்தியோகத்தர்களும் கொல்லப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட கிளின்டனால் குடியரசுக்கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆத்திரத்தைத் தணிக்க முடியவில்லை. இரண்டாவதாக 2011 மார்ச்சில் லிபியாவில் குடிமக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளைத் தடுக்க வாஷிங்டன் தலையீடு செய்ய வேண்டுமென்று ஹிலாரி வற்புறுத்தினார். அமெரிக்கா செய்த தலையீட்டின் விளைவு மாலியில் உள்நாட்டுப் போர், வட ஆபிரிக்காவில் அல்-கயெடா இயக்கத்தின் வியாபகம், அந்தப் பிராந்தியம் பூராகவும் ஆயுதப் பாவனை அதிகரிப்பு என்று இன்னோரன்ன நெருக்கடிகள்.

சிரியா மற்றும் ஈரான் விவகாரங்களிலும் ஹிலாரியின் அணுகுமுறைகள் உற்சாகம் தருபவையாக இருக்கவில்லை. இவ்விரு விவகாரங்களிலும் இராஜதந்திர முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதியாக நிராகரித்த ஹிலாரியின் செயல் அப்பிராந்தியத்தை மோதலை நோக்கித் தள்ளிவிட்டது.

இஸ்ரேல் இன்னமும் தான் விரும்பியபடி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றங்களை கட்டுவதை நிறுத்துமாறு ஒபாமா நிருவாகம் திரும்பத் திரும்ப விடுக்கின்ற வேண்டுகோள்களை அலட்சியம் செய்து கொண்டிருக்கிறது. இஸ்ரேல், அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் குடியரசுக்கட்சியினரும் சக்திமிக்க யூத ஆதரவுக் குழுக்களும் இந்த விவகாரத்தில் வெள்ளை மாளிகையை முடமாக்கி விடும் என்று உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருப்பதாலேயே இஸ்ரேலினால் இவ்வாறு நடந்துகொள்ள முடிகிறது.

இதற்கு மேலதிகமாக, ஆளில்லா விமானத் தாக்குதல்கள் உலகின் பல பகுதிகளில் அமெரிக்க விரோத உணர்வுகளை மேலும் தூண்டிக் கொண்டிருக்கின்றன. ஆளில்லா விமானத் தாக்குதல்கள் மீது இராஜாங்கத் திணைக்களத்திற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

அதனால், போரை விடுத்து இராஜதந்திர அணுகுமுறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஜோன் கெரியின் ஆர்வத்தினால் பரந்தளவிலான உலகளாவிய இணக்கப்பாட்டை வென்றெடுக்கக்கூடியதாக இருக்குமென்று கூறுவதற்கில்லை. ஆனால், இத்தகைய இராஜதந்திர அணுகு முறையே சொத்தாக இருக்க முடியும். அத்துடன், முன்னெப்போதையும் விட இராஜதந்திர அணுகுமுறை கூடுதலான அளவுக்குத் தேவைப்படுகிற நேரமாகவும் இது இருக்கலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூப வில்லங்கம்

## எதிர்காலத்தில் கமலஹாசன் அரசியலில் குதிக்க விரும்பினால் தமிழகத்தில் அதற்கு விதை போடப்பட்டு விட்டது

எம்.காசிநாதன்




கலைஞானி கமலஹாசனின் 'விஸ்வரூபம்' ஒருவாறாக தமிழகத்தில் உள்ள 500இற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகி விட்டது. அதற்காக கமல் நடத்திய 'விஸ்வரூபம்' போராட்டம் 'இன்பக் கதைகளும்' 'துன்பக் கதைகளும்' நிரம்பி வழியும் காட்சிகளாவே இருந்தன என்றால் மிகப் பொருத்தமாக இருக்கும். 90 கோடி ரூபாய் முதலீடு செய்து விட்டு ஜனவரி 24ஆம் திகதியிலிருந்து 'ரிலீஸ்' திகதியை முடிவு செய்து அறிவிக்கும் வரை கமல் 9 செகன்ட் கூட நிம்மதியாக இல்லை. அந்த அளவிற்கு 'த்ரில்லர்' காட்சிகளும், 'க்ளைமாக்ஸ்' காட்சிகளும் விஸ்வரூபம் திரைக்கு வரும் முன்பே தமிழகத்தில் அரங்கேறி விட்டன.

தமிழகத்தில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள் 'அல்லாவையும்' 'குரானையும்' அவமதிக்கும் காட்சிகள் 'விஸ்வரூபத்தில்' இருக்கின்றன என்று போர்க்கொடி தூக்கின. ஆவேசமாகப் பேசினார்கள். குடியரசு தினமான ஜனவரி 26இற்கு முன்பு 25ஆம் திகதி பட ரிலீஸ் என்பதால் டென்ஷன் பற்றிக் கொண்டது. காவல்த்துறை கையைப் பிசைந்து நின்றது. குடியரசு தின வேளையில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வந்து விடுமோ என்று அஞ்சியது. தனித்தனியாக 'விஸ்வரூபத்திற்கு' எதிராக முழங்கியவர்கள் ஓரணியில் சேர்ந்தார்கள். அனைத்து முஸ்லிம் கூட்டமைப்புக்கு ஹனீபா தலைவரானார். இதை முன்னின்று நடத்திச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜவஹிருல்லாவும், தமிழ்நாடு தவ்ஹித் ஜமாத் தலைவரும் களத்தில் குதித்தார்கள். தமிழக உள்துறை செயலாளர் ராஜகோபாலைச் சந்தித்து, 'இந்தப் படத்தை தடை செய்ய வேண்டும்' என்று அதிரடி கோரிக்கை வைத்தார்கள். 'உங்கள் உணர்வுகளைப் பாதிக்கும் என்றால் படத்தை தடை செய்து விடலாம்' என்று உள்துறை செயலாளர் ஆறுதல் சொன்னாராம். சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் ஜோர்ஜ் உடனடியாக, 'விஸ்வரூபம்' படத்திற்கு இரு வாரங்கள் தற்காலிகத் தடை விதித்தார். அவரைப் பின்தொடர்ந்து 33 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 'விஸ்வரூபம்' பட ரிலீஸுக்கு தடை போட்டனர்.

'விஸ்வரூபத்திற்கு' ஏன் இந்த திடீர் வில்லங்கம்? இந்திய நிதியமைச்சர் பற்றிய 'ப.சிதம்பரம்-ஒரு பார்வை' என்ற புத்தக வெளியீட்டு விழா டிசம்பர் 28ஆம் திகதி நடந்தது. கலைஞர் கருணாநிதி, ரஜினி, கமல்ஹாசன் ஆகிய மூவரும் ஒரே மேடையில் காட்சியளித்த விழா அது. அங்கு 'வேட்டி கட்டிய தமிழர் பிரதமராக வேண்டும்' என்று கிளம்பிய பேச்சை, நடிகர் கமல்ஹாசன் ஆதரிக்க, அந்த மேடை சூடானது. இறுதியில் பேசிய கலைஞர் கருணாநிதி, 'இங்கு பேசியவர்கள் எல்லாம் வேட்டி கட்டிய தமிழன் பிரதமராக வேண்டும் என்றார்கள். அப்படியென்றால் நீங்கள் எல்லாம் சேலை கட்டிய தமிழர் பிரதமராக மாட்டார் என்று முடிவு செய்து விட்டீர்கள்' என்று அனல் பறக்க வைத்தார். அதுவே, 'விஸ்வரூபம்' ஆனது! ஆனால் 'ப.சிதம்பரம் பிரதமராக வேண்டும்' என்பதை முதலில் பேசியது கமல் அல்ல! அக்கூட்டத்தில் முதலில் பேசிய இஸ்லாமிய பேராசிரியர் அப்துல் ரஹ்மான். அவர் பேச்சை மற்றவர்கள் தொடரவே, கமலும் தொடர்ந்தார். சிக்கினார். ஆகவே, 'விஸ்வரூபத்திற்கு' எதிராக எழுந்த இஸ்லாமிய அமைப்புகளின் போராட்டத்திற்கு 'வழிகாட்டி'யாக அமைந்த 'ஆதி தாளம்' இன்னொரு இஸ்லாமியப் பேராசிரியரான அப்துல்ரஹ்மானின் பேச்சுத்தான்!

90 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்ட பிரமாண்ட படமான 'விஸ்வரூபம்' படத்தின் சென்சார் போர்டு கமலுக்கு கிடைத்து விட்டது. ஆனால், ப.சிதம்பரத்தின் விழாவில் தான் பேசியதால் ஏதாவது பிரச்சினை வரலாம் என்று யூகித்தார் கமல். போதாக்குறைக்கு விஸ்வரூபம் பட 'உரிமை பரிமாற்றம்' வேறு விவகாரமானது. 'சிக்கல்' சீவி சிங்காரித்துக் கொண்டு வருமோ என்று நினைத்த கமல், பட ரிலீஸுக்கு நான்கு நாட்களுக்கு முன்பு (ஜனவரி 21ஆம் திகதி) இஸ்

## அம்மையார் ஆட்சியின் 'விஸ்வரூபம்'



**கவிஞர்**
**காசி முத்து மாணிக்கம்**
*தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்*

அ.தி.மு.க. ஆட்சி நடந்த போது 1995இல் ரஜினி நடித்து வெளியான 'பாட்ஷா' படத்தின் மூலம் தான் தமிழக அரசியலில் மாற்றம் வந்தது. பாட்ஷா விழாவில் 'தமிழ்நாட்டை ஆண்டவனே வந்தாலும் காப்பாற்ற முடியாது' என்றார் ரஜினி. அதுவே 1996ல் நடந்த சட்டமன்றத் தேர்தலின் தேர்தல் பிரசாரம் ஆனது. அதேபோல் இப்போது 2013இல் விஸ்வரூபம் படத்திற்கு ஏற்பட்ட பிரச்சினையால், 'நான் நாட்டை விட்டு வெளியேறுவேன்' என்று கமல்ஹாசன் பேட்டி கொடுத்துள்ளார். 2014 பாராளுமன்றத் தேர்தலுக்கு இதுதான் தேர்தல் பிரசாரம். இது 2014 தேர்தலை நிச்சயம் புரட்டிப் போடும். இந்த அம்மையார் (முதல்வர் ஜெயலலிதா) எவ்வளவு தான் சிறப்பாக ஆட்சி நடத்துகிறேன் என்று பிரசாரம் செய்தாலும், ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு திருப்புமுனை வரும். 1991-1996 இல் அம்மையார் முதல்வராக இருந்த போது 'பாட்ஷா' படப் பிரச்சினை. 2001-2006இல் முதல்வராக இருந்த போது 'காஞ்சி சங்கராச்சாரியார் கைது பிரச்சினை'. இப்போது 2011-2016 முதல்வராக இருக்கும் போது 'விஸ்வரூபம்' பிரச்சினை. 'விஸ்வரூபம்' ஆகி விட்டது.

இந்த அம்மாவை ஆதரிக்கும் ராதிகா சரத்குமார், சிவகுமார், அவரது மகன் கார்த்தி, அ.தி.மு.க. வின் தீவிர பேச்சாளராக இருக்கும் ராதாரவி, சென்ற 2009 பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிக்காகப் பாடுபட்ட டைரக்டர் பாரதிராஜா- என்று அத்தனை பேரும் கமல் வீட்டிற்கு போய் விட்டார்கள். விஸ்வரூபம் தடையை பகிரங்கமாக எதிர்த்து விட்டார்கள். முதலில் ஹைகோர்ட் நீதிபதி தீர்ப்பு அளித்தவுடனேயே விஸ்வரூபம் படத்தை திரையிட அனுமதி வழங்கியிருக்க வேண்டும். அதை விடுத்து மீண்டும் கோர்ட்டிற்கு அப்பீல் போய் விட்டார். இது கமலின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த திரையுலகத்தின் பிரச்சினை. தமிழகம் தென்னிந்தியத் திரையுலகின் சங்கமம். இங்கே கர்நாடகாவின் நடிகர் ராஜ்குமாருக்கும் வீடு இருக்கிறது. ஆந்திர நடிகராக இருந்த என்.டி.ஆர் பெயரில் தெருவே இருக் கிறது. 'விஸ்வரூபம்' படத்திற்கு ஏற்பட்ட சர்ச்சைகள் போல் எதிர்காலத்தில் தொடர்ந்தால், தென்னிந்திய திரையுலகமே தமிழகத்திலிருந்து வெளியேறும் ஆபத்து வரும். அந்த நிலை உருவாவதற்கு அம்மையார் ஆட்சி இனி மேலும் அனுமதிக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமிய அமைப்புகளின் தலைவர்களை அழைத்து தனியாக 'பிரிவியூவ் ஷோ' போட்டுக் காண்பித்தார். அங்குதான் பிரச்சினை வெடித்தது. படக்காட்சிகள் சில அவர்களின் மனத்தை பதற வைத்தன. குறிப்பாக, இஸ்லாமியர்கள் படிக்கும் 'மதரஸாக்கள்' பயங்கரவாதிகள் உருவாகும் இடமாக சித்திரிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களின் 'புனித நூலான திருக்குரானை அவமதிக்கும்' காட்சிகள் இதயத்தை கசக்குவதாகவும் கொதித்து விட்டனர். முதலில் 'துப்பாக்கி' இப்போது 'விஸ்வரூபமா?' என்று ஆவேசப்பட்டார்கள்.

சச்சரவுகள் சந்தைக்கு வந்த போது கமல் விஜய் போல் தமிழக அரசின் உதவியைத் தேடிச் செல்லவில்லை. தமிழக அரசுக்கும், கமலுக்கும் இடையேயான 'ஈகோ' யுத்தம் இங்குதான் உருவானது. 'சட்டம்-ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும்' என்ற கோணத்தில் தமிழக அரசு படத்திற்கு இரு வார தடை விதித்தது. அப்போது கூட கமல்ஹாசன் முதல்வரைச் சந்திக்கவில்லை. 'நான் சந்திக்க கடிதங்கள் கொடுத்தேன்' என்று பேட்டிகளில் கமல் சொன்னார். சந்திக்கவில்லை என்பதுதான் உண்மை. கமல் நேராக சென்னை உயர்நீதிமன்றத்திற்கு போனார். 'நான் சட்ட ரீதியாகச் சந்திப்பேன்' என்றார். 'இது தங்களுக்கு விடப்பட்ட சவால்' என்று தமிழக அரசு எடுத்துக் கொண்டது. விவகாரம் முற்றியது.

ஹைகோர்ட் நீதிபதி வெங்கட்ராமன் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, 'தடையை நீக்கக்கூடாது' என்று அட்வகேட் ஜெனரல் நவநீத கிருஷ்ணன் ஆவேசமாக வாதிட்டார். இதைப் பார்த்த நீதிபதி, 'படத்தை முதலில் பார்க்கிறேன். பிறகு தீர்ப்பு' என்றார். படத்தை பார்த்த நீதிபதி, 'இஸ்லாமியர்களை புண்படுத்தும் விடயங்கள் ஏதுமில்லை' என்ற மனநிலைக்கு வந்தார். மீண்டும் வழக்கு விசாரணை! அரசு தரப்பில் ஆஜராவதில் லேட். ஆனால், நீதிபதி விடவில்லை. 'இன்றே தீர்ப்பு சொல்ல வேண்டும்' என்று கறாராக வழக்கை நடத்தினார். அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் நவநீதகிருஷ்ணன், கூடுதல் அட்வகேட் ஜெனரல் அரவிந்த் பாண்டியன் ஆகியோர் சுமார் மூன்று மணி நேரம் வாதிட்டார்கள். கமலின் வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் இரண்டு மணி நேரம் வெளுத்து வாங்கினார். இவர்கள் தவிர, முஸ்லிம் அமைப்புகளின் சார்பில் வழக்கில் சேர்ந்து கொண்ட வழக்கறிஞர் சங்கரசுப்பு, இந்திய அரசின் செய்தித்துறை, மற்றும் சென்சார் போர்டுகள் சார்பாக பங்கேற்ற அடிஷனல் சொலிசிட்டர் ஜெனரல் வில்சன் ஆகியோர் தங்கள் தரப்புக் கருத்துகளை 'இரத்தினச் சுருக்கமாக' எடுத்து வைத்தார்கள். வாதங்கள் முடிவதற்கே மாலை 6.15 மணியாகி விட்டது. 'இரவு எட்டு மணிக்கு தீர்ப்பு' என்று அறிவித்தார் நீதிபதி. 35 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு! தாமதம் ஆனது. பிறகு இரவு 10

## கமல் பண்பட்ட கலைஞன்



கே.எம்.காதர் மொகைதீன்
தலைவர்,
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

கமல்ஹாசன் முஸ்லிம் விரோதி அல்ல. இஸ்லாமிய மக்களுக்கு சிறந்த நண்பர். ஆகவே விஸ்வரூபம் படத்தில் முஸ்லிம்களையோ, இஸ்லாம் மதத்தையோ தவறாகச் சித்தரிக்கும் காட்சிகள் இருந்தால், அதை அவரிடம் சொன்னால் போதும். அவரே நீக்கி விடுவார். அது மாதிரி பண்பட்ட கலைஞன் கமல். இப்படத்திற்கு சென்சார் போர்டு சர்டிபிகேட் கொடுத்துள்ளது. சமூக நல்லிணக்கத்தை குலைக்கும் படமாக இருந்தால் அப்படி சர்டிபிகேட் கொடுத்திருக்க மாட்டார்கள். அரசாங்கம் தடை செய்ததை விட, அவர்களே முன்னின்று கமலுக்கும்- முஸ்லிம் அமை ப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம். அதற்கு மாறாகத் தடை செய்து தமிழகத்தில் நிலவுகின்ற சமூக நல்லிணக்கத்தை கெடுக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கக்கூடாது.

ஆப்கான் முஸ்லிம்கள் பற்றித்தான் படம் என்கிறார் கமல். அவர்கள் ஒரு கையில் குர்ஆனும், இன்னொரு கையில் துப்பாக்கியாகவும் சுடுவது வழக்கம். அது அங்கு நடக்கும் சம்பவம்தான். அதை இங்கு சொல்லும் போது, அது ஏதோ நம்மை சுட்டிக்காட்டுவது போலிருக்கிறது என்று இங்குள்ள இஸ்லாமிய சமுதாயத்தினர் நினைக்கலாம். அதுதான் பிரச்சினையே தவிர, மற்றப்படி தமிழக முஸ்லிம்களுக்கோ, இந்திய முஸ்லிம்களுக்கோ 'விஸ்வரூபம்' எதிரான படம் இல்லை. அதை கமலே அறிவித்து விட்டார். இந்திய மாநிலங்களில் சமூக நல்லிணக்கத்திற்கு தலைசிறந்த மாநிலமாகவும், இலக் கணமாகவும் திகழுவது தமிழகம். இந்துக்களும், இஸ்லாமியர்களும் அண்ணன் தம்பிகளாகவே இங்கு தொன்று தொட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது போன்ற சமூக நல்லிணக்கம் இந்தப் பிரச்சினைகள் மூலம் கெட்டு விடாமல் இருக்க வேண்டும். 'விஸ்வரூபம்' சிக்கலை நீடிக்க விடாமல், அரசும், முஸ்லிம் அமைப்புகளும், கமலும் சுமுகமாக பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது என் கோரிக்கை. அதன்படியே இப்போது நடந்திருப்பது மன நிம்மதியைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு 'தடையை நீக்கி' தீர்ப்பளித்தார். நீதிபதி வெங்கட்ராமன் வருகின்ற மே மாதம் ஓய்வு பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுநாள், அதாவது 30ஆம் திகதி காலை அனைத்துத் தியேட்டர்களிலும் படம் 'ரிலீஸ்' ஆக வேண்டும். அரசோ தீர்ப்பை நிறுத்தி வைக்க இரவோடு இரவாக தலைமை நீதிபதி பொறுப்பு வகிக்கும் எலிப் தர்மாராவ் வீட்டில் போய் நின்றது. அவரோ, 'நாளை காலை (30ஆம் திகதி) கோர்ட்டில் தாக்கல் செய்யுங்கள். விசாரித்துக் கொள்ளலாம்' என்று கூறிவிட்டார். தியேட்டர்கள் முன்பு கமல் ரசிகர்கள் கூட்டம். 'உணர்ச்சிப் பெருவெள்ளத்தில்' திரண்டு கொண்டிருந்தது. பத்திரிகையாளர்களை சந்தித்த கமல்ஹாசன் உணர்ச்சி வசப்பட்டார். 'விஸ்வரூபம் படம் ஆப்கானிஸ்தானிலும், அமெரிக்காவிலும் நடக்கிறது. அது, இங்குள்ள என் முஸ்லிம் சகோதரர்களைச் எப்படிப்பாதிக்கும்?' 'என்னிடம் திமிரும், திறமையும் மட்டும் மிச்சம் இருக்கிறது. நான் ஒரு சினிமா பாரதி' 'தனிமரம் தோப்பாகும் என்பதை நிரூபிப்பேன்' 'தாமதிக்கப்பட்ட நீதி தடுக்கப்பட்ட நீதி' என்று சரமாரியாகப் பேசினார். அதை விட உருக்கமாக, 'இந்த வீடு போகும். பரவாயில்லை. தமிழ்நாடு வேண்டாம் என்று சொல்லுகிறது. ஆகவே காஷ்மீர் முதல் கேரளம் வரை உள்ள ஏதாவது ஒரு மதச்சார்பற்ற மாநிலத்தில் அமருவேன். அதுவும் இல்லையென்றால் நாட்டை விட்டு வெளியேறுவேன்' என்றார். கமலின் பேட்டி ரசிகர்களை கண்ணீர் சிந்த வைத்தது. தமிழகம் முழுவதும் 'அனுதாப அலை' அசுரத்தனமாகக் கிளம்பியது. சில ரசிகர்கள் மணி ஆர்டர், செக் என்று பணம் கூட கமலுக்கு அனுப்ப ஆரம்பித்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

முதலில் 'பிப்டி-பிப்டி'யாக அறிக்கை விட்ட ரஜினியே இந்த முறை டென்ஷன் ஆனார். தொலைபேசியில் கமலை தொடர்பு கொண்டு பேசினார். நடிகர், நடிகைகள் பட்டாளம் கமல் வீடு தேடி வந்து ஆறுதல் சொன்னது. கமலுக்காக முதலில் குரல் கொடுத்த டைரக்டர் பாரதிராஜா கொந்தளித்தார். வழக்கை விசாரிக்கும் நேரத்தில் 'தாமதிக்கப்பட்ட நீதி தடுக்கப்பட்ட நீதி' என்ற கமல் பேட்டி நீதித்துறையை டென்ஷனாக்கியது. பொலிஸ் கமிஷனர் அலுவலகத்திலிருந்து கூப்பிடு தொலைவில் உள்ள ஆல்பர்ட் தியேட்டரில் வைக்கப்பட்டிருந்த கமல் கட் அவுட்கள் அதிகாலையிலேயே அகற்றப்பட்டன. வில்லிவாக்கத்தில் தியேட்டர் அடித்து நொறுக்கப்பட்டது. கமலுக்காக வாதிட்ட வழக்கறிஞர் பி.எஸ். ராமன் இல்லத்திற்குச் சென்ற மின்துறை அதிகாரிகள், 'நீங்கள் தவறுதலாக மின்சாரத்தை உபயோகிக்கிறீர்கள். ஏன் உங்கள் வீட்டில் பவர் கட் பண்ணக்கூடாது' என்று கேட்டு 'தொல்லை' தொடங்கியது. ராமநாதபுரத்தில் உள்ள தியேட்டரில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்ச் முன்பு இருக்கும் வழக்கை வலுப்படுத்த, 24 முஸ்லிம் அமைப்புகள் ஒன்று சேர்ந்து 'படத்தை தடை செய்ய

# சரணாகதியைக் கண்டிக்கிறேன்



**இராமகோபாலன்**
*மாநில தலைவர் இந்து முன்னணி*

முஸ்லிம்களை தாஜா பண்ணுவது என்பதற்கு ஒரு வரைமுறையே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு எல்லையே இல்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது. எவ்வளவு தாஜா பண்ணினாலும் அவர்கள் அப்படியேதான் மேலே மேலே போய்க்கொண்டிருப்பார்கள் என்பது அரசாங்கங்களுக்கு தெரிவதில்லை.

இன்றைய தினம் தமிழக சினிமாப் பட தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் வெறுத்துப் போயிருக்கிறார்கள். ஏனென்றால், எந்தப் படத்தை எடுத்தாலும் ஏதாவது குறை சொல்லிப் போராட்டம் நடத்தினால் அவர்கள் என்னதான் பண்ணுவார்கள்? சென்சார் போர்டு 'விஸ்வரூபம்' படத்தை க்ளியர் பண்ணி விட்டது. பிறகு முஸ்லிம் அமைப்புகள் சொல்வதையும் கேட்க வேண்டும் என்றால், இவர்கள் என்ன 'சூப்பர் சென்சார் போர்டா?'.

இன்று முஸ்லிம்கள் கேட்பார்கள். பிறகு ஜாதி அமைப்புகள் எங்களிடம் படத்தை போட்டுக் காண்பிக்க வேண்டும் என்று கூறும். அரசியல் கட்சிக்காரர்கள் கேட்பார்கள். இப்படியே போனால் சென்சார் போர்டு இவர்களிடம் போய் சரணாகதி அடைய வேண்டுமா? சென்சார் போர்டு சர்டிபிகேட் கொடுத்த பிறகு முஸ்லிம்களுக்காக இப்படி நடக்கும் சரணாகதியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சில காட்சிகளை நீக்க வேண்டும் என்கிறார்கள். முஸ்லிம்களுக்காக சில காட்சிகள், கிறிஸ்தவர்களுக்காக சில காட்சிகள் என்று ஒவ்வொருவருக்கும் சினிமாக் காட்சிகளை நீக்கிக்கொண்டே போனால், மொத்தப் படத்தையும் நீக்குவது போல் ஆகிவிடும்.

ஆகவே 'விஸ்வரூபம்' படத்தை முழுக்கக் காட்டியிருக்க வேண்டும். முஸ்லிம்கள் அனுமதி இல்லாமல் எதுவும் நடக்காது என்ற நிலை உருவாக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க போக்கு. இதற்கு அரசுதான் காரணம். வாக்கு வங்கிக்காக இந்த பொலிடிக்ஸ் பண்ணுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்' என்று எழுத்து பூர்வமாக கடிதம் கொடுத்தார்கள். அதை வாங்குவதே மாவட்ட கலெக்டர்களின் பெரும்பணி ஆகிவிட்டது. கமல் 'கேட்ச் 22' சூழ்நிலையில் மாட்டிக் கொண்டார்.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியும், இந்திய நிதியமைச்சர் ப. சிதம்பரமும் கமலுக்கு உதவிக்கு வந்தார்கள். சிதம்பரம் அறிவுரையின் படி மத்திய செய்தித் துறை அமைச்சர் மனீஸ் திவாரி, 'சென்சார் போர்டு சர்டிபிகேட் கொடுத்த பிறகு படத்திற்கு முட்டுக்கடை போடக் கூடாது' என்று சூடாக அறிக்கை விட்டார். கலைஞர் கருணாநிதியும் 'சுமுக சூழ்நிலை உருவாக அரசு உதவ வேண்டும்' என்று அறிக்கை விட்டார். காங்கிரஸ் எம்.பி ஜே.எம். ஆரூணும், கலைஞர் கருணாநிதி சார்பில் வைரமுத்துவும் உடனடியாக கமல் இல்லத்திற்கு விரைந்தார்கள். முஸ்லிம் அமைப்புகள் சிலவற்றுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் சில காட்சிகளை நீக்க கமல் முன்வந்தார். 'சீன் கட்' என்பதற்கு அப்போதுதான் கமல் சம்மதித்தார். 'என் இஸ்லாமிய சகோதரர்களுடன் பேசி சமரசம் செய்து வருகிறேன். விரைவில் படம் ரிலீஸ் ஆகும்' என்று பேட்டியளித்து ரசிகர்களை ஆசுவாசப்படுத்தினார். ஆனால் அதற்குள் 'விஸ்வரூபம் படத்திற்கு அரசு போட்ட தடையை உறுதி செய்தது' சென்னை உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்ச். ஜே.எம். ஆரூண் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. அந்த இடத்திற்கு திரைப்பட இயக்குநர் அமீர் வந்தார். 'என் தலைமையில் இனி பேச்சுவார்த்தை நடக்கும்' என்றார். இதற்கு போராடும் தரப்பு ஒப்புக் கொள்ளவில்லை. 'எங்கள் ஒற்றுமையை யாரும் உடைக்க முடியாது' என்ற ஜவஹிருல்லா, 'நாங்கள் தமிழக அரசு நடத்தும் பேச்சுவார்த்தைக்கே சம்மதிப்போம்' என்றார்.

'விஸ்வரூப' ரிலீஸில் நிகழ்ந்த திகில் திருப்பங்கள் தமிழக அரசுக்கு எதிரான 'பப்ளிக் ஒபீனியனை' மலை போலாக்கியது. 'நல்ல கலைஞனை இப்படிச் செய்யலாமா?' என்று நான்கு திசைகளிலும் இருந்து எதிரொலிக்கத் தொடங்கியது. கலைஞர் கருணாநிதி விஸ்வரூபம் தொடர்பாக இரண்டாவது அறிக்கையை தட்டி விட்டார். 'கிரிக்கெட் மேட்சில்' வருவது போல் 'விஸ்வரூபம்' விவகாரத்தில் 'டேர்னிங் பொயின்ட்' இது தான்! 'படத்தை தடுக்க அரசு இவ்வளவு வேகம் காட்டுகிறது' என்று கேள்வி எழுப்பி, முதல்வர் ஜெயலலிதாவிற்கு எதிராக சில அதிரடிக் குற்றச்சாட்டுகளை அடுக்கினார். இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் செய்தித் துறை அமைச்சர் மனிஷ் திவாரியும் 'சட்டம் ஒழுங்கு காரணத்தைச் சுட்டிக்காட்டி படத்தை தடை செய்வது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு முரணானது' என்று இரண்டாவது முறையாக 'பேட்டி' கொடுத்தார். ஏன், இந்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே, 'கலைஞர்களுக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. விஸ்வரூபம் படம் தொடர்பாக தமிழக அரசிடம் விசாரிக்கப்படும்' என்று குண்டு போட்டார். விஸ்வரூபத்திற்கு 'ஆத

## இந்து முன்னணிக்கு துணைபோகிறார் கமல்?



**எஸ். ஹைதர் அலி**
தமிழக முன்னாள் வக்பு வாரிய தலைவர்
தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் நோக்கத்திலேயே தமிழக அரசு உருப்படியான நடவடிக்கைகளை 'விஸ்வரூபம்' விவகாரத்தில் எடுத்தது. இங்குள்ள முஸ்லிம்களை தீவிரவாதிகளாகக் காண்பித்து அமெரிக்காவை திருப்திப்படுத்த கமல் ஹாசன் முயன்றார். அதுதான் 'விஸ்வரூபம்' படம். திருக்குர்ஆனை கொச்சைப்படுத்தி, தமிழகம் ஏதோ தீவிரவாதத்தின் கேந்திரம் என்பது போன்ற காட்சிகள் அதில் இடம் பெற்றன. கோவை, மதுரையில் முல்லா ஒமர் இருந்ததாகக் கூறும் காட்சிகள் தமிழக முஸ்லிம்களை அப்படி சித்தரிப்பதற்காகவே எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி. எந்த அடிப்படையில் இந்த கருத்தை கமல் படத்தில் வைத்துள்ளார் என்று தெரியவில்லை. தமிழகத்தில் நிலவும் சமூக சூழ்நிலை, சமுதாய ஒற்றுமை ஆகியவற்றை பாதிக்கும் விதத்தில் படத்தை எடுத்தது கமல் தான்.


முன்பு 'மருதநாயகம்' என்று படமெடுத்தார் கமல்ஹாசன். அது ஒரு சரித்திரப் படம். ஆனால், அந்தப் படம் இந்து மதத்தை அவமதிப்பதாக இந்து முன்னணித் தலைவர் ராமகோபாலன் அறிக்கை விட்டவுடன், அப்படம் எடுப்பதையே கைவிட்டார். அப்படிப்பட்ட கமல் முஸ்லிம்களை தவறாகச் சித்தரிக்கும் படத்தை மட்டும் எடுக்கிறார். அதை இந்து முன்னணியும் ஆதரிக்கிறது. தங்களின் இஸ்லாமியர்களுக்கு எதிரான பிரசாரத்திற்கு 'விஸ்வரூபம்' மூலம் கமல் ஹாசன் உதவியிருக்கிறார் என்பதாலேயே இந்து முன்னணி ஆதரிக்கிறதோ என்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது. ஆகவே சமூக நல்லிணக்கத்தைக் கெடுக்கும் காட்சிகளை அப்படத்திலிருந்து நீக்குகிறேன் என்று கமல் அறிவித்துள்ளார். தமிழக அரசின் பேச்சுவார்த்தையின் மூலம் இது நடந்திருக்கிறது. சமூக நல்லிணக்கத்தைக் கெடுக்காத விஸ்வரூபம் பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவு அலையும்', தமிழக அரசுக்கு 'எதிர்ப்பு அலையும்' சம வேகத்தில் நீச்சல் அடித்தன.

இந்நிலையில் உளவுத்துறை டி.ஜி.பி.யாக இருக்கும் ராமானுஜம் 'அரசுக்கு எதிரான மூட் உருவாகி விட்டது' என்று முதல்வர் ஜெயலலிதாவிற்கு 'ரகசிய அறிக்கை' ஒன்றை கொடுத்தார். சூழ்நிலையை தனக்கு ஆதரவாக திருப்ப நினைக்கிறார் கலைஞர் கருணாநிதி என்று உணர்ந்த முதல்வர் ஜெயலலிதா திடீரென்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். கலைஞர் கருணாநிதியின் குற்றச்சாட்டுகளை மறுத்த அவர், 'எனக்கும் கமல்ஹாசனுக்கும் தனிப்பட்ட விரோதம் இல்லை' 'யார் பிரதமர் என்று சொல்வதற்கு கமலுக்கு உரிமை இருக்கிறது. விஸ்வரூபம் படம் தடை செய்யப்பட்டது முழுக்க முழுக்க சட்டம் ஒழுங்குப் பிரச்சினையே தவிர, அரசியல் அல்ல' என்று நீண்டதொரு விளக்கம் கொடுத்தார். அந்தப் பேட்டியின் இறுதியில், 'கமலும், முஸ்லிம் அமைப்புகளும் அமர்ந்து பேசி சமரச தீர்வு ஏற்படுத்திக் கொண்டால், அதற்கு அரசு உதவும்' என்றார்.

முதல்வர் பேட்டியளித்த தினத்தில் கமல்ஹாசன் விஸ்வரூபத்தை (இந்தியில் வெளிவந்தது) மும்பையில் வெளியிடச் சென்று விட்டார். 24 முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஜவஹிருல்லா தலைமையில் கூடினார்கள். 'எந்தெந்த சீன்களை நீக்க வேண்டும்' என்று தேர்வு செய்து அதை அரசிடம் முறையிட்டார்கள். அந்தக் காட்சிகளை நீக்கினால் 35 நிமிடங்கள் படத்தின் நேரம் குறையும். பெப்ரவரி 1ஆம் திகதி மதியம் முதல் ரவுண்ட் பேச்சுவார்த்தை பெயிலியர். ஆகவே கமல் வர வேண்டும் என்றன முஸ்லிம் அமைப்புகள். மும்பையிலிருந்த கமல்ஹாசன் ஆரம்பத்தில் தனக்கு உதவியாக நின்ற கலைஞர் கருணாநிதி, நிதிய மைச்சர் ப. சிதம்பரம் ஆகியோரிடம் தொலைபேசியில் கலந்து பேசினாராம். அதன்பிறகு சென்னை திரும்பினார். நேராக பேச்சுவார்த்தையில் பங்கேற்றார். '35 நிமிடங்கள் கட் பண்ணினால் கதையே போய் விடும்' என்று கூறி, பிறகு 'எட்டு நிமிடக் காட்சிகளை நீக்கலாம்' என்று சம்மதித்தார். கமலைப் பொறுத்தமட்டில் தமிழகம் தவிர, மற்றப் பகுதிகளில் இருந்து வந்த கலெக்ஷன் விவரம் அவருக்கு தெம்பைக் கொடுத்திருந்தது. தமிழக அரசுக்கோ, 'உருவான பப்ளிக் ஒபீனியனை' பியூஸாக்க வேண்டும் என்ற நோக்கம். அதே போல, 'எப்படியாவது ஒரு சமரசம் செய்து கொண்டு பிரச்சினையை முடிக்க வேண்டும்' என்ற நினைப்பு முஸ்லிம்கள் அமைப்பிற்கு ஏற்பட்டது. ஆகவே பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது.



பிறகு நிருபர்களைச் சந்தித்த கமல்ஹாசன், 'என் இஸ்லாமிய சகோதரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் குறைகளைக் கேட்டேன். அதை நீக்க என்னால் என்ன இயலும் என்பதை விளக்கினேன். அதன்படி சில காட்சிகளில் சவுண்ட் இல்லாமல் காட்சிகளை திரையிடுவதாக ஒப்புக் கொண்டு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது' என்று அறிவித்தார். தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும், விடுமுறை நாளில் கூட வந்து இருந்து பேச்சுவார்த்தை நடத்திய உள்துறை செயலாளர் ராஜகோபாலுக்கும் தனியாக நன்றி தெரிவித்தார். மறுநாளே 'விஸ்வரூபம்' படத்திற்கு போடப்பட்ட தடையை 33 மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அடுத்தடுத்து 'நீக்கி' உத்தரவுகளைப் பிறப்பித்தனர். திங்கட் கிழமை (பெப்ரவரி 4ஆம் திகதி) சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற கமல் வழக்கறிஞர் பி.எஸ். ராமன் தன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை வாபஸ் பெற்றார். அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் நவநீத கிருஷ்ணன், 144 தடையுத்தரவு நீக்கப்பட்டதை அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னையில் கமலின் வீட்டின் முன்பாக திரண்ட ரசிகர் கூட்டம்

ஆனால் இந்த முறை வழக்கை விசாரித்தவர் புதிய நீதிபதி ராஜேஸ்வரன். விஸ்வரூபம் தொடர்பாக தொடரப்பட்ட ஆறு வழக்குகளும் முடித்து வைக்கப்பட்டதாக அறிவித்தார் அவர். புதிய தலைமை நீதிபதியாக (பொறுப்பு) பொறுப்பேற்கும் ராஜேஷ் குமார் அகர்வால் வரும் முன்பே 'விஸ்வரூபம்' படம் விவகாரம் முடிவுக்கு வந்தது. நடிகர் கமல்ஹாசனும் பெப்ரவரி 7ஆம் திகதி 'விஸ்வரூபம்' வெளியாகும் என்று அறிவித்தார்.

தமிழகத்தில் இதுவரை தடை செய்யப்பட்ட சினிமாப் படத்திற்கு அகில இந்திய அளவில் 'ரியாக்ஷன்' கிளம்பியது 'விஸ்வரூபம்' படத்திற்கு மட்டுமே. இந்திய அரசின் உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே, செய்தித் துறை அமைச்சர் மணீஷ் திவாரி, பிரபல திரைப்பட நடிகர்கள் ஷாருக்கான் முதல் வட இந்திய சினிமா டைரக்டர் மகேஷ் பட் வரை இதைக் கண்டித்து பேட்டி கொடுத்தார்கள். முதல் முறையாக அ.தி.மு.க. தலைமை மீது தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்ட குற்றச்சாட்டுகளை 'நேஷனல் மீடியா' பெரிய அளவில் 'டிபேட்டாக' செய்தது. தமிழகத்திலும் வைகோ, புதிய தமிழகம் கிருஷ்ணசாமி ஆகியோர் தவிர, அனைத்து அரசியல் கட்சிகளுமே இதைக் கண்டித்தன. தமிழக சினிமாக் கலைஞர்களில் கமலுக்கு கிடைத்தது போல் ரஜினிக்குக் கூட இவ்வளவு பெரிய ஆதரவு மாநில அளவிலும், இந்திய அளவிலும் கிடைத்ததில்லை. இன்றைய திகதியில் தமிழக சினிமாக் கலைஞர்களில் கமல்ஹாசன் நம்பர் வன் ஆக உயர்ந்து நிற்கிறார். விஸ்வரூபம் கொடுத்த வித்தியாசமான 'வசூல்' இது!

இப்போது 'விஸ்வரூபம்' மத்திய-மாநில அரசுகளுக்கு இடையில் 'அதிகாரப் பிரச்சினையாக' மாறிவிட்டது. சென்சார் போர்டு அனுமதி அளித்ததில் ஊழல் என நீதிபதி முன்பு தமிழக அட்வகேட் ஜெனரல் குற்றம் சாட்ட, அப்படிப் பேசியதற்கு அட்வகேட் ஜெனரல் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சென்சார் போர்டு அறிக்கை விட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகு படங்களை மாநில அரசுகள் தடை செய்யக்கூடாது என்ற ரீதியில் 1952ஆம் வருட சினிமாட்டோகிராபிக் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வர மத்திய அரசு தனியாக ஒரு கமிட்டியை அமைத்துள்ளது. படத்திற்கு சர்டிபிகேட் கொடுக்கும் அதிகாரம் (அரசியல் சட்டப்படி சென்டிரல் லிஸ்ட் நம்பர்: 31) மத்திய அரசிடம் இருக்கிறது. ஆனால் பொது அமைதியை நிலைநாட்டுவது (ஸ்டேட் லிஸ்ட் நம்பர் 1) மாநில அரசிடம் இருக்கிறது. ஆகவே இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கமிட்டியால்' எதிர்காலத்தில் மத்திய- மாநில அரசுகளுக்கு இடையே இன்னொரு 'விஸ்வரூபம்' உருவாகப் போகிறது. 'விஸ்வரூபம்' படப் பிரச்சினையால் கிளம்பப் போகும் 'சைட் எபெக்ட்' இது. ஆனால் இந்தப் போராட்டங்களை முன்னின்று நடத்திய முஸ்லிம் அமைப்புகளின் பால் முதல்வர் ஜெயலலிதா நின்றதால், இஸ்லாமிய மக்கள் மனதில் புதிய இடத்தைப் பிடித்துள்ளார் என்பதே நிஜம். அதனால்தான் ஜவஹிருல்லா எம்.எல்.ஏ, 'முதலமைச்சருடன் கொண்டுள்ள இதே ஒற்றுமை வருங்காலத்தில் அரசியலிலும் தொடர வாய்ப்புள்ளது' என்று கூறியுள்ளார். இதேபோல், 'விஸ்வரூபம்' ஏற்படுத்திய சர்ச்சை எதிர்காலத்தில் கமல்ஹாசன் அரசியலில் குதிக்க விரும்பினால் தமிழகத்தில் அதற்கு 'விதை' போடப்பட்டு விட்டது!

### வந்த தடைகளும் சென்ற வழிகளும்

சினிமாப் படங்களுக்கு சென்சார் போர்டு சர்டிபிகேட் வழங்கிய பிறகு 'சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டி' படத்தை தடை செய்ய முடியுமா என்பது சுவாரஸ்யமான கேள்வி. இந்த 1952ஆம் வருட சினிமாட்டோகிராபிக் சட்டம் செல்லும் என்று ஏற்கனவே 'அப்பாஸ்' வழக்கில் 1970-களிலேயே சுப்ரீம் கோர்ட் உறுதி செய்திருக்கிறது. பிறகு இட ஒதுக்கீடு பற்றியும், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்காரை குறை கூறியும் எடுக்கப்பட்ட 'ஒரே ஒரு கிராமத்திலே' படம் தமிழகத்தில் 1989 ஆம் வருடம் பெரும் சர்ச்சையானது. அப்படத்திற்கு கொடுத்த 'சென்சார் சான்றிதழை' சென்னை உயர்நீதி மன்றம் ரத்துச் செய்தது. அந்த மேல் முறையீட்டு வழக்கில், 'ஜனநாயகத்தில் அனைவரும் ஒரே பாடலைப் பாட வேண்டும் என்று தேவையில்லை. கருத்துச் சொல்வது என்பது விதி. அதை அமுல்படுத்த வேண்டும்' என்று கூறி ஹைகோர்ட் உத்தரவை ரத்துச் செய்தது சுப்ரீம் கோர்ட்.

2001ஆம் வருடம் 'மத்திய அரசுக்கும், கே.எம்.சங்கரப்பன்' என்பவருக்கும் இடையே நடைபெற்ற வழக்கில், 'சென்சார் போர்டு ஒரு படத்திற்கு சான்றிதழ் வழங்கி விட்டால், சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும் என்று கூறி அந்தப் படத்தை மாநில அரசுகள் தடை செய்ய முடியாது. ஏனென்றால் ஜனநாயக சமுதாயத்தில் பல தரப்பட்ட கருத்துகளுக்கும் இடமளிக்க வேண்டும். சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவது மாநில அரசின் பொறுப்பு' என்று கூறியது சுப்ரீம் கோர்ட். அதன் பிறகு இதே கருத்தை 'பிரகாஷ் ஷா' வழக்கில் சுப்ரீம் கோர்ட் உறுதி செய்தது. அந்த கருத்தை வலியுறுத்தி, 'அரக்ஸன்' என்ற இந்திப் படத்திற்கு உத்தர பிரதேச மாநிலத்தில் போடப்பட்டிருந்த தடையை ரத்துச் செய்தது சுப்ரீம் கோர்ட். அதே நேரத்தில் இப்போது வெளிவந்திருக்கிற ஒரு தீர்ப்பில் 'டேம் 999' (தமிழகத்திற்கும்- கேரள மாநிலத்திற்கும் இடையே அனல் பறக்கும் முல்லைப் பெரியாறு அணை பற்றியது) படத்தை மாநில அரசு தடை செய்தது சரி' என்று சுப்ரீம் கோர்ட்டே தீர்ப்பளித்துள்ளது. ஆகவே 'விஸ்வரூபம்' படம் இறுதித் தீர்ப்பிற்கு வந்திருந்தால் கூட, இது போன்று ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்புகள் கை கொடுத்திருக்கும்.

### விஸ்வரூபத்திற்கு கை கொடுக்கும் தடைகள்


இந்தியாவில் சென்சார் போர்டே 'வாட்டர்' 'பைனல் சொல்யூஷன்' 'வார் அன்ட் பீஸ்' போன்ற படங்கள் தடை செய்தது. சென்சார் போர்டு சர்டிபிகேட் கொடுத்து பிறகு தடை செய்யப்பட்ட படங்கள் வரிசையில் 'டாவின்சி கோட்' 'தேஷ்துரோகி' போன்றவை உள்ளன. இதில் 'டாவின்சி கோட்' தமிழகம் உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் தடை செய்யப்பட்டு பிறகு நீதிமன்றம் தடையை நீக்கியது. டாவின்ஸி கோட் 'கிறிஸ்தவ மதத்தை' இழிவுபடுத்துகிறது என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானது. மஹாராஷ்டிராவில் பணிபுரியும் வேறு மாநில ஊழியர்களின் அவல நிலைமையை படம் பிடித்துக் காட்டியது 'தேஷ் துரோகி' படம்! இதே மாதிரித் தடையை குஜராத் கலவரத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'பர்ஷனியா' படத்திற்கு விதிக்கப்பட்டது. சர்தார் சரோவர் டேமை மனதில் வைத்து எடுக்கப்பட்ட 'ஃபன்னா' போன்ற படங்களுக்கும் இதே மாதிரி தடை பிறகு நீதிமன்றம் 'ரிலீப்' கிடைத்தது.

ஆனால் இவற்றுள் இரு முக்கிய விடயங்கள் 'விஸ்வரூபம்' படத்திற்கு உதவிக்கரமாக இருக்கிறது. 'டாவின்சி கோட்' படத்திற்கான தடையை நீக்கும் போது, 'மெஜாரிட்டியாக கிறிஸ்தவர்கள் வாழும் நாடுகளிலேயே அந்தப் படம் திரையிடப்படுகிறது' என்று ஒரு காரணத்தை மேற்கோள் காட்டியது சுப்ரீம் கோர்ட். இப்போது விஸ்வரூபம் படம் முஸ்லிம்கள் அதிகம் வாழும் உத்தரப்பிரதேச மாநிலம், கேரள மாநிலம் ஆகியவற்றில் திரையிடப்படுகிறது. முஸ்லிம்கள் அதிகம் உள்ள மலேசியாவிலும் திரையிடப்பட்டுள்ளது. இன்னொன்று, 'படத்தை பார்க்காமலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடை விதித்துள்ளார்கள்' என்று காரணம் கூறி தெலுங்கில் வெளிவந்த 'பம்பாய்' படத்தை ஆந்திராவில் திரையிட அனுமதியளித்தது சுப்ரீம் கோர்ட். அதே மாதிரி விஸ்வரூபம் விவகாரத்திலும் பொலிஸ் கமிஷனரோ, மாவட்ட ஆட்சித் தலைவர்களோ தடை பிறப்பித்த நாட்களில் 'விஸ்வரூபம்' படத்தை பார்த்திருக்க நியாயமில்லை. ஏனென்றால் அன்றைய தினம் அந்தப் படம் ரிலீஸ் ஆகவில்லை! இதுவும் 'விஸ்வரூபத்திற்கு' சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது என்கிறார் சீனியர் வழக்கறிஞர் ஒருவர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேதாவியின் மின்னஞ்சல்



# தமிழ்க் கூட்டமைப்பினருக்கு பத்துக்கட்டளைகள்

பேரன்புடையீர்.
வணக்கம்.

நலம் வேண்டிப்பிரார்த்திக்கிறேன்.
நலம் வேண்டுவது, தங்களுக்காய் அல்ல
தமிழினத்திற்காய்.
தந்தை செல்வா அன்று தீர்க்க தரிசனமாய்ச்
சொன்னது போல,
கடவுள் காப்பாற்றவேண்டிய நிலையில் தான்
இன்றைய ஈழத்தமிழினம் இருக்கிறது.
கொடுமையான முப்பதாண்டு இனப்போர் எந்தப்
பயனுமின்றி முடிந்து போக,
காப்பாரின்றி கதியிலிகளாய் இன்றைய
ஈழத்தமிழர்களின் இருப்புத் தொடர்கிறது.
ஆளுமை மிக்க தமிழ்த் தலைவர்கள் பலர் போரில்
அழிந்து போனார்கள்.
அவர்களைப் போல் அல்லாமல்,
புலிகளை வழி மொழிந்து வாழ்வைத் தக்க வைத்துக்
கொண்டவர்கள் நீங்கள்.
சுயமிழந்து, புலிகளின் நிழலில் தங்கி,
அவர் தம் சாயலால் மீண்டும் அரசியலில் பிரவேசித்து,
பாராளுமன்ற இருக்கைச் சுகத்தை அனுபவிப்பவர்கள்
நீங்கள்.
தம் கருத்து உலக நாடுகளின் உள் நுழைய,
தம்மை முழுக்க முழுக்க வழி மொழிந்து நிற்கும்,
சுயமற்ற ஜனநாயக முகம் ஒன்று தேவை என்றுணர்ந்த
புலிகள்,
அத்தகுதிகளை முழுமையாய்க் கொண்டிருந்த
உங்களை,
தம் நோக்கம் நிறைவேற்றத் தேர்ந்தெடுத்தனர்.
ஒரு முறை தேர்தலில் வெற்றி பெற்ற உங்களின்
உறுப்பினர் அனைவரும்,
புலிகளைச் சந்திக்கவென கொழும்பிலிருந்து
சென்ற போது,
"இப்போது சந்திக்க நேரமில்லை" என,
புலித்தலைவர்களால் திருப்பி அனுப்பப்பட்டனர்.
அது கேட்டு மறுபேச்சு இல்லாமல்
உங்கள் எம்.பி.க்கள் திரும்பி வந்தனர்.

அப்போதே உங்கள் மீதான
புலிகளின் அலட்சியத்தையும்,
உங்களின் ஆளுமையின்மையையும்
நாம் உணர்ந்து கொண்டோம்.

இப்படியாய் இருந்த உங்கள் அரசியல் வாழ்வில்,
புலிகள் அழிக்கப்பட்டு போர் முடிந்ததும்,
உங்கள் அணிக்கு ஒரு புதிய முகம் உருவாகியது.
அதுவரை புலிகளின் ஒலிபெருக்கிகளாய் மட்டும்
இயங்கி வந்த நீங்கள்,
சுயமாய்ப் பேசத்தொடங்கினீர்கள்.
ஈழத்தமிழினத்தின் ஏகதலைவர்கள் நாங்களே! என,
பகிரங்கமாய் அறிவித்து இயங்கத்தொடங்கினீர்கள்.
தமிழ்த்தலைமைகளில் சிலர் அரசோடு இணைந்து
இயங்க,
மாற்றுத்தலைமை இல்லாத சூழ்நிலையில்,
இலங்கை வாழ் தமிழர்களுக்கும்,
புலம்பெயர் தமிழர்களுக்கும்,
இலங்கையினுள் ஏதோ வகையில் மூக்கை நுழைக்க
முயன்ற,
அரசுக்கெதிரான வெளிநாடுகள் சிலவற்றிற்கும்,
உங்கள் அமைப்பையே தமிழினத்தின் ஏகதலைமை
யாய்,
ஏற்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை.
சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமைந்து போக,
ஈழத்தமிழினத்தின் தலைமை மணிமுடி தானாய் வந்து
உங்கள் தலையில் அமர்ந்தது.

அனுபவஸ்தர்கள் அதிகமில்லாத அச்சூழ்நிலையில்,
முன்பு கட்சியில் மூன்றாம், நான்காம் இடத்திலிருந்த
பலரும்,
முதலாம் இடத்திற்குத் தம்மைத்தாமே நகர்த்திக் கொண்
டனர்.
காலியான மூன்றாம், நான்காம் இடங்களில்,
இனப்பற்றோ, தியாக வாழ்வோ, தலைமைத்துவமோ
இல்லாத பலரும்,
தம் தனிச்செல்வாக்கைப் பயன்படுத்திப் பொருந்திக்
கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் அழிவின் பின் நடந்த தேர்தலில் வீசிய
அனுதாப அலையில்,
நீங்கள் எல்லோரும் காற்றில் பறந்த சருகுகளாய்,
பறந்து போய் பாராளுமன்றக் கதிரையில் உட்கார்ந்து
கொண்டீர்கள்.
இந்நிலையிலும் அப்பாவி ஈழத் தமிழர்கள்,
நீங்கள் இனத்திற்காய் ஏதும் செய்வீர்கள் என
ஆவலாய் எதிர்பார்த்தனர்.
நாளாக நாளாக உங்களின் கையாலாகாத்தனம்
உள்ளங்கை நெல்லிக்கனியாக,
இனி யாரை நம்புவது எனும் திகைப்பில் தமிழினம்
இன்று தவித்து நிற்கிறது!

உங்களின் மீதான நம்பிக்கையின்மையின் சாட்சியாய்,
அண்மைக்காலமாக ஊடகங்களில் உங்களை
விமர்சித்தும், குற்றஞ்சாட்டியும்,
பல கட்டுரைகள் வரத்தொடங்கியிருக்கின்றன.
அங்ஙனம் வெளிவரும் கட்டுரைகளில் கூறப்படும்
கருத்துகளை உள்வாங்கி,
உங்கள் கட்சியின் சார்பில் பொறுப்புணர்ச்சியோடு
எந்தப்பதிலும் வருவதில்லை.
எவரும் எவரையும் விமர்சிக்கலாம், கேள்வி
கேட்கலாம் என்பதான உரிமைகள்,
ஜனநாயகம் என்கின்ற குடியாட்சித் தத்துவத்தின்
தனித்தகைமைகள்.
முடியாட்சிக்காலத்திலும் மேல் உரிமைகள்
அரசை நெறிப்படுத்தத் தேவையானவை என,
தமது பொருட்பாலில் வள்ளுவர் உரைக்கின்றார்.
செவிகைப்ப சொற் பொறுக்கும் வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு"
"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"
என்பதான குறள்கள் மேற் கருத்துக்காம் சான்றுகள்.
தமிழ், தமிழ் என்று கூறும் நீங்கள்.
மேற்குறள்களைப் படித்தீர்களோ என்னவோ
தெரியவில்லை?
உங்களின் நண்பரான தமிழக முன்னாள்
முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்,
ஜனநாயக விழுமியங்கள் அத்தனையையும் இழிவு
செய்வதில் முதன்மை பெற்றவராயிருந்தாலும்,
எதிராளிகளின் விமர்சனங்களுக்கான பதிலை
மக்கள்முன் வைப்பதில் மட்டும்,
இன்றுவரை ஜனநாயகப் பண்பினை விடாது
பின்பற்றுகிறார்.
தமது கட்சி பற்றி அன்றன்று எழும்பும்
விமர்சனங்களுக்கும்,
குற்றச்சாட்டுகளுக்குமான பதில்களை,
தனது கட்சிப்பத்திரிகையான முரசொலியின்
ஆசிரியர் தலையங்கத்தில்,
உடனுக்குடன் தர அவர் தவறுவதில்லை.
அவர் எழுதும் பதில்கள் சரியானவையோ,
பிழையானவையோ,
அவரது மேற் செயற்பாடு முதிர்ந்த இந்த வயதிலும்
உறுதியாய்த் தொடர்கிறது.
எது எதற்கோ தமிழகத்தலைவர்களைப்
பின்பற்றுகின்ற நீங்கள்,
இந்த விடயத்திலும் அவரைப் பின்பற்றினால்
நல்லது என்பது மக்கள் கருத்து.

ஈழத் தமிழர்தம் வாழ்வின் வெற்றியும், தோல்வியும்,
இனத்தலைமை பூண்டிருக்கின்ற தலைவர்களின்
வெற்றி தோல்விகளால்,
தீர்மானிக்கப்படும் அவலநிலை வரலாற்றில்
தொடர்ந்து வருகிறது.
ஈழத்தமிழர்தம் அறிவு சாரா வெற்றுணர்ச்சிப்
போக்கே இதற்கான முக்கியகாரணம்.
தலைவர்களைக் குற்றஞ்சாட்டும் வேளையில்,
பொறுப்பில்லாத்தமிழர்களையும் குற்றஞ்சாட்ட
வேண்டியேயிருக்கிறது.
ஜனநாயக சலுகைகளை அனுபவிக்கும் தகுதி
நமக்கு உண்டா? என்று,
நம்மை நோக்கியே நாம் விரல்
நீட்டவேண்டியிருக்கிறது.
அறிவாளிகள் என தம்மைத்தாம்
பாராட்டிக்கொண்ட ஈழத்தமிழர்கள்.
அறிவைப் புறந்தள்ளி உணர்ச்சியின்
அடிப்படையில் தலைமைகளை ஏற்பதும்,
அத்தலைமைகள் உரைக்கும் பொய்மைகளை
அறிவாராய்ச்சியின்றி ஏற்றுக்கொள்வதும்,
அவர்தம் அடி பற்றி கேட்டுக்கேள்வியின்றி பின்
நடப்பதுமாக இருந்து விட்டு,
அவர் தம் வீழ்ச்சியின் பின் அவ் வீழ்ச்சியில்
தமக்குத் தொடர்பு இல்லை என்னுமாப் போல்,
பிறத்தியாராய் நின்று கைகொட்டிச் சிரிப்பதும் மீண்டும்
அடுத்த தலைமையை ஆகாயத்தில் ஏற்றுவதுமாக,
ஈழத்தமிழர் தம் வாழ்வு போய்க்கொண்டிருக்கிறது.
தலைவர்கள் பொய்யர்களாய் ஆக ஒருவகையில்
நாமும் காரணர்களாய் இருந்திருக்கிறோம்.
அமிர்தலிங்கத்தை இப்படித்தான் ஆதரித்தோம்.
அவர் பேசிய கூட்டங்களுக்கு ஆயிரமாய்
மக்கள் சேர்ந்தனர்.
அவர் புலிகளால் சுடப்பட்ட போதும்
ஆயிரமாய் மக்கள் சேர்ந்தனர்.
முன் சேர்ந்த கூட்டம் போற்றிச்சேர்ந்தது.
பின் சேர்ந்த கூட்டம் தூற்றிச் சேர்ந்தது.
இரண்டு கூட்டமும் ஒன்றென்பது தான் துரதிர்ஷ்டம்.
இதே போல் தான் புலிகள் விடயத்திலும்
நடந்து கொண்டோம்.
அவர்கள் செய்த பிழைகளுக்கு
நாமே சமாதானம் தேடினோம்.
தோற்ற பின், அவர்கள் செய்த சரிகளையும்
இழிவாய் விமர்சித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் பேச்சுகளைக் கேட்க லட்சமாய்
மக்கள் கூடுகின்றனர்.
இத்தனை ஆதரவா உங்களுக்கு?" என
வின்சன்ற் சேர்ச்சிலை ஒருவர் கேட்ட போது,
"நாளை இவ் அரங்கில் என்னை தூக்கிலிடுவதாய்
கூறிப்பாருங்கள்,
இதை விட அதிகமாய்க் கூட்டம் வரும்"
என்றாராம் அவர்.
தமிழர்களைத்தான் அவர் சொன்னாரோ? என
எண்ணத்தோன்றுகிறது.
தனித்துவம் இல்லாத தமிழர்களின்
இப்போக்கினால் தான்,
தலைவர்களின் தோல்வியின் பயனைத் தாமும்
அனுபவிக்க வேண்டிய நிலைக்கு
அவர்கள் தள்ளப்பட்டனர்.

வட்டுக்கோட்டையில் தந்தை செல்வாவினால்
தனி ஈழப்பிரேரணை முன் வைக்கப்பட்ட போது,
அதன் சாதக, பாதகத்தை விமர்சித்து
ஆராயத்தவறினோம்.
பின் அதே கொள்கையோடு கூட்டணி அமைத்து,
அமிர்தலிங்கம் தலைமையில் தேர்தலில்
போட்டியிட்ட தலைவர்கள்,
"தனி ஈழம் தங்கத்தட்டில் நாளையே வரும்!"
என்றாற்போல் பேசிய பேச்சுகளையும்,
ஆராயாமல் அங்கீகரித்தோம்.
பின் அவர்களது போக்கு மாறி, இனாமாய்க்
கிடைத்த வாகன சுகத்திற்காக,
தங்கம் கேட்டு தகரம் வாங்கிய கதையாய்
மாகாண சபையை அவர்கள் அங்கீகரித்தபோதும்,
அதனை ராஜதந்திரம் என்றுரைத்து ஊக்குவித்தோம்.
அக்காலத்தில் இக்கொள்கைகளை மறுத்தவர்களை
எல்லாம்,
இனத்துரோகிகளாய்ப் பட்டம் சூட்டி இழிவு செய்தோம்.
கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத்தமிழினத்தின்
தலைமை ஏற்றிருந்த,
ஆயுதக் குழுக்கள் தம்மை விமர்சித்தோரை
துரோகிகளாய்க் கருதி அழிக்கத்தலைப்பட்டன.
அப்போதும் அது தவறு என்றுரைக்க எம்மில்
எவரும் முன்வரவில்லை.
இங்ஙனமாய் மேற்தலைமைகள் செய்த
தவறுகளை விமர்சிக்கத் தவறினோம்.
அதனால் தான் அவ் அமைப்புகள்
இடிப்பாரின்றி இழிந்து போயின.
அவ் அமைப்புகளின் இழிவு தமிழினத்தினதும்
இழிவாயிற்று.
நிகழ்காலத்திலும் இந்நிலையை நிதர்சனமாய்த்
தரிசித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும் ஒரு தலைமையை விமர்சனங்களுக்கு
அப்பாற்பட்டதாய் விடுத்து,
அத் தலைமையின் வீழ்ச்சியில்
தமிழ் இன வீழ்ச்சியையும் பொருத்திக்கொள்ள,
இனியும் ஈழத்தமிழினம் அனுமதிக்காது என்பதை,
இன்றைய தமிழ்த் தலைமையை ஏற்றிருக்கும்
அனைத்து அரசியல் குழுக்களும்,
அறிந்து கொள்ளுதல் அவசியம்.
அது நோக்கியே அண்மைக்காலமாக
தமிழ்த்தலைவர்களை நோக்கிய,
கடும் விமர்சனங்களை பத்திரிகைகள்
முன்வைத்து வருகின்றன.

ஆனால் மேற்படி விமர்சனங்களுக்கு
பதிலுரைக்கும் கடப்பாடு தமக்கு இருப்பதாய்,
உங்களின் எந்தத் தலைவர்களும் கருதுவதாய்த்
தெரியவில்லை.
சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்கும் அரசியல்
நட்வடிக்கைகள் பற்றி முன்வைக்கப்படும்
விமர்சனங்களுக்கும் எந்தவித பதிலும் உரைக்காமல்,
"எங்களைக் கேட்கவும், விமர்சிக்கவும்
நீங்கள் யார்?" எனினும்,
சர்வாதிகார மனப் போக்கோடு நீங்கள் இயங்கி
வருவது வருத்தம் தருகிறது.
பத்திரிகைகளின் கேள்விகளை மட்டுமன்றி,
இணைந்திருக்கும் நட்பான கட்சிகளின்
கேள்விகளையும் கூட,
உதாசீனப்படுத்தி மௌனிக்கும் போக்கு
உங்களிடையே அதிகரித்து வருகிறது.
இப் போக்குத் தொடர்ந்தால் இயக்கங்களின்
முடிவினையே நீங்களும் அடைவீர்கள் என்பதனை,
வருத்தத்தோடு வலிமையாய்ச் சுட்டிக்காட்ட
வேண்டியிருக்கிறது.

அண்மைக்காலமாக உங்களின் மத்தியில்,
விரிசல்களும், குழப்பங்களும் தோன்றத்
தொடங்கியுள்ளன.
புலிகளைப் போலவே நீங்களும்,
முழுக்க முழுக்க வெளிநாடுகளின்
வழிப்படுத்தல்களை மட்டுமே நம்பி,
சுயமிழந்து இயங்கத் தொடங்கியிருக்கிறீர்கள்.
அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பி
உங்கள் தலைவர் சம்பந்தன்,
யாழ். மண்ணிலேயே சிங்கக் கொடி ஏந்தி நின்றார்.
அறியாமைக்கோலம் அது.
அண்மையில் அவரே புலிகளின் குறைகளையும்
விமர்சித்திருந்தார்.
காலங்கடந்த ஞானம் அது.
இத்தகு சம்பவங்களால் புலம்பெயர் தமிழர்கள்,
உங்கள் மேல் வைத்த நம்பிக்கையை
இழக்கத்தொடங்கியிருக்கின்றனர்.
உள்ளத்தமிழர்களும் தான்.
கூட்டமைப்பை பதிவு செய்வதிலும் உங்கள்
கட்சிக்குள் குழப்பம் விளைந்திருக்கிறது.
வெற்றிக்கனி தம் மடியில் மட்டுமே வீழ வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் விருப்பால்,
தமிழரசுக்கட்சியின் தனித்துவம் பேணுவதில்
புதிய முனைப்புடன் உங்களில் ஒருசிலர்.
கட்சியின் சில முடிவுகள் தமக்குத் தெரியாமலே
எடுக்கப்படுகின்றன என்று,
உள்ளிருக்கும் தலைவர்களே குரல்
கொடுக்கத்தொடங்கியிருக்கின்றனர்.
உங்களில் யார் முடிவெடுக்கிறார்கள்?
யார் சொல்லி முடிவெடுக்கிறார்கள்?
என்பதெல்லாம் எவர்க்கும் சொல்வதில்லை.
உங்களது இயங்குதல் பற்றி மக்களுக்கு எந்தத்
தெளிவும் இல்லை.
நீங்கள் தெளிவிக்க விரும்புவதுமில்லை.
வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறீர்கள்.
சென்றது எதற்கு? சாதித்தது எவை? என்பது பற்றி,
ஊடகங்களுக்குக் கூட நீங்கள் ஏதும் தெளிவாய்ச்
சொல்வதில்லை.
தூரத்தினால் ஓடும் ஆடுகளாய் மக்களை நீங்கள்
கருதுவது வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது.
இப்படியாய் உங்கள் நிலை தழும்பியிருக்கும்
இவ்வேளையில்,
சிலவற்றை உறுதியாய் உங்களுக்குச்
சொல்லவேண்டியிருக்கிறது.

வெளிநாடுகளிடம் கையேந்துவது ஒன்றைத்தவிர,
இன ஏற்றத்திற்காய் இப்போது நீங்கள் ஏதும்
செய்வதில்லை.
தமிழ் மண்ணில் கிறீஸ் மனிதனின்
நடமாட்டத்தின் போதும்,
ஆக்கிரமிப்பால் நாளுக்கு நாள் தமிழ் மண்
இழக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போதும்,
அண்மையில் யாழ். பல்கலைக்கழக மாணவரின்
அகிம்சைப் போராட்டம்,
அநியாயமாய் அடக்கப்பட்ட போதும் கூட
உங்களிடம் இருந்து வலிய எதிர்ப்புகள் கிளம்பவில்லை.
சுருங்கச் சொன்னால்,
வாழ்விழந்து நிற்கும் வறிய தமிழர்களின் வலிய
தலைவர்களாய் இன்று நீங்கள் இல்லை.

தலைவர்களின் செயல்பாட்டை
நெறிப்படுத்தும் பொறுப்பு,
ஜனநாயகத் தூண்களில் ஒன்றாய்ப் பேசப்படும்
ஊடகங்களுக்கு இருப்பதாலேயே,
இக் கடிதத்தினை வரையவேண்டியிருக்கிறது.
வரலாற்றிலேயே அதி உச்ச சோதனைக்களத்தில்
வாழும் இன்றைய ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காய்,
தனித்து நீங்கள் ஏதும் செய்யப்போவதில்லை
என்பது தெளிவாகிவிட்டது.
குழம்பிப் போயிருக்கும் உங்களிடம் அதுபற்றி
இனிக் கோரிக்கைகள் வைப்பதில் பிரயோசனம் இல்லை.
ஆனாலும் இனத்தின் தனித்தலைமை எமக்கே என,
நீங்கள் இன்றும் உரைப்பதால் உங்களை வலிமைப்படுத்
துவதற்காய் சில ஆலோசனைகளைச் சொல்ல வேண்டி
யிருக்கிறது.
பாமபிதா சொன்ன பத்துக்கட்டளைகள் போல், பாதிப்
புற்ற தமிழர் சார்பில்,
உங்களுக்கும் பத்துக் கட்டளைகளை உரைக்க விரும்
புகிறேன்.
தயை கூர்ந்து இனியேனும் உங்கள் சிந்தனையில்,
அக் கருத்துகளை ஆழப்பதியுங்கள்.


1. அயல் நாடுகளின் உதவியை நாடும் போது நம் சுயம் இழக்காமல் செயற்படுத்துங்கள்.
2. ஓர் இனத்தின் தலைவர்கள் என்ற வகையில் தமது செயல்பாட்டுக்கான காரணங்களை மக்கள் முன் வைக்கும் கடமைப்பாட்டை மீற முடியாது என்பதனை உதவி செய்ய முன்வரும் நாடுகளுக்கு வலிமையாய் உணர்த்துங்கள்.
3. புலம்பெயர் தமிழர்களின் பொருளாதார ஆதரவை சரிவரத்திரட்டி தாய் மண்ணின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்.
4. இறந்தகால கல்வி, பொருளாதார இழப்புகளை நிகழ் காலத்தில் சரிசெய்யவும், வருங்காலத்தில் நிறைவுபடுத்தவும் திட்டமிடுங்கள்.
5. தனி மனிதர்க்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட போர்க் காலப் பாதிப்புகளை நிவர்த்தி செய்யத் திட்டம் தீட்டுங்கள்.
6. திடீர் சுதந்திரத்தால் இளையோர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சமநிலைத் தடுமாற்றத்தைச் சரி செய்யும் வழி பற்றி ஆராயுங்கள்.
7. கட்சிப்பாகுபாடுகளுக்கு அப்பால் இனத்தலைமையை ஒருமுகப்படுத்தவும் இனக்குரலை ஒரே குரலாய் ஒலிக்கச் செய்யவும் வழிவகை செய்யுங்கள்
8. சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் தம் நியாயமான கோரிக்கைகளை பகையின்றி பதிவு செய்ய முயலுங்கள்.
9. தமிழ்நாட்டு அரசியல் தலைமைகளுக்கு ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் அரசியல் கடந்து ஒருமுகப்பட்டு செயற்படும் அவசியத்தை உணர்த்துங்கள்.
10. நம் நாட்டில் சிறுபான்மை இன அனைத்துக் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி நிகழ்கால, எதிர்காலப் பிரச்சினைகள் பற்றி ஒருமித்த முடிவுகளை எடுக்கச்செய்து பேரினவாதிகளைத் தக்கபடி சமன் செய்யுங்கள்.

மேற் பத்துக்கட்டளைகளும் உங்கள்
மனதில் ஆழப்பதியுமானால்,
உங்கள் தலைமைத்துவம் தனித்துவம் கொள்ளும்.
ஈழத்தமிழர் வாழ்வு இனிமையுறும்.
கனவுகளேனும் இனிமை தரட்டும் எனும் கற்பனையில்,
இக்கடிதம் வரைகிறேன்.
தமிழ்ச்சாதியின் தலையெழுத்து எப்படியோ?

இப்படிக்கு
மேதாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய -பாகிஸ்தான் தகராறுக்குள் அகப்பட்டுக் கொண்ட சாருக்கான்



துணிவதற்கான எந்த அறிகுறியையுமே காண முடியாமல் இருக்கும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான தகராறுக்குள் இந்தித் திரையுலகின் சூப்பர்ஸ்டார் சாருக்கான் நினையாப்பிரகாரம் அகப்பட்டுக் கொண்டார். பாகிஸ்தானிய இராணுவத்தினர் இரு இந்தியப் படைவீரர்களைக் கொடூரமாகக் கொன்ற அண்மைய சம்பவத்தையடுத்து ஜம்மு-காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் பதற்றநிலை அதிகரித்திருந்தது. இதன் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, விளையாட்டுத்துறை மற்றும் கலாசார உறவுகள் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருக்கின்றன.

> அமெரிக்கச் சஞ்சிகையில் நான் என்ன எழுதியிருக்கிறேன் என்று முதலில் வாசித்து விட்டு அதைப்பற்றி பேசுங்கள். மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறேன்

ஆனால், இருநாடுகளுக்கும் இடையிலான தகராறுக்குள் சாருக்கானின் பிரவேசம் அவரின் சில திரைப்படங்களைப் போன்றே திடீர் திருப்பங்களுடன் கூடியதாக இருக்கிறது. இந்தியனாக இருப்பதில் எப்போதுமே பெருமையடைவதாகக் கூறிக்கொள்கின்ற சாருக்கான், தனது தாய்நாட்டுக்கும் உபகண்டப் பிரிவினைக்கு முன்னர் தந்தையின் நாடாக விளங்கிய பாகிஸ்தானுக்கும் இடையேயான சர்ச்சையின் மையமாக தான் ஒரு நாள் மாறுவார் என்று ஒரு போதுமே கற்பனை செய்திருக்கமாட்டார். அமெரிக்காவில் பயங்கரவாத தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான காலகட்டத்தில் ஒரு "கானாக" இருப்பதில் தான் எதிர்நோக்கும் அனுபவங்கள் குறித்து அமெரிக்கச் சஞ்சிகையொன்றின் விசேட பதிப்பில் சாருக்கான் எழுதிய எந்தத் தீங்கும் இல்லாத கட்டுரையொன்றே பிரச்சினைக்குக் காரணமாகியிருக்கிறது.

சாருக்கான் கையெழுத்திட்டு எழுதியிருக்கும் அக்கட்டுரை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விமான நிலையங்களில் அமெரிக்க குடிவரவு அதிகாரிகளுடனான அனுபவங்கள் குறித்து பெரும் கவலைகொண்டவராக இருக்கும் கான் தனது வாழ்வு, இந்து மதத்தவரான மனைவி மற்றும் பிள்ளைகள் பற்றியெல்லாம் எழுதியிருக்கிறார். அவ்வாறு எழுதும்போது தன்னைப் பற்றிய எண்ணங்களையும் கூட எடுத்தியம்பியிருக்கிறார்.

"நான் சில சந்தர்ப்பங்களில் நினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பிரகாரம் அரசியல்வாதிகளின் இலக்காகிவிடுகிறேன். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களைப் பற்றி தவறாக தாங்கள் நினைக்கிற சகலதினதும் சின்னமாக இந்த அரசியல் தலைவர்கள் என்னைத் தெரிவுசெய்துவிடுகிறார்கள். எனது சொந்த நாட்டைவிடவும் அயல்நாட்டை நேசிப்பவனாக பல சந்தர்ப்பங்களில் நான் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறேன். நான் ஒரு இந்தியன் என்பதையும் எனது தந்தையார் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடியவர் என்பதையும் கவனத்திலெடுக்காமல் இக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். வீட்டைவிட்டு வெளியேறி எனது மூலமுதலான தாய்நாடு என்று அவர்கள் குறிப்பிடுகிற நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிடுமாறு கூட்டங்களில் அரசியல் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் மிகவும் தாழ்மையாக நிராகரித்து வந்திருக்கிறேன், என்று சாருக்கான் எழுதியிருக்கிறார்.

தனது கடைசிப் பெயரை சில பயங்கரவாதிகள் தற்செயலாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக தன்னையே அந்தப் பயங்கரவாதிகளில் ஒருவன் என்று தவறாக நினைப்பதனால் தான் சலிப்படைந்துவிட்டதாகவும் குறிப்பிட்டிருக்கும் சாருக்கான், தான் ஒரு பயங்கரவாதியல்ல என்று உணர்த்துவதற்காகவே "மை நெம் இஸ் கான்" என்ற படத்தைத் தயாரித்ததாகவும் எழுதியிருக்கிறார். "இந்தத் திரைப்படத்தை முதற்தடவையாக அமெரிக்காவில் காண்பிப்பதற்காகச் சென்றபோது எனது கடைசிப் பெயர் பற்றி மணித்தியாலக் கணக்காக விமான நிலையத்தில் விசாரிக்கப்பட்டேன். ஒக்லஹோமா நகரில் ட்ரக் குண்டுவெடிப்பை நிகழ்த்திய அமெரிக்கப் பயங்கரவாதி திமோஜி மக்வீயை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். கான் என்ற எனது கடைசிப் பெயருக்காக என்னை விசாரிப்பதைத் போன்று மக் வீ என்று கடைசிப் பெயரைக் கொண்டிருக்கக் கூடிய சகலரையும் விசாரிப்பார்களா?'' என்று கேள்வியெழுப்பியிருந்தார் சாருக்கான்.

பாகிஸ்தானைச் சேர்ந்த சிலர் சாருக்கானின் இந்தக் கருத்துகளுக்கு ஒரு இனவாதக் கோணத்தைக் கற்பிக்காதிருந்தால், அமெரிக்கச் சஞ்சிகையில் அவர் எழுதியவை அநேகமாக கவனத்தைப் பெறாமல் போயிருக்கும். எல்லைப்பகுதியில் இந்தியப் படைவீரரின் தலை துண்டிக்கப்பட்டபோது அங்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் நன்கு பிரபலமான எதிரியும் லஷ்கர்-ஈ-தைபா இயக்கத்தின் ஸ்தாபகருமான ஹபீஸ் சயீட் தான் நிலைவரங்களைக் குழப்பிவிட்டவர். இந்தியாவைச் சீண்டிப் பார்ப்பதற்காக அவர் "இந்தியாவில் பாதுகாப்பு இல்லையென்றால் பாகிஸ்தானுக்கு வருமாறு'' சாருக்கானைக் கேட்டார். பாகிஸ்தானில் முழுமையான பாதுகாப்புடன் வாழலாம் என்று அவருக்கு சயீட் உறுதி வழங்கினார்.

சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக்கின் கருத்தே மேலும் சிக்கலை ஏற்படுத்தியது. இஸ்லாமாபாத்தில் இந்தியத் தூதரகத்தில் வைபவமொன்றில் கலந்துகொண்ட பிறகு ரெஹ்மான் மாலிக் இந்தியா சாருக்கானுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார். "நடிகர் இந்தியாவில் பிறந்தவர். இந்தியனாக இருக்கவே அவர் பிரியப்படுவார். ஆனால், அவருக்கு பாதுகாப்பு அளிக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் நான் வேண்டுகின்றேன். சகல இந்திய சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் சாருக்கானைப் பற்றி எதிர்மறையாகப் பேசுகிற சகலருக்கும் ஒரு வேண்டுகோள்விடுக்க விரும்புகிறேன். அவர் ஒரு திரைப்பட நடிகர் என்பதை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்'' என்று சாருக்கானின் கட்டுரை பற்றிய சயீட்டின் கருத்துகள் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது பதில் கூறினார் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர்.

ரெஹ்மான் மாலிக் இந்தியாவுக்குக் கூறிய ஆலோசனை இந்திய அரசாங்கத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் கடுமையான ஆத்திரத்தை ஏற்படுத்தியது. "எமது பிரஜைகளின் பாதுகாப்பை கவனித்துக்கொள்ளக் கூடிய ஆற்றலும் தகுதியும் எமக்கு இருக்கிறது. மாலிக் தனது சொந்த நாட்டின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படட்டும்'' என்று இந்திய உள்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.கே.சிங் கூறினார்.

மாலிக்கின் கருத்துகளை சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் செய்தார்கள். பாகிஸ்தான் கலைஞர்கள் கூட இந்தியாவுக்கு வருகிறார்கள். நாம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறோம். இந்தியாவில் முஸ்லிம்களுக்கு முழுமையான பாதுகாப்பு இருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின் பேச்சாளரான ரஷீத் அல்வி கூறினார். மாலிக் தனது சொந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களின் நிலைமை மீது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று இந்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சர் மானிஷ் திவாரி கேட்டுக்கொண்டார். பாகிஸ்தானின் உள்நிலைவரங்கள் குறித்து மாலிக் கவலைப்படுவாரே




எம்.பி.வித்தியாதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானால் நன்றாக இருக்கும். பாகிஸ்தானில் சிறுபான்மையினத்தவர்கள் நடத்தப்படுகின்ற முறை குறித்து உள்முகமாக நோக்கிப் பார்த்து அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கு என்னசெய்யலாம் என்று மாலிக் சிந்திப்பதே நல்லது'' என்று திவாரி கூறியிருந்தார்.

"ஒரு ஜனநாயகத்துக்கான சோதனை அது. பெரும்பான்மையினரை எவ்வாறு நடத்துகின்றது என்பதல்ல, சிறுபான்மையினரை எவ்வாறு நடத்துகிறது என்பதேயாகும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் இந்திய அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு பிரஜையையும் ஒவ்வொரு தனிநபரையும் ஒரே மரியாதையுடன், ஒரே உளச் சம நிலையுடன் நடத்துகிறது'' என்று மாலிக்கிற்கு திவாரி நினைவுபடுத்தினார்.

மாலிக்கின் கருத்து அநாவசியமானது என்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் குறிப்பிட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் பேச்சாளர் ராஜீவ் பிரதாப் ரூடி, உலகின் மிகவும் அபகீர்த்திமிக்க பயங்கரவாதியைத் தனது கோடிப்புறத்தில் வைத்திருந்த "தனித்துவத்தைக்'' கொண்ட ஒரு தோல்வி கண்ட அரசின் உள்துறை அமைச்சரிடமிருந்து இந்தியாவுக்கு ஆலோசனை வருவது நகைப்புக்கிடமானது என்று நையாண்டி செய்தார்.

சகல விவகாரங்களிலும் எப்போதுமே பாகிஸ்தானுக்கு விரோதமான நிலைப்பாட்டை எடுக்கிற சிவசேனை இந்தியாவுக்கு அதன் பிரஜைகளைப் பாதுகாக்கும் ஆற்றல் இருக்கிறது என்றும் பாகிஸ்தானுக்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இல்லை என்றும் குறிப்பிட்டது.

தனது கருத்துகள் அவற்றின் உண்மையான பின்புலத்துக்கு அப்பால் திரிபுபடுத்தப்பட்டு விட்டதாக சாருக்கான் ஜனவரி 29 ஆம் திகதி விடுத்த அறிக்கை இன்னொரு சர்ச்சையாக மாறியது.

"நான் ஒரு இந்திய முஸ்லிம் திரைப்பட நட்சத்திரமாக இருப்பதை மதவெறி பிடித்தவர்களும் அற்ப இலாபங்களுக்காக தவறான மத நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்களும் குறுகிய நோக்கம் கொண்டவர்களும் துஷ்பிரயோகம் செய்த சில சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை மீள வலியுறுத்தவே அக்கட்டுரையை நான் எழுதினேன். மீண்டும் நான் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு இக்கட்டுரை பயன்படுத்தப்படும் விசித்திரத்தைக் காண்கிறேன். சிலர் அந்தக் கட்டுரையை வாசிக்கக்கூட இல்லை. அவ்வாறு வாசிக்காமலேயே மற்றவர்கள் அது தொடர்பில் வெளிக்காட்டிய பிரதிபலிப்புகளுக்கு பதில் கொடுக்கிறார்கள். அதனால், நீங்கள் எல்லோருமே நான் எழுதியதை முதலில் வாசியுங்கள் என்று மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சாருக்கான் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காரணங்கள் என்னவாக இருந்தாலும் சாருக்கானின் பெரும்பாலான ரசிகர்கள் அவரது கட்டுரையால் குழப்பமடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். எளிதாகத் தவித்திருக்கக்கூடிய சர்ச்சைக்குரிய வரிகளை என்ன நோக்கத்துக்காக அவர் எழுதினார் என்று ரசிகர்கள் கேட்கிறார்கள். சாருக்கான் ஒரு நடிகர் என்றவகையில் அவர் மீது எந்த வகையிலும் இனவாதத் தோற்றம் கிடையாது என்பதை அவர்கள் அவருக்கு நினைவுபடுத்துகிறார்கள்.

அவர் ஒரு நடிகர். இனவாத உணர்வுகள் ஒருபோதும் அவரைப் பாதித்ததில்லை. அவரை மாத்திரமல்ல, வேறு எந்த நடிகரையும் கூட இனவாத உணர்வுகள் பாதித்ததில்லை. நடிப்பைப் பார்த்தே மக்கள் மதிப்பிடுகிறார்கள். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர் என்று நடிகர்களை மக்கள் பார்ப்பதில்லை. அல்லாவிட்டால், எவ்வாறு சாருக்கான் இந்தித் திரைப்பட உலகில் முதல்தரமான நடிகராக விளங்கமுடியும். சகல இந்தியர்களும் அவரை ஆதரிப்பதே அதற்குக் காரணமாகும்.

அண்மைய வருடங்களில், குறிப்பாக அவர் விளையாட்டுத்துறைக்குள் பிரவேசித்த பிறகு சாருக்கானின் பிரமாண்டமான இமேஜுக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தியன் பிரிமியர் லீக்கில் கொல்கத்தா ரைடேர்ஸ் அணி சாருக்கானுக்குச் சொந்தமானது. முதலில் கொல்கத்தாவின் நேசத்துக்குரியவரும் இந்தியாவின் வெற்றிகரமான கிரிக்கெட் கப்டனுமான சவுரவ் கங்குலியுடன் சாருக்கான் தகராறில் ஈடுபட்டார். பிறகு இந்தியன் பிரிமியர் லீக்கில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை அனுமதிப்பது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்து ஒரு சர்ச்சையாக மாறியது. சில மாதங்களுக்கு முன்னர் இந்தியன் பிரிமியர் லீக் விதிகளுக்கு மாறாக மும்பை ஸ்ரேடியத்திற்குள் சாருக்கானின் மகளும் அவளின் நண்பர்களும் பிரவேசித்ததைத் தடுத்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் அவர் தகராறில் ஈடுபட்டார். தங்களது கடமைகளைச் செய்த அப்பாவி பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் தவறாக சாருக்கான் நடந்து கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டபோது அருவருப்பாக இருந்தார்.

## நீதியரசர் வர்மாவின் அறிக்கை

டில்லியில் மருத்துவ மாணவி ஒரு கும்பலினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடூரமான சம்பவத்திற்கெதிராக இந்தியா பூராவும் மக்கள் கிளர்ந்தெழுந்ததைத் தொடர்ந்து சட்டத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் ஜே.எஸ்.வர்மா 630 பக்கங்களைக் கொண்ட பெரியதொரு அறிக்கையை அரசாங்கத்திடம் கையளித்திருக்கிறார். 80 ஆயிரத்திற்கும் அதிகமான யோசனைகளை ஆராய்ந்ததுடன், இத்தகைய விவகாரங்களில் பங்கும் ஈடுபாடும் கொண்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து ஒரு மாதகாலத்திற்குள் ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றையும் விடாமல் சகலதையும் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதென்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம நீதியரசர் வர்மாவிற்கு 80 வயது. அந்த வயதில் அவர் அறிக்கை சமர்ப்பிப்பதற்கென குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் இடையறாது பணியாற்றி காரியத்தை கச்சிதமாகச் செய்திருக்கிறார் என்றால் பாருங்களேன். அவர் பெறுமதிவாய்ந்த பல யோசனைகளை தெரிவித்திருக்கிறார்.

பாலியல் வல்லுறவு விவகாரத்தையும் அதன் விளைவான ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் கையாண்ட முறைக்காக கடுமையான கண்டனத்துக்குள்ளான பிரதமர் மன்மோகன் சிங் அரசாங்கம், மிக விரைவில் வர்மா அறிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்திருக்கிறார்.


ஆயிரக்கணக்கான அறிக்கையில் அரசாங்கத்தின் அலுமாரிகளுக்குள் தூசு படிந்து கவனிப்பாரற்று கிடக்கின்ற ஒரு நாட்டிலே வர்மா அறிக்கை மீது நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்திருப்பது ஒரு நல்ல செய்திதான்.

மத்திய அரசாங்கமாக இருந்தாலென்ன, மாநிலங்களின் அரசாங்கமாக இருந்தாலென்ன பிரச்சினைகளை மழுப்பி காலத்தை இழுத்தடிப்பதற்கு ஆணைக்குழுக்களை நியமிப்பதையும் பிறகு அந்தக் குழுக்களின் அறிக்கைகளை தூசுபடிய வைப்பதும் வழமையானதாகும். ஆனால், இப்போது இளைஞர்கள் விழித்தெழுந்ததையடுத்தும் சமூக ஊடகங்கள் பல்கிப் பெருகியதன் விளைவாகவும் நிலைவரங்களில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இப்போது அரசாங்கங்கள் பயத்தில் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. ஊழலுக்கெதிரான அண்ணா ஹசாரே இயக்கத்திற்குப் பிறகும் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகும் காணக்கூடியதாக இருக்கும் நிகழ்வுகள் மூலம் இதை உணர முடிகிறது. அறிக்கையை அரசாங்கம் அலட்சி

# ‘எமது அறிக்கையை அலட்சியம் செய்தால் அரசுக்குத்தான் பாதிப்பு’

எண்பது வயதை அடைந்த நானே பொறுமையிழந்து விட்டேன் என்றால் இளைஞர்களின் நிலையை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும்

-நீதியரசர் ஜே.எஸ்.வர்மா



**► *சாதனை என்று வர்ணிக்கக்கூடிய மிகவும் குறுகிய காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பித்து விட்டீர்கள். உங்களது எதிர்பார்ப்புகள் எவை?***

எனது வேலையை 29 நாட்களுக்குள் பூர்த்தி செய்துவிட்டேன். நாங்கள் மூவர் இந்தப் பணியை 29 நாட்களுக்குள் செய்ய முடியுமாக இருந்தால் அரசாங்கமும் கூட அதன் பணியை அந்தளவு காலகட்டத்திற்குள் நிச்சயமாகச் செய்ய முடியும். அவ்வாறு செய்யமுடியவில்லையானால் அது துரதிர்ஷ்டவசமானது. அறிக்கை மீது விரைவாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது அவர்களுக்கே ஆபத்தை தேடித்தரும். மக்கள் மனநிலை அப்படித்தான் இருக்கிறது. துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து பிரதமரிடம் இருந்து எனக்கொரு கடிதம் வந்திருக்கிறது.

**► *அரசாங்கம் செயலில் இறங்குவதற்கு கால அவகாசம் தேவை என்று சில அதிகாரிகள் கூறுகிறார்களே......?***

அரசாங்கம் நேரத்தை எடுக்குமென்றால் அவர்கள் விரைவாக செயற்படக்கூடியவர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த 80 வயதிலேயே நான் பொறுமை இழந்திருக்கிறேன் என்றால் இளைஞர்களின் பொறுமையின்மையை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும். மக்களுக்கும் இளைஞர்களுக்கும் சேவை செய்வது அரசாங்கத்தின் கடமை. அந்தக் கடமையைச் செய்ய முடியாது என்று கூறும் எவரும் தாங்கள் வகிக்கும் பதவியை விட்டுச் சென்று விட வேண்டும். வேறுயாராவது அதைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

**► *ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதை நியாயப்படுத்த முடியும் என்று நினைக்கிறீர்களா?***

தடியடிப்பிரயோகம் என்பது எமது ஜனநாயகத்தின் மீது எப்போதுமே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் செய்தால் அதற்குத் தான் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று நீதியரசர் வர்மா குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும். சிபாரிசுகள் உரிய முறையில் கவனிக்கப்படும் என்று உறுதியளித்து நீதியரசருக்கு பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார்.

"ஆணைக்குழு 30 நாட்களுக்குள் அறிக்கையை சமர்ப்பித்திருப்பது பொது மக்களின் நலனில் உங்களுக்கு இருக்கின்ற அக்கறையின் ஒரு வெளிப்பாடாகும். சிபாரிசுகளை உரிய முறையில் கவனித்து அடுத்த கட்ட நடவடிக்கையை துரிதமாக எடுப்போம் என்று அரசாங்கத்தின் சார்பில் நான் உறுதியளிக்கிறேன்'' என்று ஜனவரி 30 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் பிரதமர் தெரிவித்திருக்கிறார். மேல்நீதிமன்றத்தின் முன்னாள் பிரதமர் நீதியரசர் லீலா சேத், இந்திய அரசாங்கத்தின் முன்னாள் சட்டமா அதிபர் கோபால் சுப்ரமணியம் ஆகியோரே ஆணைக்குழுவின் ஏனைய இரு உறுப்பினர்களுமாவர்.

தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் நம்பகத்தன்மையான அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டால் அதுவே பெண்களின் கண்ணியத்திற்கு போதிய பாதுகாப்பைத் தரும். எங்களிடம் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உணர்வு இல்லை. போக்குவரத்து ஒழுங்குகளை கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் சட்ட ஒழுங்கைப் பெறும் அதிகாரிகள் உட்பட பல அரசாங்க உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவில்லை என்பதை டில்லி பாலியல் வல்லுறவுக் கொடுமைச் சம்பவம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கிறது. பாலியல் கொடுமைகள் குறித்து தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளைக் கையாள்வதில் முன்னுரிமை காட்டாத போக்கொன்று காணப்படுகிறது. இது மிகவும் முக்கியமாக கவனத்தில் எடுக்கவேண்டிய ஒரு பிரச்சினையாகும் என்று வர்மா அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். பெண்களுக்கெதிரான குற்றச்செயல்க

அழிக்க முடியாத கறையாகும். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் முற்றிலும் அமைதியாக நடந்துகொண்டார்கள். இளைஞர்கள் எந்தவொரு ஆத்திர மூட்டலுக்கும் தங்கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டவில்லை. கூடுதலான அளவு பக்குவமாக நடந்துகொண்டார்கள். அவர்கள் முதிர்ச்சியை வெளிக்காட்டினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சேர்ந்து தானும் வீதியில் இறங்கி நின்றிருக்க வேண்டுமென்று இந்தியாவின் பிரதம நீதியரசர் கூட கூறியிருந்தார். ஒவ்வொருவரும் எவ்வாறு வேதனைப்பட்டிருக்கிறார்கள் என்று பாருங்கள். ஆனால் ஒரு செய்தியாளர் மாநாட்டில் பொலிஸ் ஆணையாளரும் உள்துறை அமைச்சின் செயலாளரும் சிரித்துக்கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இதை விட வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா?

**▶ *பாலியல் வல்லுறவு குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று ஆணைக்குழு ஏன் சிபார்சு செய்யவில்லை?***

உலகளாவிய ரீதியில் மரண தண்டனையை ஒழிக்கவேண்டுமென்று பேசப்படுகிறது. மரண தண்டனை வழங்கப்படுகின்ற குற்றச்செயல்களுக்கு கூட அந்த தண்டனையை வழங்கக் கூடாதென்று குரல் எழுப்பப்படுகிறது. 150 இற்கும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை ஒழித்துவிட்டன. பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்கு மரண தண்டனை வழங்குவதை இந்தியாவில் உள்ள பெண்கள் அமைப்புகளும் எதிர்க்கின்றன. அதனால் மரண தண்டனையை அறிமுகப்படுத்துவது பாலியல் குற்றச்செயல்களை குறைக்க உதவாமல் ஒரு பின்நோக்கிய செயற்பாடாக அமைந்துவிடக்கூடும் என்று முன்வைக்க வேண்டிய வாதங்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டோம். இரசாயன மலடாக்கத்தையும் சில பெண்கள் அமைப்புகள் எதிர்க்கின்றன. இந்த யோசனைக்கெல்லாம் நான் உகந்த முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டியிருந்தது. எனவே நாம் சகல பாலியல் குற்றச்செயல்களுக்கும் சிறைத்தண்டனையையே சிபார்சு செய்தோம்.

**▶ *பொலிஸும் அரசாங்கமும் இப்போது சில நடவடிக்கை எடுத்திருக்கின்றன. அவை குறித்து திருப்திப்படுகிறீர்களா?***


இதை அவர்கள் முன்கூட்டியே செய்திருக்கக்கூடாதா?1997 இல் நான் பிரதம நீதியரசராக இருந்த போது வாரிசாபாத்தில் ஜமுனா நதிக்குள் ஒரு பஸ் விபத்துக்குள்ளாகிய போது பிரதம செயலாளருக்கும் போக்குவரத்துச் செயலாளருக்கும் பொலிஸ் ஆணையாளருக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்தேன். 15 வருடங்களுக்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தால் டில்லியில் பாலியல் வல்லுறவு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட பஸ் எந்தவிதத்திலும் வீதிகளில் ஓடி இருக்க முடியாது. எனவே சட்டங்களுக்கு ஒரு மட்டுப்பாடு என்றைக்காவது இருந்திருக்கிறது என்று கூறுவதற்கில்லை. எமது குழு அமைக்கப்பட்ட தினம் டில்லி பொலிஸ் நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. பஸ்களில் இருந்து வண்ணக் கண்ணாடிகள் அகற்றப்பட்டன. விதிமுறைகளை மீறி ஓடிய பஸ்கள் தடுத்துவைக்கப்பட்டன. மருத்துவ மாணவி பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட பஸ் ஏற்கனவே விதிமுறைகளை மீறியதாக சம்பந்தப்பட்டவர்கள் மீது பல தடவைகள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே முன்கூட்டியே பொலிஸார் ஏன் செயற்படவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அந்தப் பெண்மணி காப்பாற்றப்பட்டிருப்பார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் தொடர்புடைய சட்டங்களில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று ஆணைக்குழு குறிப்பிட்டிருக்கிறது.

எவ்வாறெனினும் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் குற்றச்செயல்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டுமென்று நாடுபூராகவும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து கோரிக்கை விடுத்த பெரும்பான்மையான இளைஞர், யுவதிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்கு ஆணைக்குழு தவறிவிட்டதுபோல் தோன்றுகின்றது. பாலியல் வல்லுறவு புரிந்ததாக குற்றவாளியாகக் காணப்பட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படவேண்டுமென்று இளைஞர் சமுதாயம் விடுத்த கோரிக்கையை ஆணைக்குழு திட்டவட்டமாக நிராகரித்துவிட்டது. அதுமாத்திரமல்ல ஒரு பெண்ணின் வாழ்க்கை முழுவதையுமே நிர்மூலம் செய்கிற இந்த கொடிய செயலில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள்காலச் சிறைத்தண்டனையைக் கூட ஆணைக்குழு விதந்துரைக்கவில்லை. 6 - 20 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை பெண்களுக்கெதிராக புரியப்படும் பாலியல் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு போதுமானதில்லை.

ஆணைக்குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரை இன்னொரு முக்கியமான குறைபாடு, அது பாலியல் குற்றச்செயல்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு எந்தளவு காலவரையறைக்குள் நீதி வழங்கப்படவேண்டும் என்று எந்த ஒரு சிபார்சையும் செய்யாததாகும். இந்திய நீதிமுறை மக்களுக்கு நீதியை வழங்குவதற்கு பல வருடங்கள் செல்கிறது. குற்றம்சாட்டப்படுகிறவர் தனது வாழ்க்கையை அனுபவிக்கிறார். ஆனால், பாதிக்கப்பட்டவர் நம்பிக்கை இழந்து வாழ்வே சூனியமாகிறது. இத்தகைய துரதிர்ஷ்டவசமான நிலைமை இந்திய மக்களை பெருமளவிற்கு ஆத்திரப்படுத்துகிறது. சிறுவர் பராயத்து வயதெல்லையை பதினெட்டிலிருந்து பதினாறாக குறைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை ஆணைக்குழு அலட்சியம் செய்திருக்கிறது. டில்லியில் மருத்துவ மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர்களில் சிறுவர் பராயத்தவன் என்று கூறப்படுகின்றவனே மிகவும் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டதை அடிப்படையாக வைத்தே இந்த பதினாறு வயது கோரிக்கையை இளைஞர்களும் பொதுமக்களும் முன்வைத்தார்கள். அவன் பதினெட்டு வயதை அடைவதற்கு இன்னம் சில மாதங்கள் இருக்கின்றன. சிறுவர் பராயத்து வயதிலேயே அவன் குற்றச்செயலைச் செய்தமையால் அவனுக்கு தண்டனை வழங்க முடியாமல் இருக்கிறது. அதனால் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டவன். இன்னும் சில மாதங்களில் சுதந்திரமாக வீடு செல்வதை தடுக்க வேண்டுமானால் சிறுவர் பராயச் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டேயாக வேண்டும். இந்த விவகாரத்தை அரசாங்கம் விஷேடமாக கவனிக்க வேண்டுமென்று ஏற்கனவே பலமான கோரிக்கைகள் எழுந்திருக்கின்றன. அரசாங்கம் சகலவிதமான கருத்துகளையும் கவனத்தில் எடுத்து சாத்தியமானளவு விரைவாக உரிய முடிவொன்றை எடுக்குமென்று சட்ட அமைச்சர் அஷ்வின் குமார் தெரிவித்திருக்கிறார்.



**ராஜ்நாத் சிங் பாரதீய ஜனதாவின் தலைவராக்கப்படுவதை ஆரம்பத்தில் அத்வானி விரும்பவில்லை. ஆனால் இறுதியில் கட்காரியையோ அல்லது வேறு எந்தவொரு வேட்பாளரையோ விட ராஜ்நாத் சிங்கே பொருத்தமானவர் என்று விளங்கிக்கொள்ள வேண்டியிருந்தது**

நீதியரசர் வர்மா ஆணைக்குழுவின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்ட நிலைப்பாடொன்றை எடுத்து சிறுவர்பராயச் சட்டங்களில் மாற்றத்தை கொண்டுவருவதற்கு அரசாங்கம் துணிச்சலைக் காட்டுமா? அல்லது அமைதி இழந்திருக்கும் இளைஞர் சமுதாயம் மீண்டும் ஒரு தடவை வீதிகளில் இறங்கி கிளர்ச்சியில் இறங்க வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? நிலைவரங்களை நோக்குகையில் இளைஞர்கள் மேலும் மேலும் அமைதி இழந்து கொண்டு போவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

சாதாரண மக்களுக்கும் அரசியல்வாதிகள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகளுக்கும் இடையே தொடர்பின்மை அதிகரித்துக்கொண்டு போவதாக ராகுல்காந்தி அண்மையில் கவலை தெரிவித்திருந்தார். சட்டம் இயற்றும் செயன்முறைகளில் பொதுமகனையும் சம்பந்தப்படுத்துவது பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக்கூட காந்தி பேசியிருந்தார். அதனால் இத்தகைய விவகாரங்களைக் கையாளும் பொறுப்பை தன் கையில் அவர் எடுத்துக்கொள்வாரா? பொது மக்களை அரசாங்கத்தின் பக்கம் வென்றெடுப்பாரா?

நீதியரசர் வர்மா ஆணைக்குழுவின் அறிக்கை பெரிதும் பாதிக்கப்படுகின்ற சாதாரண மக்களின் பிரச்சினைகளை கவனத்தில் எடுக்காமல் பெருமளவிற்கு மேட்டுக்குடித்தனமான சிந்தனையின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. குறிப்பாக கணவனால் பாலியல் வல்லுறவுக்கு மனைவி உட்படுத்தப்படுகிற சம்பவங்கள் போர் வலயங்களில் பாதுகாப்பு படையினரால் இழைக்கப்படுகிற பாலியல் குற்றங்கள் வேலைத்தளங்களில் இடம்பெறுகின்ற பாலியல் தொந்தரவுகள் போன்ற பிரச்சினைகளை வர்மா ஆணைக்குழு கூடுதலான அளவிற்கு கவனத்தில் எடுத்திருக்கிறது. இந்த பிரச்சினைகளும் முக்கியமானவை என்ற போதிலும் அன்றாட வாழ்வில் சாதாரண பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மீதே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## பாரதீய ஜனதா நாடகம்

இந்திய அரசியலைப் பொறுத்தவரை 2013 ஜனவரியின் கடைசிப் 10 நாட்களும் மிகவும் முக்கியமானவையாக அமைந்துவிட்டன. ஜெய்ப்பூரில் மகாநாட்டை நடத்திய காங்கிரஸ் கட்சி துணைத்தலைவராக ராகுல் காந்திக்கு முடிசூடிய அதே வேளை, பாரதீய ஜனதாக்கட்சி அதன் தலைவராக இருந்த நிதின் கட்காரியை மிகவும் பவ்வியமான முறையில் பதவியிலிருந்து அகற்றியிருக்கிறது. கட்காரி 2ஆவது பதவிக் காலத்திற்கும் பாரதீய ஜனதாவின் தலைவராக இருப்பதற்கு அக்கறை கொண்டிருந்தார். ஆர்.எஸ்.எஸ். தலைமைத்துவமும் அவருக்கு ஆதரவாக இருந்தது. எல்.கே.அத்வானி, யஸ்வந் சின்ஹா மற்றும் ராம் ஜெத்மலானி போன்ற சிரேஷ்ட தலைவர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இதற்காக கட்சியின் யாப்பும் மாற்றியமைக்கப்பட்டது. ஆனால், கட்காரிக்குச் சொந்தமான வர்த்தக குழும அலுவலகங்களில் வருமான வரித் துறையினர் நடத்திய சோதனைகளை அடுத்து பாரதிய ஜனதாவின் தலைவராக மீண்டும் வருவதற்கான அவரின் ஆசை பலிக்காமல் போய்விட்டது.

கட்காரி பாரதிய ஜனதாவிற்கு ஒரு சுமையாக மாறிக்கொண்டு வருகிறார் என்று பரவலான அபிப்பிராயம் கட்சிக்குள் வளரத்தொடங்கிவிட்டது. பல மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் வரவிருப்பதாலும் அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதாலும் கட்சிக்கு அனுகூலமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு தலைவர் இருப்பதை கட்சியில் பெருமளவானோர் விரும்பவில்லை. கட்காரியை 2ஆவது பதவிக்காலத்திற்கும் தலைவராக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை யஸ்வந் சின்ஹா, மகேஷ் ஜெத்மலானி உட்பல பல தலைவர்கள் மிக பகிரங்கமாகவே ஆட்சேபித்திருந்தனர். அவரது கம்பனிகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை அடுத்து கட்காரி தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டுமென்றும் கோரிக்கைகள் கிளம்பின. ஆனால், அந்த கோரிக்கைகளை அந்த நேரத்தில் அவர் செவி மடுக்கவில்லை. இதனால் காங்கிரஸ் அதன் தலைவர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பக் கூடிய சூழ்நிலை தோன்றலாயிற்று.

பாரதீய ஜனதாவின் அண்மைய பாராளுமன்ற பொதுக்கூட்டத்தில் அத்வானியும் ஏனைய தலைவர்களும் ஏறத்தாழ ஒரு சதிப்புரட்சியை மேற்கொண்டார்கள். கூட்டத்திற்கு ஒருநாள் முன்னதாக கட்காரி மீண்டும் தலைவராக வருவதை தாங்கள் விரும்பவில்லை என்பதை அத்வானியும் மற்றையவர்களும் அவருக்கே தெளிவுபடுத்திவிட்டனர். தேர்தல்கள் வரவிருக்கும் சூழ்நிலையில் அவர் தலைவராக இருப்பது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே அவர்கள் முன்வைத்த காரணம். வருமான வரி அதிகாரிகளின் சோதனையும் பாரதீய ஜனதாத் தலைவர் பதவிக்கு போட்டியொன்றை ஏற்படுத்தப்போவதாக யஸ்வந்த் சின்ஹா விடுத்த அச்சுறுத்தல்களும் கட்சியின் திட்டங்களில் திடீர் மாறுதலைக் கொண்டுவந்தன. பாரதீய ஜனதாவின் உயர்மட்ட தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி ராஜ்நாத் சிங்கை மீண்டும் கட்சியின் தலைவராக்குவதற்கு இணக்கம் கண்டனர். இறுதியில் சிரேஷ்ட தலைவர்களின் விருப்பத்திற்கு கட்காரி இணங்கவேண்டியிருந்தது.

அதேநாள் இரவு அத்வானியையும் ஏனைய தலைவர்களையும் சந்தித்த பிறகு கட்காரி அறிக்கையொன்றை விடுத்தார். தான் எந்தத் தவறையும் செய்யவில்லை என்றும் ஆனால் பாரதீய ஜனதாவின் நலன்கள் பாதிக்கப்படுவதை விரும்பவில்லையென்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். 2ஆவது பதவிக்காலத்திற்கு தலைவராகாதிருப்பதற்கு தான் தீர்மானித்ததாகக் கூறிய கட்காரி தான் 2000 ஆம் ஆண்டு ஆரம்பித்த ஒரு நிறுவனத்தை மையமாகக் கொண்ட வருமான வரி விசாரணை தனக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் மேடையேற்றிய ஒரு நாடகம் என்று குற்றம்சாட்டினார். அடுத்தநாள் பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் கட்காரிக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை கொண்டுவந்த அத்வானி ராஜ்நாத் சிங்கின் பெயரை பிரேரித்தார். கட்காரிக்கு முன்னதாக கட்சியின் தலைவராக ராஜ்நாத் சிங் கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளுக்கு பொறுப்பேற்று பதவியைத் துறந்தார். இப்போது அவர் மீண்டும் ஏக மனதாக பாரதீய ஜனதாவின் தலைவராக்கப்பட்டிருக்கிறார்.

ராஜ்நாத் சிங் தலைவராக்கப்படுவதை ஆரம்பத்தில் அத்வானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் இறுதியில் கட்காரியையோ அல்லது வேறு எந்தவொரு வேட்பாளரையோ விட ராஜ்நாத் சிங்கே பொருத்தமானவர் என்று இணங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. சுஷ்மா சுவராஜ் தலைவராக்கப்படுவதை அத்வானி விரும்பியிருந்தார். ஆனால் சுஷ்மா சுவராஜ், அருண் ஜேட்லி மற்றும் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி போன்றோர் அவர்களது தற்போதைய பொறுப்பிலிருந்து மாற்றப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் தலைவராக்கப்பட்டதும் 62வயதான ராஜ்நாத் சிங் செய்த முதல்வேலை அத்வானியின் வீடு சென்று அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதேயாகும். பிறகு அவர் கட்காரியுடன் சேர்ந்து பாரதீய ஜனதா தலைமையலுவலகத்திற்கு வந்துசேர்ந்தார். கட்சிக்குள் உட்பூசல்கள் இருந்தபோதிலும் அவற்றை மறைத்து ஐக்கியம் நிலவுவதாக காட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே இது.

நரேந்திரமோடியை பாரதீய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கை இப்போது வலுப்பெற ஆரம்பித்திருக்கிறது. முதலில் இந்தக் கோரிக்கையை கட்சித்தொண்டர்களிடமிருந்தே வந்தது. ஆனால், இப்போது சிரேஷ்ட தலைவர்களும் அதில் சேர்ந்திருக்கிறார்கள். நரேந்திரமோடியை பிரதம வேட்பாளராக்கவேண்டும் என்று யஸ்வந் சின்ஹாவும் ராம்ஜேத் மலானியும் பகிரங்கமாக கருத்துதெரிவித்ததை அடுத்து பிரதமர் வேட்பாளர் தொடர்பில் ஒரு விவாதம் மூண்டிருக்கிறது. பாரதீய ஜனதாவின் நேச சக்தியான அகாலிதள் மோடியை ஆதரிக்கும் அதேவேளை, சிவசேனை சுஷ்மா சுவராஜுக்கு ஆதரவாக குரல்கொடுக்கிறது.

அதேவேளை, நரேந்திரமோடி டில்லியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் ராஜ்நாத்சிங்குடன் மதிய போச விருந்துபசார சந்திப்பொன்றை நடத்தினார். அந்தச் சந்திப்பிற்குப் பிறகு இருதலைவர்களும் 2014 பொதுத்தேர்தல் உட்பட கட்சி சம்பந்தப்பட்ட பல விவகாரங்களை ஆராய்ந்ததாக தெரிவித்தனர்.

2009 பொதுத்தேர்தலில் ஏற்பட்டதைப் போன்ற தோல்வியை மீண்டும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் கட்சிக்கு வாக்குகளைக் குவிக்க செல்வாக்கான ஒரு முகம் சிங்கிற்கு தேவைப்படுகிறது. மோடியைத் தவிர வேறு தெரிவுகள் இருப்பதாகவும் தெரியவில்லை. கட்சியின் பாராளுமன்றக்குழு பொருத்தமான நேரத்தில் தீர்மானமொன்றை எடுக்கும் என்று ராஜ்நாத் சிங் கூறுகின்ற போதும் அவர் விளைவுகளை எதிர்பார்க்காமல் முடிவொன்றை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.



## ராகுல் காந்திக்கு முடிசூடல்

இறுதியாக அது நடந்துவிட்டது. காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகர் ஜெய்பூரில் அண்மையில் நடைபெற்ற மகாநாட்டில் ராகுல் காந்தி கட்சியின் தலைமைத்துவத்தில் 2ஆவது இடத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். சுமார் 10 வருடங்களாக காங்கிரஸின் தலைவியாக இருக்கும் அம்மாவுக்கு அடுத்த இடத்தில் துணைத்தலைவராக இப்போது மகன். 42 வயதான ராகுல் காந்தியை துணைத்தலைவராக்குவதற்கு இருநாள் மகாநாட்டில் பெரிதாக ஒன்றும் விவாதம் நடத்தவில்லை. இந்த மாநாடு இரண்டு விடயங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்ததும் நினைவில் வைத்திருக்க வேண்டியதுமாகிறது. ஒன்று உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே பாரதீய ஜனதாவிற்கும் ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கிற்கும் இந்துத்வா பயங்கரவாதிகளுடன் தொடர்பிருப்பதாக தெரிவித்த கருத்து. இரண்டாவது சாதாரண மக்களின் கருத்துக்கோணத்தில் எழுதப்பட்ட ராகுல்காந்தியின் உணர்ச்சிபூர்வமான உரை.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் முக்கியமான சட்டமூலங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்கு பாரதீய ஜனதாவின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்ற நேரத்தில் உள்துறை அமைச்சரின் பேச்சு காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பெரிய பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகப் போகிறது. பாரதீய ஜனதாவை இந்துத்வா பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட பொருத்தமற்ற கருத்து தொடர்பில் காங்கிரஸ் கட்சி ஏற்கனவே தற்காப்பு நிலைக்குச் சென்றுவிட்டது. உள்துறை அமைச்சரின் நிலைப்பாட்டிலிருந்து காங்கிரஸ் பேச்சாளர்களும் ஏனைய அமைச்சர்களும் தூரவிலகி நிற்கின்றார்கள். பயங்கரத்திற்கு எந்த மதமும் இல்லை என்பது காங்கிரஸின் நிலைப்பாடு என்று அவர்கள் கூறுகிறார்கள். ஷிண்டே தவறிழைத்துவிட்டாரென்று அவர்கள் எல்லோரும் தனிப்பட்ட முறையில் கூறுகிறார்கள். இந்துத்வா பயங்கரவாத சந்தேக நபர்கள் சிலருக்கும் பாரதீய ஜனதா மற்றும் ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.கே.சிங் தனது அமைச்சரவையை நியாயப்படுத்தும் வகையில் தெரிவித்த கருத்து சர்ச்சையை மேலும் மோசமாக்கியிருக்கிறது.

காங்கிரஸை தாக்குவதற்கு பாரதீய ஜனதாவின் புதிய தலைவர் புதிய தோர் ஆயுதத்தை கையிலெடுத்திருக்கிறார். உள்துறை அமைச்சரும் அரசாங்கமும் மன்னிப்புக்கேட்க வேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார். அவ்வாறு மன்னிப்புக் கேட்கப்படாத பட்சத்தில் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது பாராளுமன்றம் முறையாகச் செயற்படுவதற்கு தனது கட்சி அனுமதிக்காது என்று ராஜ்நாத் சிங் அச்சுறுத்தியிருக்கிறார்.

ஆனால் ராகுல் காந்தி ஜெய்ப்பூர் மகாநாட்டில் ஆற்றிய உரை மக்களின் கவனத்தை இந்தப் பிரச்சினைகளிலிருந்து திருப்பிவிட்டது போல் தெரிகிறது. அவர் சாதாரண குடிமகன் போன்று பேசினார். இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் போக்கு அதிகரித்து வருவதை மனதில் கொண்டு உரையாற்றிய ராகுல் காந்தி, 1947 இல் இந்தியாவை தலைவர்களும் தொண்டர்களும் ஆயுதத்தினால் அல்ல மக்கள் குரலினாலேயே விடுதலை செய்தார்கள் என்று நினைவுபடுத்தினார்கள். ஏனைய நாடுகளில் வன்முறை ரீதியில் போராடியதை சுட்டிக்காட்டிய காந்தி இந்தியா அகிம்சை மார்க்கத்திலேயே போராடியது. அவ்வாறு போராடுவது வெற்றியைத் தராது என்று கூறப்பட்டது. பிரிட்டிஸாரை வெளியேற்ற வேண்டுமானால் வன்முறையைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆலோசனைகூறப்பட்டது. ஆனால் காங்கிரஸ் அதை ஏற்க மறுத்துவிட்டது. வன்முறையைப் பயன்படுத்தப் போவதில்லை என்று உறுதி எடுக்கப்பட்டது. நாம் அகிம்சை மார்க்கத்தில் உலகில் மிகப்பெரிய சாம்ராச்சியத்தை தோற்கடித்தோம். பிரிட்டிஸாரை வெளியேற்றினோம் என்று அவர் தனதுரையில் குறிப்பிட்டார். இளைஞர்களின் அபிலாஷைகளை எதிரொலித்த ராகுல் காந்தி இந்தியாவின் முன்னாலுள்ள சவால்களை எதிர்கொள்ள துணிச்சலுடன் தயாராக வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

ராகுல் காந்தியின் இந்த உயர்வு பெரும்பாலான இந்தியர்களுக்கோ காங்கிரஸ் தொண்டர்களுக்கோ அதிர்ச்சியைத் தரவில்லை. சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி பெரும்பாலும் காந்தி குடும்பத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. ஜவஹர்லால் நேரு,இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி, சோனியா காந்தி என்று இந்த வரிசை. காங்கிரஸ் எம்.பிக்களான ராஜ் பப்பர், அவதார சிங் படானா மற்றும் சிலர் முக்கியமான உறுப்பினர்கள் ராகுல்காந்தியை பிரதமராக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். காங்கிரஸில் உள்ள ஒவ்வொருவருமே ராகுல் காந்தி பொறுப்பை கையேற்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். ஆனால், தயவு செய்து அவரை நிர்ப்பந்திக்காதீர்கள். அவர் செய்ய விரும்புவதை அவர் தீர்மானிக்கட்டும் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் திக் விஜய் சிங் கூறினார். ●

---

*(35ஆம் பக்கத் தொடர்ச்சி)*

முழு தெற்காசியாவுக்குமே அவலங்களைக் கொண்டுவரக்கூடிய இந்தச் சூழ்நிலையைத் தவிர்ப்பதில் அமெரிக்காவுக்கே பிரதான பங்கு இருக்கிறது.

அதேவேளை சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் இருக்கக்கூடிய முரண்நிலை அகற்றப்பட வேண்டும். உலகம் வெப்பமயமாவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக வாஷிங்டனுக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையே சுற்றாடல் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்று செய்யப்படக் கூடியதாக இருக்குமேயானால் இரு நாடுகளுக்குமிடையேயான நம்பிக்கைக் குறைபாடு தணிவதற்கு வாய்ப்பு தோன்றும். இது ஒபாமா விட்டுச் செல்லக்கூடிய ஒரு மகத்தான மரபாக இருக்க முடியும். அமெரிக்காவும் சீனாவும் உலகை மாசடையச் செய்வதில் முன்னணியில் நிற்கும் நாடுகள் என்ற நிலை மாறி உலகில் புத்தாக்க முயற்சிகளுக்கு வழிகாட்டுகின்ற இருபெரிய நாடுகளாக மிளிர முடியும்.

உள்நாட்டில் துப்பாக்கிச் சட்டங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலமாகவும் சர்வதேச அரங்கில் ஆயுதவர்த்தகத்தை ஒழுங்கமைக்கக்கூடிய உலகளாவிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படுவதற்கு உதவுவதன் மூலமும் ஒபாமா அமெரிக்காவையும் உலகையும் பாதுகாப்பானதாக மாற்றிய ஜனாதிபதி என்ற பெயரைத் தனதாக்கிக் கொள்ள முடியும். கால நிலைமாற்றத்தினால் ஏற்படக் கூடிய அழிவுகளை நேரகாலத்துடன் தடுப்பதில் முன்னின்று செயற்பட்ட ஒரு அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையை ஒபாமா தனதாக்கிக் கொள்ளமுடியும். இதைச் சாதிப்பதற்கு அவருக்கு நான்கு வருடங்கள் இருக்கின்றன. இப்போதே ஆரம்பிக்க வேண்டும். செய்வாரா? ●

- குமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகம்

# தமிழ் சினிமாவில் மரணித்துவரும் கதாநாயகத்தனம்

மயூரா







**2004** ஆம் ஆண்டு முதல் தமிழ் சினிமாவில் கதாநாயகர் மையம் கொண்ட பெரும் செலவினப் படங்கள் தோல்வியடைவதும் சிறு முதலீட்டுப் படங்கள் பெரும் வெற்றிய டைவதும் ஒரு மாறு நிலைப்போக்காக உருவாகியுள் ளது. ஆனால் தமிழ்த்திரைப் படத்துறையைச் சேர்ந்த ஊடகவியலா ளர்கள் இந்த கதாநாயக மரணத்தை நம்ப மறுக்கிறார்கள். இன்னும் சிலர் இந்த உண்மையினை மறுத்து அஞ்சி கதாநாயகத்தனம் மீதான செல்வாக்கை மீள் நிலைநிறுத்த மலினமான பிரசார யுக்திகளை பயன்படுத்துகின்றனர்.

தமிழ் சினிமாவில் தற்போது ஒரு குறிப்பிட்ட வகையிலான கதாநாயகத்தனம் மரணமடைந்து வருகிறதென்பது உண்மைதான். இருப்பினும் தமிழ்ப்படத்தின் ஒட்டுமொத்தமான கதாநாயகத் தனம் மரணமடைந்துவிட்டது எனக்கூற முடியாது. இந்த யதார்த்த நிலைமையை நாம் அறிவுபூர்வமாகவும் கோட்பாட்டு நிலையிலும் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த ஆண்டு தமிழ்த்திரையுலக சூப்பர் ஸ்டார், வசூல் சக்கரவர்த்தி, வெற்றிப்பட நாயகன் அஜித், விஜய், சூர்யா, கார்த்தி, தனுஷ், சிம்பு என எவரும் அல்ல. அது

> கடந்த வருடம் தமிழ்த்திரையுலக சூப்பர் ஸ்டார், வசூல் சக்கரவர்த்தி வேறு யாருமல்ல ஒரு ஈ தான். நான் ஈ திரைப் படம் தான் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் அதிக வசூலைப் பெற்றுக்கொடுத்தது

வொரு ஈ தான். நான் ஈ திரைப் படம் தான் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் அதிக வசூலைப் பெற்றுக்கொடுத்தது.

இதைவிட சிறிய முதலீட்டுப் படங்கள் தான் வெற்றிப் படங்களாக ரசிகர்களால் கொண்டாடப் பட்டன. இந்தப் படக் கதாநாயகர்கள் முற்றிலும் புதியவர்கள். கதாநாயகத் தனம் எனும் ஒற்றைப் பரிமாணக் காட்சி மேலாதிக்கத்துக்கு உட்பட்டு இயங்காதவர்கள். இவர்கள் திரைக்கதையின் காட்சியமைப்புக்கு நேர்மையாக இயங்கியவர்கள். திரைப்படக் கட்டமைப்புக்கும் வாழ்வியல் எதார்த்தத்தில் முழுமையாக வாழ்ந்தவர்கள். பொதுப்பார்வையாளர்கள் மத்தியில் சினிமா ரசனையை மேலும் உயர்த்துவதற்கும் ரசிகர்களின் பார்வைக்கோணத்தை மாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுவதற்கும் உழைத்து வருபவர்கள். நாம் இந்த நடப்பு உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது.

சமகாலத்தில் தமிழ்த்திரைப்படத்தின் மூலக்கதைகள் இந்தியத் தேசியம் அல்லது அறிவியல் கண்டுபிடிப்புகள் அல்லது இஸ்லாமியப் பயங்கரவாதம் போன்றனவாகத் தான் உள்ளன. இக்கருத்தாக்கங்களைக் கொண்ட படங்களே வணிக ரீதியாக மிகப்பெரிய வெற்றியை அடைகின்றன. இவ்வாறான சினிமாச்சட்டகம் தமிழில் ஆழமாக வலுப்பெற்று வருகிறது. ஆனாலும் இந்த எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்கும் அடிவிழுவதுதான் சமீபத்திய தருக்க நியாயமாக உள்ளது. இதற்கான காரணங்களை, பின்புலங்களை திரைப்படத்துறையினர் இன்னும் முழுமையாக ஆராயத் தவறுகின்றனர்.


பொது மாதிரி கதாநாயகக் கருத்துடன் வெளிவரும் படங்கள் தமிழ் சினிமாவில் 1950 முதல் பெரும் போக்காகத்தான் உள்ளது. எம்.ஜி. ஆர் X சிவாஜி முதல் ரஜனி X கமல், அஜித் X விஜய், சூர்யா X விக்ரம், தனுஷ் X சிம்பு என இந்த மரபு தொடர்கிறது. ஆனால், இதுவரை கோலோச்சியது போல் கதாநாயகத் தனம் இனித் தொடர்வதற்கான சந்தர்ப்பம் உள்ளனவா என்பது இங்கு கேள்வி மட்டுமல்ல, புதிய மாற்றமாகவும் விடைகளை வேண்டுபவையாகவும் உள்ளன.

பெரும் முதலீட்டில் வணிக ரீதியில் வெற்றி பெறுவதற்கு பல்வேறு மாமூலான சூத்திரங்களைப் பின்பற்றும் மற்றும் போலச் செய்யும் முறைமை தான் தமிழ் சினிமாவின் பொது இலக்கணமாகவும் உள்ளது. கதாநாயகத்தனத்தை மட்டுமே நம்பி கதை திரைக்கதையைத் தொலைத்துவிடும் அவலமும் தொடர்கிறது. பெரும் நட்சத்திரங்களின் படங்கள் திரையிடுவதற்கு முன்பதாகவே மாபெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. உதாரணமாக பில்லா 2, மாற்றான், தாண்டவம், துப்பாக்கி, போடா போடி, முகமூடி போன்ற படங்களை இங்கு குறிப்பிடலாம். ஆனால், சமூகம் சார்ந்த யதார்த்தங்களை முன்னிறுத்தி சிறு முதலீட்டில் தயாரிக்கப்படும் படங்கள் மேற்குறித்த படங்களுடன் ஒப்பிட்டால் இவை வெற்றிப்படங்களே. அவ்வகையில் தற்போது பிட்சா, நடுவில சில பக்கத்தைக் காணோம் போன்ற படங்களை இங்கு குறிப்பிடலாம். இந்தப் படங்கள் வணிக ரீதியாக வெற்றிபெற்ற படங்களுக்கான நடத்தப்பட்ட அரசியல் விளையாட்டுகள் எதுவும் நடத்தப்படாமலேயே கதைக்காகவே பெரிய வெற்றியைக் கண்டுள்ளன.

தமிழ் சினிமாவிற்கு இப்போது ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பிரச்சினை வில்லனுக்கு என்ன பெயர் வைப்பதென்பது தான். முன்பு நடிகர்கள் விஜயகாந்த், அர்ஜுன் போன்றவர்கள் இஸ்லாமியர்களை பயங்கரவாதிகள் என்னும் பெயரில் வில்லன்களாக முன்னிறுத்தும் அரசியலை ஜனரஞ்சகப்படுத்தினர். இந்தப் போக்கு பின்வந்த நடிகர்களாலும் வெற்றிகரமாகப் பின்பற்றப்பட்டது. தற்போது தமிழ் சினிமாவில் வில்லத்தனம் என்பது இஸ்லாமிய அடையாளங்களுடன் மற்றும் பாகிஸ்தான், சீனா, முதலான நாடுகளின் இணையாகவும் மாற்றப்பட்டுள்ளது.

இன்று விஜய் நடித்து வெளிவந்துள்ள துப்பாக்கிப் படம் வெளிப்படுத்தும் அரசியல் மிக நுட்பமாக ஆராயப்பட வேண்டும். இந்திய தேசியம் மறு உருவாக்கம் பெறுவதற்கான தர்க்க நியாயம் கருத்தினை் திணிப்பாக மாறுகிறது. இதனை வித்தியாசமாக சொல்ல முயன்றதாக வெளிவந்துள்ள படம் தான் துப்பாக்கி. இப்படத்தின் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் ஸ்லீப்பர்செல்கள் என்ற ஒரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார். இந்தப் பெயர் சாதாரண மட்டத்தில் அச்சுறுத்தலுக்குள்ளாக மாற்றப்பட்டுள்ளது. இது பரபரப்பைத் தரும் விடயமாகவும் உள்ளது. இந்தப் படத்தில் செய்தி ஊடகங்கள் உருவாக்கும் மேலோட்டமான தகவல்களை. முன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஒரு சராசரி இஸ்லாமியர் மீது கட்டமைக்கப்படும் படிமங்கள், அடையாளப்படுத்தல்கள் மிகமோசமானவை. ஆனால், இந்துத்துவ சார்புகொண்ட இந்தியத் தேசியத்தின் பெயரால் இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்று தனியாக அடையாளப்படுத்தும் நுண்ணரசியலை இயக்குநர் மணிரத்தினம் சினிமாவை தொடக்கி வைக்க ஷங்கர், ஏர்.ஆ.முருகதாஸ் போன்ற இயக்குநர்கள் தம் பங்குக்கு இந்த நுண்ணரசியலைத் தொடருகின்றனர்.

தமிழ் சினிமாவில் ஸ்லீப்பர்செல் அரசியல் வணிக மயமாக்கப்படுகிறது. இதனை அடியொற்றிய போலச்செய்தல் பாணியில் நாம் இன்னும் சில படங்களை எதிர்பார்க்கலாம். தமிழில் மட்டுமல்ல இந்தி, தெலுங்கு, கன்னடம் முதலான மொழிப்படங்களிலும் நிச்சயம் இந்தப் போக்குத் தொடரப்போகிறது. தமிழ்ப் படங்களில் போலச்செய்தல் இன்னும் தொடர்ந்துகொண்டு தான் உள்ளது. உதாரணமாக தற்போது சாருலதா, மாற்றான், பிரதர்ஸ் (தெலுங்கு) போன்ற படங்களைக் கூறலாம். சாருலதா படத்தில் இரட்டையாக ஒட்டிப் பிறக்கும் பெண்குழந்தைகள். இது போல் மாற்றான் படத்தில் இரட்டையாக ஒட்டிப்பிறக்கும் ஆண்குழந்தைகள். சாருலதா, மாற்றான் இரண்டிலும் முறையே பெண் இரட்டையர், ஆண் இரட்டையர் என்ற மூலக்கதைகள் உள்ளது. சாருலதாவின் கதை இயக்கம் கதாநாயகியை முக்கியப்படுத்தவில்லை. கதைக்குள் கதாநாயகி இயங்குகிறாள். ஆனால், மாற்றானில் கதாநாயகனுக்காக கதை இயக்கப்படுகிறது. இதில் ஓர் உள்ளரசியல் உள்ளது. இதனை விட ஒரு போலி மருத்துவ வரலாறு கட்டமைக்கப்படுகிறது. சமூக அக்கறையும் இந்தியத் தேசியமும் போலியாக உருவாக்கப்படுகிறது.

பெரும் முதலீட்டுப்படங்கள் சில சமயம் வணிக ரீதியில் வெற்றிபெறுகின்றது. ஆனால் மிக மோசமான கருத்தியல் திணிப்பை மேற்கொள்கின்றன. உள்ளரசியல் சார்ந்து இயங்குகின்றனர். இதைவிட பெரும்பாலும் சில படங்கள் எதிர்பார்த்தளவு வணிகரீதியில் வெற்றிபெற முடியாத படங்களாக உள்ளன. இந்தப் போக்கு சமீபகாலங்களில் ஒரு பொதுப்போக்காக மாறிவருகிறது. இந்தப் பின்புலத்தில் தான் எந்தவித பரபரப்பும் எதிர்பார்ப்பும் மற்றும் உள்ளரசியலும் இல்லாமல் சிறு முதலீட்டில் உருவாகும் படங்கள் வெற்றி பெறுகின்றன. இந்தப் படங்களில் நடிக்கும் யாவரும் புதியவர்கள். கதாநாயகத்தனத்தின் திமிறல் அடிதடி எதுவுமில்லாமல் கதையின் பாத்திரங்களாக திரையில் வாழ்ந்துபோகின்றனர்.

உதாரணமாக பிட்சா படத்தின் கதை தமிழ்சினிமாவிற்கு முற்றிலும் மாறுபடுகின்றது. மாய எதார்த்தமான நாவலை முன்வைத்து கதை இயங்குகிறது. இத்தகைய கதை தமிழில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இக்கதையை யாரும் இதுவரை கையாளவில்லை. இப்படத்தின் மையப்பாத்திரமான கதாநாயகி ஒரு மாய எதார்த்தவாத நாவலை எழுதிக்கொண்டிருக்கிறாள். அவள் எழுதும் நாவலைப் படித்து கதாநாயகன் கேலி செய்கிறான். ஒரு நாள் என்னுடைய நாவல் பல இலட்சம் ரூபாவுக்கு விற்கப்படும் பார் என்று கூறுகிறாள். இவ்வாறு கதை ஆரம்பிக்கிறது. ஒரு நாள் முதலாளி ஒரு பாசலை தன் வீட்டுக்குக்கொடுக்கும் படி கதாநாயகனிடம் சொல்கிறான். அந்தப் பாசலில் என்ன இருக்கிறது என்று அவனுக்கு தெரியாது. ஒரு விபத்துக் காரணமாக உடைமாற்ற வீட்டுக்கு வருகிறான். கதாநாயகியிடம் பையில் உள்ளவற்றை சரியாக எடுத்துவைக்குமாறு சொல்லிவிட்டு குளிக்கச் செல்கிறான். பாசலில் உள்ளதைக் கண்டு அவள் வியக்கிறாள். அதில் வைரம் உள்ளது. இருவரும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டுகிறார்கள். அண்மைக் காலங்களில் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளையும் தன் நாவலின் மூலக்கதையையும் இணைத்து படத்துக்குள் இன்னொரு கதை இயங்குகிறது. அந்தக் கதையின் நடிப்புத் தான் முன்கதையின் நடிப்பைக்காட்டிலும் சிறப்பாக உள்ளது. கதைக்குள் இன்னொரு கதை இயங்குவது கதைக்கு வலுச்சேர்க்கிறது. நடிப்பு எந்திரத்தனமாக இல்லாமல் இயல்பாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. படத்தின் முடிவில், தான் நாயகன் ஒரு தொலைபேசியின் அழைப்பின் மூலம் திரைப்படத்தில் இதுவரை நடந்தது வெறும் நடிப்பு என்று பார்வையாளர்களை வியப்பூட்டுகிறார். இந்தப் படத்தில் கதைக்குச் சம்பந்தப்படாத எந்தக் காட்சியும் சேர்க்கப்படவில்லை. இப்படம் முழுமையாக செதுக்கப்பட்ட சிற்பம் போல் படத்தின் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை ஓர் ஒழுங்கும் ஒழுங்கின்மையும் கலந்த பின் நவீனத்துவ பாணியில் படம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கதையம்சம் கொண்ட படங்கள் வரும்போது தான் தமிழில் ஹீரோயிசம் அல்லது கதாநாயகத்தனம் அழிக்கப்பட்டு நல்ல கதைகளைக் கொண்ட படம் வெற்றிபெறும். இந்தப் பாதை தமிழ்த் திரைப்படச்சூழலில் தற்போது தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இன்று தமிழில் வெளிவந்து வித்தியாசமான படங்கள் என்று கொண்டாடப்படும் படங்களை கவனத்தில் கொள்வது முக்கியம். பாலை, வெங்காயம், கழுகு, மதுபானக்கடை, பச்சை (எ) காத்தமுத்து, அட்டக்கத்தி, பூச்சூடவா, நீர்ப்பறவை, வழக்கு எண்18/9 முதலான படங்கள் சமீபத்தில் கதாநாயகத்தனத்தை மரணிக்கச் செய்து உருவாகி வருபவை. இப்படங்களில் வெளிப்படும் எதார்த்தத்தை இனவரைவியல் எதார்த்தம் என்று அழைக்கலாம். எப்படியிருப்பினும் தற்போது தமிழ் சினிமாவில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்களை, வளர்ச்சிகளை நாம் அறிவுபூர்வமாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கான முயற்சியில் நாம் ஈடுபடும் போது இந்தக் கட்டுரை மீள் உருவாக்கமாக புதிய மொழிநடையில் எழுதப்படக் கூடியதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Cricket

விளையாட்டு

# புதிய தெரிவுக்குழு சாதிக்கப் போவது என்ன?



ரி.எஸ்.கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கிரிக்கெட் அணி சர்வதேசப் போட்டிகளில் தள்ளாடுகிறது. டெஸ்ட் சர்வதேச ஒரு நாள், தற்போதைய "ருவென்ரி-20" ஜாம்பவான்களென கருதப்பட்ட இலங்கை அணியின் ஆட்டத்திறன் தளம்பத் தொடங்கிவிட்டது. காலச் சக்கரம் சுழல்வது போல் கிரிக்கெட் அணிகளின் திறமைகளிலும் மாறுபாடு இருந்தாலும் இலங்கை அணி குறித்து ஏனைய நாட்டு அணிகளுக்கு என்றுமே ஒரு அச்சமுள்ளது. இலங்கையுடனான போட்டிகளில் சர்வதேச அணிகள் ஆடும்போது ஏனைய அணிகளைப் போலன்றி மிகுந்த அவதானம் செலுத்துவது இயல்பே. ஆனால், இன்று இலங்கை அணியின் ஆட்டத்திறன் மட்டுமன்றி அணித் தெரிவும் பிரச்சினைக்குரியதாகிவிட்டது.

அவுஸ்திரேலிய மண்ணில் அந்நாட்டு அணியுடனான டெஸ்ட் தோல்வி இலங்கை அணிக்கு பெரும் பின்னடைவாகும். டெஸ்ட் தொடரை மோசமாக இழந்த இலங்கை அணி சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடரில் நன்கு பிரகாசித்ததுடன், ருவென்ரி-20 தொடரை தனதாக்கியது. டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட மிகமோசமான தோல்விக்கு இவ்விரு தொடரும் பதிலடியாக இருந்தாலும் டெஸ்ட் தோல்வியானது இலங்கை அணியில், அணித்தேர்வுக்குழுவில் மாற்றங்கள் தேவையென்ற கட்டாயத்தை வலியுறுத்தவே விளையாட்டுத்துறை அமைச்சு சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. கிரிக்கெட் விளையாடும் ஏனைய நாடுகளின் அணிகளின் நிர்வாகங்களைப் போலன்றி இலங்கை கிரிக்கெட்டில் அரசின் தலையீடு மிகவும் அதிகம். இலங்கை அரசியலைப் போன்றே அரசுத் தலைமை கிரிக்கெட்டிலும் வெற்றிகளைப் பெற வேண்டுமெனத் துடிக்கிறது. அரசியலமைப்பில் மாற்றங்களை மேற்கொண்டு அவ்வப்போது நாட்டையே கலங்கடிக்கும் அரசுக்கு கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டாகவே உள்ளது. அதனால்தான் தோல்வியென்பதற்குப் பதிலாக வெற்றியை பெற்றுத்தரக் கூடிய அணியொன்றே எப்போதும் கிரிக்கெட் விளையாட வேண்டுமெனக் கருதுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையானது (ஐ.சி.சி.) கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் அணிகள் சுயாதீன அமைப்புகளின் மூலமே கட்டுப்படுத்தப்படவேண்டுமென வலியுறுத்துகிறது. கிரிக்கெட்டில் அரசியல் தலையீட்டை ஐ.சி.சி. ஒருபோதும் அனுமதிப்பதில்லை. சம்பந்தப்பட்ட நாட்டு அணிகளை அரசியல் சார்ந்தோர் கட்டுப்படுத்துவதையும் ஐ.சி.சி. ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கேற்பவே ஐ.சி.சி.யின் சட்டதிட்டங்களும் அமையும். இதை மீறும் நாடுகளை ஐ.சி.சி. தனது அமைப்பிலிருந்து தூக்கியெறியவும் தயங்குவதில்லை. இதற்கு கடந்த கால வரலாறுகள் சிறந்த உதாரணமாகும். இதனை அனைத்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டு அணிகளும் அறியும்.

இதனை சாட்டாக வைத்தே இலங்கை அரசும் விளையாட்டுத்துறையில் நிலைமைகளை மாற்றியமைத்தது. இலங்கையைப் பொறுத்த வரையில் விளையாட்டுத்துறையில் கிரிக்கெட் மட்டுமே உச்ச நிலையில் பிரகாசிக்கிறது. 1996ஆம் ஆண்டு வரை உலகில் இலங்கை கிரிக்கெட் அணி குறித்து பெரிய எதிர்பார்ப்பு எதுவும் நிலவவில்லை. ஆனால், 1996 இல் அர்ஜுனா ரணதுங்கா தலைமையிலான இலங்கை அணி, கிரிக்கெட் சரித்திரத்தையே மாற்றியமைத்தது. இலங்கை அணியின் இந்த சாதனைக்கு அந்த அணியின் சகலதுறை வீரராயிருந்த சனத் ஜெயசூரியவின் பங்களிப்பு மிகமிக முக்கியமாயிருந்தது. 50 ஓவர் கிரிக்கெட்டை இப்படித்தான் ஆட வேண்டுமென இலங்கை அணி கிரிக்கெட் உலகிற்கு பாடம் நடத்தியது. அப்போதைய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூரிய மற்றும் ருமேஷ் களுவிதாரணவின் ஆட்டம் குறித்து இப்போதும் பேசப்படுகிறது.

சர்வதேச ரீதியில் அர்ஜுனா தலைமையிலான இலங்கை அணி வரலாறு படைத்தது. அது கிரிக்கெட் வரலாற்றில் பொற்காலமாகவே கருதப்படுகிறது. அன்றிருந்த இலங்கை அணியின் பெருமையை இன்று எவராலுமே தூக்கி நிறுத்த முடியவில்லை. அன்றிருந்த அணிபோல் இன்றும் இலங்கை அணியை மாற்றி விட வேண்டுமென இலங்கை அரசு கருதுகிறது. என்ன விலை கொடுத்தாவது அணியின் தரத்தை மீண்டும் உயர்த்திட விளையாட்டுத்துறை அமைச்சு சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1996க்குப் பின்னர் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இலங்கை அணி இரு தடவைகள் இறுதியாட்டத்திற்கு வந்த போதிலும் இரண்டிலும் தோல்வியைத் தழுவியது. இந்தத் தோல்விகள் இலங்கை அணிக்கு மட்டுமல்ல ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றமாக அமைந்தது. இதனால்தான் அன்றிருந்த அணிபோல் இன்றைய அணியையும் மாற்றியே ஆக வேண்டுமென அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. அதற்கு எது தேவையென்றாலும் செய்ய அரசு தயாராகவே உள்ளது. ஏனைய துறைகளைப் போல் விளையாட்டுத் துறையிலும் தலையிட அரசு முடிவு செய்து விட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை கிரிக்கெட் தெரிந்த ஜாம்பவான்கள் பலர் அரசியலில் உள்ளனர். அவர்கள் ஆளும் கட்சியிலும் சரி எதிர்க் கட்சியிலும் சரி முக்கிய இடங்களை வகிக்கின்றனர். ஒரு கட்டத்தில், அரசின் கட்டுப்பாட்டையும் மீறி இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகத்தை அரசியல் செல்வாக்குமிக்கோர் கைப்பற்றி விடலாமென்ற அச்சம் அரசுக்கு நிலவியது. இதையடுத்து, இலங்கை கிரிக்கெட்டில் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவோர் ஈடுபட முடியாதென்று சட்டத்திருத்தங்களை கொண்டு வந்தது. இதனால் இலங்கை கிரிக்கெட்டில் செல்வாக்கு படைத்த ஆனால் தீவிர அரசியலில் ஈடுபட்ட பலரால் இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. சர்வதேச கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இலங்கை மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் தான் அரசியல் தலையீடு மிகவும் அதிகம். இவ்விரு நாட்டு கிரிக்கெட் சபைகளையும் அந்தந்த நாட்டு அரசுகள் நேரடியாகவே கட்டுப்படுத்துகின்றன. இதனால்தான் இவ்விரு நாட்டு கிரிக்கெட் சபைகளின் நிர்வாகக் குழுக்கள் அடிக்கடி மாற்றப்படுவதுடன் அணித் தலைவர்களது பதவிகளும் நிலையற்றதாகவேயுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் தான் இலங்கையில் ஏனைய அனைத்து துறைகளையும் தங்கள் வலிமையால் முழுமையாகக் கட்டுப்படுத்துவதைப் போல் விளையாட்டுத்துறையையும் குறிப்பாக கிரிக்கெட்டையும் கட்டுப்படுத்த அரசு முனைந்துள்ளது. இதற்கேற்ப, தான் போட்ட சட்டங்களை 'தானே, மீறி ஆளும் தரப்பின் கட்டுப்பாட்டினுள் இலங்கை கிரிக்கெட் சபையையும் அரசு இன்று கொண்டுவந்துள்ளது அரசுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆளும் தரப்பில் முன்னாள் ஜாம்பவான் சனத் ஜெயசூரியா அங்கம் வகிப்பது கிரிக்கெட் சபையினுள் அவரது வருகையை எவருமே எதிர்க்கப்போவதில்லை. 1996 இல் இலங்கைக்கு உலகக் கிண்ணம் கிடைப்பதில் மிக முக்கிய பங்கு வகித்ததுடன் சனத் ஜயசூரிய சிறந்ததொரு வீரர் என்பதால் அவர்பால் மக்கள் மத்தியில் நன்மதிப்புமுள்ளது.

இதுவரை இருந்த தேர்வுக்குழுவை அடியோடு மாற்றி சனத் ஜெயசூரிய தலைமையில் ஐவர் கொண்ட தேர்வுக்குழுவொன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மூலம் அரசு அமைத்துள்ளது. இதில் அமைச்சரின் விருப்பு வெறுப்புக்கு அப்பால் ஜனாதிபதியின் நேரடித் தலையீடு இருந்துள்ளது. ஜனாதிபதியின் புதல்வரும் சனத் ஜெயசூரியவின் நெருங்கிய நண்பனுமான நாமல் ராஜபக்ஷவின் சிபார்சின் பேரில் சனத் ஜெயசூரிய தேர்வுக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆளும் தரப்பு எம்.பி. ஒருவரை அரசு கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவராக நியமித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி முதலில் இதனை எதிர்த்த போதும் பின்னர் இந்த விடயத்தில் தீவிரம் காட்டவில்லை. இது அரசுக்கு வாய்ப்பான அதேநேரம் எதிரணியின் வாயை மூடும் முயற்சியிலும் ஈடுபட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினரும் அக்கட்சியின் அவிசாவளை அமைப்பாளருமான ஹசான் திலகரட்னவை திடீரென தேர்வுக்குழு உறுப்பினர்களில் ஒருவராக நியமித்தது. அவரும் இப்பதவியை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார். இதையடுத்து தேசிய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு குறித்த விமர்சனத்தை ஐ.தே.க கைவிட்டுள்ளது. அதேநேரம் முன்னைய தேர்வுக்குழுவுக்கு பதிலாக தற்போது தேர்வுக் குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் சிறந்த வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தற்போது ஐவரடங்கிய தேர்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதில் மூவர் 1996 இல் இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர்கள். ஏனைய இருவரும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அவ்வளவாக பிரகாசிக்காவிட்டாலும் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் பெரிதும் திறமையைக் காட்டியவர்கள். இதனால் ரசிகர்கள் மத்தியில் புதிய தேர்வுக்குழு குறித்து மோசமான அபிப்பிராயமில்லை.

எனினும், புதிய தேர்வுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரியவுக்கும் இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்களுக்குமிடையிலான உறவுநிலை அவ்வளவு சுமுகமாயில்லையெனக் கூறப்படுகிறது. புதிய தேர்வுக்குழு, சிரேஷ்ட வீரர்களை பழிவாங்க முயலாமென ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன. சனத் ஜெயசூரிய இலங்கை அணியிலிருந்து வெளியேறுவதற்கு இவர்கள் காரணமாயிருந்தார்களெனக் கூறப்படுவதால் அதனை மனதில் வைத்து சனத் இவர்களைப் பழிவாங்கக் கூடுமென்ற விமர்சனம் எழுந்துள்ளது. தேர்வுக்குழுத் தலைவராக சனத் ஜெயசூரிய நியமிக்கப்பட முன்பும் தேர்வுக்குழு அடியோடு மாற்றப்படுவதற்கு முன்பும் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே அணித் தேர்வுக் குழுவையும் அணியின் சிரேஷ்ட வீரர்களையும் மிகக் கடுமையாக விமர்சித்து வந்தார். பாடசாலை அணியைக்கூட தேர்வு செய்வதற்கு லாயக்கற்றவர்கள் என்று தேர்வுக் குழுவை கடுமையாகச் சாடிய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே சில வீரர்கள் அணியில் ஏகபோக உரிமை கொண்டாடுவதாகவும் மிகத் திறமை வாய்ந்த இளம் வீரர்கள் அணியில் வர இந்த சிரேஷ்ட வீரர்கள் பெரும் தடையாக இருப்பதாகவும் கடுமையாக விமர்சித்ததன் மூலம் குமார் சங்கக்காரா, மஹேல ஜெயவர்தன, திலகரட்ன டில்ஷான் போன்றோரின் எதிர்காலம் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

ஆனால், இந்த மூன்று சிரேஷ்ட வீரர்களதும் பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் அணியின் சொத்தெனவும் அவர்கள் அணியில் இருப்பது அவசியமெனவும் கூறிவரும் பிரதம தேர்வாளரான சனத் ஜெயசூரிய நாட்டை மையமாக வைத்தே அனைவரும் விளையாட வேண்டுமெனவும் தனிமனித ஏகபோகத்திற்கு இடமில்லையெனவும் அடிமட்டத்திலிருந்து வீரர்கள் இனங்காணப்பட்டு அணியில் சேர்க்கப்படுவார்களெனவும் கூறியுள்ளதுடன் திறமையான வீரர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய அணியில் இடம்பெற முடியாது போகும் நிலை மாற்றியமைக்கப்படுமெனவும் கூறியுள்ளார். தங்கள் காலத்திலிருந்தது போல் அணியை முதல் நிலைக்குக் கொண்டு செல்வதே தங்கள் குறிக்கோளெனவும் கூறியுள்ளார். இதற்காக அவர் முன்னாள் ஜாம்பவான்களான முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்த வாஸின் உதவியையும் நாடியுள்ளார். பந்து வீச்சில் இவர்களது வழிகாட்டல் மிகவும் முக்கியமானது. இவர்களது வரவு அணிக்கு பெரும் தென்பூட்டுமென்பதில் ஐயமில்லை. 1996 இல் உலகக் கிண்ணத்திற்கு புதிய வரலாற்றை எழுதியவர் சனத் ஜெயசூரிய. ஆனால், இன்று அவ்வாறானதொரு நிலையில்லை. இதனை அவர் புரிந்து கொண்டிருப்பார். சிரேஷ்ட வீரர்களை எவ்வாறு கையாள்வதென்பது சிக்கலான தொன்றாகும். அதேநேரம் அணித்தலைவர் தேர்வென்பதும் இன்று பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

டெஸ்ட் போட்டிகளின் மவுசு குறைந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளின் நிலை இரண்டும் கெட்டானாகி ருவென்ரி -20 குறித்தே பேசப்படும் நிலையில் இலங்கையில் இந்த மூன்று நிலைகளிலும் சிறந்த அணிகளைத் தெரிவு செய்ய வேண்டிய மிகப் பெரும் பொறுப்பு சனத் ஜெயசூரியவுக்கு உள்ளது. ஆளும் தரப்பு எம்.பி. என்பதால் இவரது தவறுகள் பெரிதுபடுத்தப்படலாம். முன்னாள் ஜாம்பவான் என்பதால் இவரது முயற்சிகளுக்கு ரசிகர்களின் வரவேற்புமிருக்கும். இவ்வாறானதொரு நிலையில் இலங்கை கிரிக்கெட்டில் சனத் ஜெயசூரியவால் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்ற கேள்விக்கு காலம் தான் பதில் கூற வேண்டும். ●

*(கடைசிப்பக்கத் தொடர்ச்சி...)*

தெரியாமலல்ல, தெரிந்துதான் செய்கின்றார்கள். அதனைத் தெரிந்தும் நாம் தான் தெரியாதவர்கள்போல் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கின்றோம்.

மதவழிபாடுகளுக்குக் குந்தகம் செய்வதற்கும், முஸ்லிம்களின் பொருளாதாரத்தை முடக்குவதற்காகவும் திட்டமிட்டுச் செய்யப்படும் செயற்பாடுகளே இவையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக சர்வதேச இஸ்லாமியரின் மனத்தை நோகடிக்கச் செய்யும் வகையில் அல்லாஹ் என்ற அரபுப்பதம் பதித்த பதாகை கொண்ட ஒரு கொடும்பாவியை எரித்திருப்பதோடு, பன்றியின் உருவத்தில் அல்லாஹ் என அரபு மொழியில் பெயர்பதித்த பதாகைகளையும் குளியாப்பிட்டிய என்ற கிராமத்தில் ஏந்தி ஊர்வலஞ் சென்றுள்ளனர். இது தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தியாகும்.

முஸ்லிம்களின் திருமண விடயத்திலும் தலையீடு செய்யும் இவர்கள் எதிர்காலத்தில் குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கும் கறுப்புக்கொடி காட்டுவதும் சாத்தியமாகலாம்.

இதற்குத் தீர்வுகாண மதரீதியாகப் பலபடப் பிரிந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுவதுடன், இஸ்லாமிய அரசியல் தலைமைகளும் ஒன்றுபட வேண்டும். தத்தமது இருக்கைகளைத் தக்க வைத்துக்கொள்ளும் காரணியொன்றுக்காக வாளாதிருக்காது, அரசியலில் தங்களை நம்பியிருக்கும் மக்களுக்காக ஒன்றித்துக் குரல்கொடுக்க வேண்டும். மதரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தனித்தனி பிரிந்து முயற்சிப்பதால் வெறும் வாக்குறுதிகளே எஞ்சும். பலன் பூஜ்யமே. இரண்டும் ஒன்றானால் ஏதேனும் நன்மை விளையக் கூடும் என எதிர்பார்க்கலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# திட்டமிட்ட செயற்பாடுகளும் தரப்பெறும் வாக்குறுதிகளும்

'முஸ்லிம்கள் மீதான கடும்போக் காளர்களின் குற்றச்சாட்டுகள். பாராளு மன்றத் தெரிவுக்குழு அமைக்க ஜனாதி பதி முடிவு. முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பி.க்களுடனான சந்திப்பில் ஜனாதி பதி தெரிவிப்பு' மேற்கண்ட அறிவிப்பு அண்மையில் பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சிகளிலும் தெரிவிக்கப்பட்டதாகும்.

நாட்டின் பல பாகங்களிலும் இன்று நடைபெற்றுவரும் இஸ்லாத்துக்கு எதி ரான பெரும்பான்மை இனத்தின் ஒரு சிறு குழுவினரால் நடத்தப்பெற்று வரும் வன்முறை பற்றிய முறைப்பாடு களுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர் களின் மேற்கொள்வதான வாக்குறு தியே இது.

முப்பது வருடகால யுத்தத்தின்பின் ஓரளவு அமைதி ஏற்பட்ட சூழ்நிலை யில், மற்றுமொரு சிறுபான்மை இனத் தின் மீது 'பொதுபல சேனா' போன்ற கடும்போக்கு பௌத்த அமைப்புகளி னால் கட்டவிழ்க்கப்பெற்றுள்ள வன் முறை நாடறியப்பட்டதாகும்.

நாடளாவிய ரீதியில் பரவிவரும் இந் நச்சுச் செயற்பாட்டை ஆரம்பத்தில் கண்டுங் காணாதநிலையில் இருந்த பின்னர், முளையூன்றியதும் இடையி டையே தவிர்ப்பது போன்றதான வாக் குறுதிகளை தலைமைகள் கொடுத்து வந்தன. இருந்தும் அச்சுறுத்தும் அச் செயற்பாடுகள் தொடரவே செய்தன.

முளையிலேயே கிள்ளியெறியும் வாய்ப்பினைத் தவறவிட்டபின் இன்று மீண்டும் வாக்குறுதிகள் தரப்படுகின் றன. முஸ்லிம் தலைமைத்துவங்களும் இதுபற்றி ஆரம்பத்தில் கண்டுகொள் ளாதிருந்ததோடு, சிலர் பள்ளிவாசல்கள் தகர்க்கப்பட்டும் அப்படியொன்றும் நடக்கவில்லையென்றும் பேசிவந்த னர்.

இன்று விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் தரப்படும் உத்தரவாதங் களும் செயலுருப்பெறும் என்பதிலும் நம்பிக்கை இழக்க வேண்டியுள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டில் முஸ்லிம்கள் தொன்றுதொட்டு நாட் டுக்கு விசுவாசமாகவே வாழ்ந்துள்ள னர் என்பது வரலாறு. இந்நிலையில் உலகளாவிய ரீதியில் இஸ்லாத்தின் துரித வளர்ச்சிகண்டு ஐயுறும் பேரின வாதச் சக்திகள் அதனை அடக்கிவிட முயலும் வன்முறைச் செயற்பாடுகளே பள்ளிவாசல்களைத் தாக்குவதும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கை களுமாகும்.



ஜின்னா ஷரீபுத்தீன்

சில பௌத்தமதப் போதகர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் இச் செயற்பாடுகளுக்கு அரசியற் தலைமை களே காரணம் எனச் சில அரசியல்வா திகளும், பத்தேகம சமிந்த தேரர் போன்ற அமைதியை நேசிக்கும் நாட்டு நலம்விரும்பிகளும் ஹெல உரும யவும், பொதுபல சேனாவும் காரணமெ னக் குற்றஞ்சாட்டுகின்றனர். சிலர் நாட்டு மக்களின் புலன்திருப்பச் செய் யப்பெறும் உத்தியும் என்கின்றனர். இருப்பினும் இதற்கு மேலாக வெளி நாட்டு நாசகார சக்திகளின் தூண்டு தலும் ஒரு காரணமெனும் ஐயப்பாடும் நிலவுகின்றது.

இஸ்லாத்தின் மீதும் அதன் மார்க்கச் சட்டங்கள் மீதும் வீசப்படும் பழிச்சேற் றுக்கும், முஸ்லிம்கள் மீது கொள்ளப் படும் வன்முறைகளுக்கும் சொல்லப் பெறும் காரணிகள் பொருத்தமற்றவை என்பது புத்திஜீவிகளுக்குப் புரியாத தல்ல. யாருமே நிர்ப்பந்திக்காத நிலை யில் ஹலால் உணவுகளை உண்ண மாட்டோம் என்பதும், இஸ்லாமியரின் பாதுகாப்புக்காக வழங்கப்பெறும் ஹலால் சான்றிதழைத் தடைசெய்ய வேண்டுமென்பதும், முஸ்லிம் வியா பார நிலைகளை முற்றுகையிட்டுக் கோஷிப்பதும் இது போன்ற வேறு பல வும் அவ்வினத்தின் மீதுகொண்ட காழ்ப்புணர்வாலன்றி வேறில்லை. முஸ்லிம்களின் விற்பனை நிலையங்க ளில் பொருட்களை வாங்கக் கூடாது, ஹலால் உணவுவகைகளைக் கொள்வ னவு செய்ய வேண்டாமெனத் துண்டுப் பிரசுரங்கள் வேறு விநியோகிக்கப்படு கின்றனவாம். இதனால் பாதிக்கப்படு வது இருபுறத்துமே.

முஸ்லிம் பெண்களின் உடை விட யத்தையும் இவர்கள் விட்டுவைக்க வில்லை. பிறரின் மனத்தை ஈர்க்கும் உடையணியாது தம்மை முற்றாக மறைத்துக் கொள்ளும் ஆடைகளை அணியும் முஸ்லிம் பெண்களின் தோற் றத்தைக் கொச்சைப்படுத்தும் விமர்ச னங்களையும் சாதுக்கள் மொழிவது வருந்தத்தக்கது. தவிரவும் இது உடை சம்பந்தப்பட்டவகையில் பிறரின் சுதந் திரத்திலும் தலையிடுவதாகும்.

வணக்கத்தலங்கள் அமைதியான வழிபாட்டுக்குரியன. அவற்றைத் தீவிர வாதிகளின் 'பங்கர்கள்' என வருணிப் பது எத்தனை கேடுகெட்ட சோடனை!. புரியாமற் செய்கின்றார்கள். புரியச்செ ய்யப் பேச்சுவார்த்தை செய்ய வேண்டு மென்பது பலனில்லா முயற்சிதான்.

(63ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd.at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org